
# நிழலே
# நிஜமானால்



இன்பா அலோசியஸ்


நிழலே
நிஜமானால்
இன்பா அலோசியஸ்

http://www.pustaka.co.in

# நிழலே... நிஜமானால்...

## Nizhale... Nijamanal...

Author:

இன்பா அலோசியஸ்

**Infaa Alocious**

For more books

http://www.pustaka.co.in/home/author/infaa-alocious-novels

**Digital/Electronic Copyright © by Pustaka Digital Media Pvt. Ltd.**

**All other copyright © by Author.**

All rights reserved. This book or any portion thereof may not be reproduced or used in any manner whatsoever without the express written permission of the publisher except for the use of brief quotations in a book review.

பொருளடக்கம்

நிழல் – 1
நிழல் – 2
நிழல் – 3
நிழல் – 4
நிழல் – 5
நிழல் – 6
நிழல் – 7
நிழல் – 8
நிழல் – 9
நிழல் – 10
நிழல் – 11
நிழல் – 12
நிழல் – 13
நிழல் – 14
நிழல் – 15
நிழல் – 16
நிழல் – 17
நிழல் – 18
நிழல் – 19

நிழல் – 20

# நிழல் – 1

ஊரே உறங்கிக் கொண்டிருக்கும் அந்த ஏகாந்த நேரம். சென்னைக்கு மத்தியில், பெரும் அமைதியில் நிறைந்திருந்தது அந்த பகுதி. கூர்க்கா ஊதிச்சென்ற விசிலின் சத்தம் திடுமென அந்த பகுதியின் அமைதியை கலைக்க, அங்கே இருந்த தெரு நாய்கள் திசைக்கொன்றாய் சிதறி ஓடியது.

அதைப்பற்றியெல்லாம் கொஞ்சமும் கவலைப்படாமல், கடமையே கண்ணாக அந்த தெருவில் உலவிக் கொண்டிருந்தார் அந்த கூர்க்கா. அந்த மார்கழி மாதத்தின் குளிரை விரட்ட, கழுத்தைச் சுற்றி சிறிய மப்ளர் இருக்க, அவரது வாயில் சிகரட் புகைந்து கொண்டிருந்தது.

நிகோட்டின் புகையினை லங்க்ஸ் முழுக்க உள்ளிழுத்து, புகையினை வாய், மூக்கு வழியாக வெளியேற்றியவர் புகையைக் கக்கியவாறே கடந்து சென்று கொண்டிருந்தார். அவரது செருப்பு சத்தம் கூட அந்த இருட்டில் சரக் சரக்கென ஒலியெழுப்ப, தன் வேலையை கச்சிதமாக செய்து கொண்டிருந்தான்.

அந்த நேரம், ஆழ்ந்த நித்திரைக்குள் அமிழ்ந்து கிடந்தாள் ஆனந்தி. இப்பொழுது அவளைப் பார்த்தால், சிப்பி இமைகள் மூடியிருக்க, சிவந்த அதரங்கள் சற்றே அழுத்தமாக மூடி, கலைந்த கரும் கூந்தல் படுக்கையில் படர்ந்திருக்க, தோகை மயில்போல் இருந்தாள்.

உறக்கத்தில் கூட பிரம்மன் செதுக்கிய சிலையென படுத்துக் கிடந்தாள். திடுமென அவளது முகத்தில் பெரும் மாற்றம். இமைகள் சுருங்க, தலை தன்போக்கில் மெதுவாக இங்கும் அங்கும் அசைய, முகம் முழுக்க சட்டென பூத்த வியர்வை முத்துக்கள் அவள் முகத்தை அலங்கரித்தது.

கரங்கள் இரண்டும் படுக்கை விரிப்பை இறுக பற்றிக்கொள்ள, எதில் இருந்தோ போராடி தப்பிக்க

முயன்று கொண்டிருந்தாள். அந்த இருட்டை கிழித்துக்கொண்டு ஒலித்த விசிலின் சத்தம் அவளை வந்து தீண்டியதாக தெரியவில்லை.

சரியாக அவளது வீட்டு கேட்டை நெருங்கிய கூர்க்கா, தன்னை மீறி அழுத்தமாக விசில் ஊத, அவனது பார்வையோ ஆனந்தியின் அறை ஜன்னல் கதவுகளில் நிலைத்து இருந்தது. கூடவே அவனது இதழ்களில் மெல்லிய சிரிப்பு உதயமாக, பார்வையோ அவள் அறையை வெறித்தது.

சட்டென அவள் காதுக்குள் ஒரு குரல்... ‘ஆனந்தவல்லி... ஆனந்தவல்லி...’ ஆதூரமாக அவளை அழைக்கும் ஒலி கேட்க, புருவம் சுருக்கி, தலை அசைத்து அந்த குரலை தன் நினைவடுக்குகளில் அலசினாள். இதற்கு முன்னர் அந்த குரலை நேரில் கேட்டதாக அவளுக்கு நினைவில்லை.

ஆனால் அந்த குரலில் இருந்த அழுத்தம், அது அவளை என்னவோ செய்தது. அந்த குரலை தவிர்க்க நினைத்தாலும் அது அவளால் முடியவில்லை. அவளை மீறி, அவள் அசட்டையை மீறி அந்த குரல் அவளை கட்டிப் போட்டது.

அவளது போராட்டம் தொடர, அவளை அவளால் நிதானத்துக்கு கொண்டுவர முடியவில்லை.

முதலில் மிகவும் மென்மையாக ஒலித்த அந்த குரல், நேரம் செல்லச் செல்ல உச்ச டெசிபலில் ஒலிக்க, பட்டென கண் திறந்தவள், நொடியில் படுக்கையில் எழுந்து அமர்ந்து விட்டாள். நாவு தாகத்தில் தவிக்க, அருகில் இருந்த வாட்டர் கேனில் இருந்த தண்ணீரை எடுத்து மடமடவென குடித்தாள்.

ஏசியின் குளிரையும் மீறி வியர்த்திருக்க, புறங்கையால் தன் நெற்றியில் வழிந்த வியர்வையை வழித்து எறிந்தாள்.

தன் அறையைச் சுற்றி பார்வையை செலுத்த, பக்கத்து படுக்கையில் போர்வைக்குள் சுருண்டிருந்தாள் அவளது தங்கை அம்மு. கெட்டதிலும் ஒரு நல்ல விஷயமாக, இவ்வளவு போராட்டத்திலும் தான் குரல் எழுப்பி கத்தாதது ஆசுவாசமாக இருந்தது.

அப்படி எதையாவது செய்திருந்தால் நிச்சயம் அவளது தங்கை பயந்து போயிருப்பாள். அதை எண்ணி பெருமூச்சு விட்டாள். இதே குரல் அவளுக்கு அடிக்கடி கேட்கிறது. முன்னர் எப்பொழுதாவது ஒருமுறை வந்த கனவு, குரல் இப்பொழுதெல்லாம் தொடர்ந்து கேட்கும் உணர்வு.

அதை கனவு என ஒதுக்கவும் முடியாமல், நிஜம் என நம்பவும் முடியாமல் திணறிக் கொண்டிருந்தாள் என்றுதான் சொல்லலாம். தேகத்தின் முடிகள் அனைத்தும் சிலிர்த்து நிற்க, அந்த குரல் இன்னுமே தன் காதுக்குள் ஒலிக்கும் உணர்வு.

அதுவும் அந்த குரலை கேட்கும் பொழுதெல்லாம் அடிவயிற்றில் கிளர்ந்தெழும் ஒருவித உணர்வு. அதை தவிர்க்கவும் முடியாமல் தடுக்கவும் முடியாமல் போராடிக் கொண்டிருந்தாள். இந்த விஷயத்தை வீட்டில் இருக்கும் தன் பெற்றவர்களிடம் கூட அவளால் பகிர்ந்து கொள்ள முடியவில்லை.

ஏற்கனவே ஒருமுறை சொல்லி, அவளது தாய் அவளைப் போட்டு படுத்திய பாடு கொஞ்சம் நஞ்சமில்லை. கோயிலுக்கு அவளை கூட்டிச் சென்று மந்திரித்தது முதல், கை, கழுத்து, இடுப்பு என தாயத்துக்களால் அவளை அலங்கரித்தது வரைக்கும் நடந்தது.

தாயின் இந்த அதிரடிகளால் கல்லூரியில் அவள் சந்தித்த கேலிகள் ஏராளம். இன்னொருமுறை மறந்தும் அந்த தவறை அவள் செய்ய தயாராக இல்லை.

அது மட்டுமா? இரவில் அவளை தனியே விடாமல் அவளுக்கு காவல் இருக்க, ஏன்தான் சொன்னோமோ என

நொந்தே போனாள். அதிலும் தாயின் அழுகை... அப்பப்பா அதை அவளால் கண்கொண்டு காண முடியவில்லை என்றே சொல்லலாம்.

தாயின் அழுகையைக் காண்பதற்கு, இந்த குரலையே கேட்டுக் கொள்ளலாம் என்ற முடிவுக்கே வந்துவிட்டாள். இப்பொழுது அவளுக்கு இருக்கும் பயமே, முன்னர் என்றாவது ஒருநாள் கேட்ட குரல், ஏன் இப்பொழுது அடிக்கடி கேட்கிறது என்பதே.

அந்த குரல் தன்னிடம் எதையோ சொல்ல முயல்வதும், அது முடியாமல் திணறுவதும், அதிலும் தன் பெயரை வித்தியாசமாக ‘ஆனந்தவல்லி’ என அழைப்பதும், இமைகளை அழுத்தமாக மூடி அப்படியே அமர்ந்துவிட்டாள்.

‘என் பெயர் எப்படி அந்த குரலுக்குத் தெரியும்?’ இந்த வினா எழ, அதற்கு பதில் சொல்வார் யார்?

அவள் கண்கள் கடிகாரத்தில் பதிய, சரியாக நள்ளிரவு பன்னிரண்டு மணியை கடந்து நொடிமுட்கள் நகர்ந்து கொண்டிருந்தன. அவளும் அநேகம் முறை கவனித்துவிட்டாள், இந்த வினோத குரல் கேட்டு எழுந்து நேரம் பார்த்தால், சரியாக பன்னிரண்டு மணியை கடந்து காட்டும்.

அது மட்டுமா...? அந்த குரலின் தாக்கத்தில் கண் விழிக்கிறாளா? இல்லையென்றால் அந்த கூர்க்காவின் விசில் ஓசையில் கண் விழிக்கிறாளா என்றே அவளுக்கு சில நேரங்களில் சந்தேகம் எழும். அவ்வளவு கச்சிதமாக அவள் கண் விழிக்கும் நேரங்களில் விசில் சத்தம் வேறு செவியைத் துளைக்கும்.

இது எதேச்சையாக நடக்கிறதா? இல்லையென்றால் இதற்கு எதுவும் காரணம் இருக்குமா என்று கூட அவளுக்குத் தெரியவில்லை. அருகில் இருந்த டவ்வலை எடுத்து முகத்தை துடைத்துக் கொண்டவள், ஏசியை நிறுத்திவிட்டு ஜன்னலை திறந்து வைத்தாள்.

பார்வையை ஜன்னல் வழியாக வெளியே செலுத்தி, அந்த கூர்க்கா அங்கே நிற்கிறானா எனப் பார்க்க, அங்கே அவன் இருக்கவில்லை.

வெளியே வானத்தில் நிலா முழு நிலவாக இருக்க, சில நொடிகள் அதன் அழகில் லயித்து நின்றிருந்தாள். இனிமேல் படுத்தாலும் சில நிமிடங்களுக்கு உறக்கம் அவளை அண்டாது என்பதால் அப்படியே நின்றிருந்தாள்.

“அக்கா… இருட்டுக்குள்ள என்ன பண்ற? தூக்கம் வரலையா?” பத்தாம்வகுப்பு படிக்கும் அவளது தங்கையின் குரல் திடுமென கேட்கவே, அவ்வளவு குழப்பத்திலும் ஆனந்தியின் இதழ்களில் மெல்லிய புன்னகை ஒன்று உதயமானது.

‘அதெப்படிதான் ஏசியை நிறுத்தின உடனே கண் முழிக்கறாளோ?’ தங்கையைப் பற்றி எண்ணிக் கொண்டாள்.

அவளைப் பார்த்து மெல்லியதாக புன்னகைக்க, “என்னக்கா மறுபடியும் கனவா?” கேட்டவள் கண்களை மெல்லியதாக கசக்கியவாறு படுக்கையில் எழுந்து அமர்ந்தாள்.

“ம்… ஆமா… நீ எதுக்கு எழுந்துக்கற? படுத்துக்கோ…” அவள் எழுந்து வர முயலவே, அவள் அருகில் சென்று அமர்ந்து கொண்டாள். தாயிடம் சொல்ல முடியாத இந்த குரல் விஷயத்தை ஆனந்தி பகிர்ந்துகொள்ளும் இரண்டாவது ஆள், அவளது தங்கை அம்மு.

அவள் தன் கனவைப் பகிர்ந்துகொள்ளும் முதல் ஆள், அவளது உயிர்த்தோழி அரசிதான்.

“ஏசியை நிறுத்திட்டு, நீ இப்படி கொட்ட கொட்ட முழிச்சுகிட்டு இருந்தால், நான் எப்படி தூங்குறது? என்னோடவே வேண்ணா படுத்துக்கோ” ஆனந்தியின் கரத்தைப் பற்றிக் கொண்டாள்.

“நான் படுத்துக்கறேன் நீ தூங்கு…” அவளை படுக்க வைத்து அருகில் அமர்ந்து கொண்டாள்.

“அம்மாகிட்டே சொல்லவா?” அரை உறக்கத்தில் அவள் கேட்க,

“அம்மாகிட்டே இதையல்லாம் சொல்ல வேண்டாம்… ரொம்ப பயந்துடுவாங்க… ஏற்கனவே ஒரு முறை என்னை மந்திரிச்சது போதும்” ஆனந்தி பேசிக்கொண்டிருக்கையிலேயே உறங்கி விட்டிருந்தாள் அம்மு.

ஆனந்திக்கும் உறங்க ஆசைதான். ஆனால், எங்கே அந்த குரல் மீண்டும் கேட்குமோ என்ற பயம் ஒரு பக்கம் இருக்க, உறக்கம் சற்று எட்டவே நின்று ஆட்டம் காட்டியது. ஒரு வேளை இந்த எண்ணம் அதிகமாக இருப்பதால்தானோ என்னவோ, உறக்கம் அவளுக்கு எட்டாக் கனியாக இருந்தது.

சில பல நிமிடங்கள் கடக்கவே, தானும் தங்கையின் அருகில் படுத்துக் கொண்டாள். ஆனந்திக்கு இப்படியான குரல் கேட்கத் துவங்கிய பிறகு, திடுக்கிட்டு கண் விழிப்பதாலும், சில நேரங்கள் அவள் தனக்குள்ளாகவே போராடும் நிலையாலும் தன்னையறியாமல் தங்கையை காயப்படுத்திவிடக் கூடாது என்பதற்காகவே தனியாக படுத்து உறங்கத் துவங்கினாள்.

அவையெல்லாம் எண்ணியவாறு படுத்திருந்தவள், தன்னையும் அறியாமல் உறக்கத்தில் அமிழ்ந்தாள். ‘அந்த கனவு, குரல் மீண்டும் கேட்குமா? வருமா?’ மனதின் குரல் அடங்க வெகு நேரமானது.

***

# நிழல் – 2

காலையில் வழக்கத்துக்கு மாறாக ஆனந்தி தாமதமாக கண் விழிக்க, அவளது படுக்கையில் அவளைப் பார்த்தவாறு அமர்ந்திருந்தார் அவளது தாய் கல்பனா. தாய் தன் அருகே அமர்ந்திருப்பதைப் பார்த்தவளுக்கு உறக்கம் சுத்தமாக கலைந்து போக, வேகமாக எழுந்து அமர்ந்தாள்.

அவர் முகத்தில் விரவியிருந்த கவலை அவளைத் தாக்க, மானசீகமாக தன்னையே நொந்துகொண்டாள். ‘ஆண்டவா... ஒரு நாள் கொஞ்சம் லேட்டா எழுந்துடக் கூடாது, உடனே இங்கே வந்து உக்காந்துக்க வேண்டியது. நான் என்ன பச்சைப் புள்ளையா?’ தனக்குள் அலுத்துக் கொண்டாள்.

நாளுக்கு நாள் அவர் தன்னை அதிகமாக பொத்தி வைப்பது போன்ற ஒரு எண்ணம். அது நிஜம்தான் என்று அவரது செய்கைகள் அவளுக்கு எடுத்துக் கூறியது.

அதென்னவோ ஆனந்தியின் தாய் கல்பனாவுக்கு தன் இளைய மகள் அம்முவை விட, மூத்த மகள் ஆனந்தி என்றால் அவருக்கு அவ்வளவு உயிர். அதிலும் ஆனந்தி அவர்களது சொந்த மகள் கூட கிடையாது. டெல்லிக்கு சுற்றுலா சென்றுவிட்டு திரும்பி வருகையில், ட்ரெயினில் அவர்களுக்கு கிடைத்த குழந்தை.

அவள் அவர்களுக்கு கிடைத்த பிறகுதான், கல்பனாவின் கணவர் ரவிக்கு வேலையில் முன்னேற்றம் வந்தது என்பதால், ஆனந்தி என்றால் அவர்களுக்குத் தனிப் பிரியம். அதைவிட, அவர்கள் ஒரு முறை ஒரு சாமியாரை சந்திக்கச் சென்றிருந்த பொழுது, ஆனந்தியைப் பார்த்த அந்த சாமியார்,

அவள் அவர்களுடன் இருக்கும் வரைக்கும் அவர்களுக்கு ஏறுமுகம் மட்டுமே எனச் சொல்லியிருந்தார். கூடவே, அவளது இருபத்தியோராம் வயதில், யார் தடுத்தாலும்

அவள் அவர்களை விட்டுச் சென்று விடுவாள் எனவும் சொல்லியிருக்க, கல்பனாவுக்கு அதைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

ஆனந்தியின் வாழ்வில் மிகப்பெரும் மர்மங்கள் அடங்கி இருக்கிறது என்றும், அது தெரியவர வேண்டிய நேரத்தில் அவளுக்கு தானாகவே தெரிய வரும் எனவும் சொல்லியிருக்க, கல்பனா, தன் மகளுக்காக கடவுளிடம் வேண்டாத நாள் இல்லை.

அவள் தங்களுடனே இருக்க வேண்டும் என அவர் வேண்டாத தெய்வம் இல்லை என்றே சொல்லலாம்.

அதிலும், அந்த இருபத்தோரு வயது துவங்கும் அந்த நேரத்தில், அவள் மிகுந்த கவனமுடன் இருக்க வேண்டும் எனவும் சொல்லியிருக்க, ஆனந்தியை தன் கண்களுக்குள் வைத்து பாதுகாக்கத் துவங்கி விட்டார்.

‘அதை தவிர்க்க முடியாதா’ என்ற கல்பனாவின் கேள்விக்கு, ‘கடவுளின் திட்டத்தை மாற்ற நம்மால் முடியுமா?’ என அவரிடமே அந்த சாமியார் திருப்பிக் கேட்டிருக்க, அவருக்கு இருந்த கொஞ்ச நஞ்ச நம்பிக்கையும் விட்டுப் போனது.

‘மகளை தங்களுடனே இருக்க வைக்க முடியாதா?’ என்ற அவரது கேள்விக்கு, ஆனந்திக்கு ‘அந்த நேரத்தில் ஏற்படும் கண்டத்தில் இருந்து அவள் தப்பிவிட்டால், அவர்களை விட்டு பிரிந்து செல்லும் வாய்ப்பு குறைய சாத்தியம் இருக்கலாம்’ எனச் சொல்லியிருந்தார்.

ஆனால், அப்படி நடக்க வாய்ப்பே இல்லை என அவர் அடித்து சொல்லியிருக்க, கடவுளை நம்புவதைத் தவிர அவருக்கு வேறு வழி இருக்கவில்லை.

ஆனந்தி தங்களை விட்டு சென்றுவிடக் கூடாது என்றே வேண்டத் துவங்கி இருந்தார். ஆனந்திக்கு பதினெட்டு வயது துவங்கியதில் இருந்து கல்பனாவின் தூக்கம் பறிபோகத் துவங்கிவிட்டது என்றே சொல்லலாம்.

என்றைக்கு, ஆனந்தி கனவில் தனக்கு இப்படி ஒரு குரல் கேட்கிறது என என்று சொன்னாளோ, அன்றுமுதல் அவரால் நிம்மதியாக ஒரு நாள் கூட இருக்க முடியவில்லை.

அவளுக்கு இனிமேல் அப்படியான குரல் கேட்கவே கூடாது என்பதற்காகவே அலைந்து திரிந்து மந்திரித்து, ஆயிரம் தாயத்துக்களை மகளுக்கு அணிவித்து விட்டார். மகளும் அதன் பிறகு அப்படியான குரல் தனக்கு கேட்கவில்லை என்று சொல்லிவிட்டாள்.

அவள் அப்படி சொல்லியிருந்தாலும், ஆனந்தி அதிகாலையில் தாமதமாக கண் விழிக்கையில், அவள் கனவு கண்டு இரவில் உறங்காமல் இருக்கிறாளோ? என அந்த தாயுள்ளம் பரிதவித்துப் போகிறதே. அதை அவரால் தடுக்கவும் முடியவில்லை.

கல்பனாவின் கணவர் ரவி கூட, நடக்க வேண்டியது எப்படி இருந்தாலும் நடந்தே தீரும். அப்படி இருக்கையில், அவளுக்கு ஆபத்து எதுவும் நேரிடக் கூடாது என வேண்டிக்கொள், அதை விடுத்து, அவளை உன்னுடனே வைத்துக் கொள்ள வேண்டும் என நினைக்காதே... எனச் சொல்லிவிட்டார்.

ரவிக்கும் ஆனந்தியைப் பிரிவது என்பது தன் உயிரையே உருவி எடுப்பது போன்ற வலியைக் கொடுக்கக் கூடியதுதான். ஆனால், விதியின் கையில் நாமெல்லாம் விளையாட்டு பொம்மைகளாக இருக்கையில், இயற்கையை மீறி அவரால் என்ன செய்ய முடியும்? எனவே முடிந்த அளவு உண்மைகளை ஏற்க பழகிக் கொண்டார். ஆனால் கல்பனாவால் அது முடியவில்லை, எனவே மறுகிக் கொண்டிருக்கிறார்.

மகளுக்கு எந்தவிதமான ஆபத்தும் நேராமல் பாதுகாக்க வேண்டும் என்பது மட்டுமே அப்போதைய ரவியின் நிலையாக இருந்தது. சொல்லப்போனால் இந்த உண்மை எல்லாம் இன்னுமே ஆனந்திக்கு கூட தெரியாது. அவள்

வளர்ப்பு மகள் என்பதோ, அவளது வாழ்வில் இப்படியான நிகழ்வுகள் நடக்க காத்துக் கொண்டிருக்கிறது என்ற உண்மையோ அவளுக்குத் தெரியாது.

அவளுக்குத் தெரியாது என்பதாலேயே, அவளுக்கும் சேர்த்து தான் கவனமாக இருக்க முயன்றார் கல்பனா. மகள் எழ தாமதமாகவே, அவளுக்கு அருகில் அமர்ந்து அவளையே பார்த்திருந்தார்.

இந்த உண்மைகளை எல்லாம் அவளிடம் சொல்லிவிட அவர்களுக்கு தைரியம் இல்லை என்றே சொல்லலாம். அதிலும், அவள் முகத்துக்கு நேராக, நீ எங்கள் சொந்த மகள் இல்லை, வளர்ப்பு மகள் என எப்படிச் சொல்வதாம்?

அப்படிச் சொன்னால் என் பெற்றவர்கள் யார் என அவள் கேட்கும் கேள்விக்கு அவர்கள் என்ன பதில் சொல்வது? ஏற்கனவே ‘நான் மட்டும் ஏன் உங்கள் ஜாடையில் இல்லை?’ என்ற அவளது கேள்விக்கு எப்படியோ, எதையோ சொல்லி சம்மாளித்து வைத்திருக்கிறார்கள்.

அப்படி இருக்கையில், மகள் இப்படி கனவு வருகிறது, அதில் குரல் கேட்கிறது, என்னை அழைக்கிறது எனச் சொன்னால் பயப்படாமல் அவரால் இருக்க முடியுமா என்ன?

தன் தாய், தங்கையை விட தன்னை அதிகம் பொத்தி வைப்பதுபோல் இருக்கவே, ஆனந்தி சிறு எரிச்சலுக்கு உள்ளானாள் என்றே சொல்லலாம். இன்று வரைக்கும் ஆனந்தியை தனியாக அவர்கள் எங்கும் அனுப்புவது கிடையாது.

கல்லூரிக்கு சென்ற பிறகும் கூட, கல்லூரிப் பேருந்தில் மட்டுமே அவளை அனுப்பி வைக்கிறார்கள். அதுவே அம்முவோ பள்ளியில் படிக்கும்பொழுதே தனியாக சைக்கிளில் சென்று வருகிறாள். வருடம் தவறாமல் அவள் கல்வி சுற்றுலா செல்ல, இன்று வரைக்கும் ஆனந்தி அப்படி ஒரு இடத்துக்குச் சென்றதே இல்லை.

கல்லூரியின் இறுதி வருடத்தில் இருக்கும் அவள், இந்த வருடம் எப்படியாவது கல்வி சுற்றுலா சென்றே தீர்வது என்ற முடிவில் இருக்கிறாள் என்பது வேறு விஷயம். அங்கே அவளுக்கு காத்திருக்கும் அனுபவங்கள் தெரிந்திருந்தால் போக எண்ணியிருக்க மாட்டாளோ என்னவோ.

‘அம்முவை விட, தான் அப்படியென்ன சின்னப் பிள்ளையா?’ என்ற எண்ணம் தோன்றவே, “என்னம்மா காலையில் கிச்சன்ல எந்த வேலையும் இல்லையா? இங்கே வந்து உக்காந்து இருக்கீங்க? அம்மு ஸ்கூல் கிளம்பிட்டாளா?” படுக்கையில் இருந்து இறங்கினாள்.

அப்பொழுதும் கூட, அவளது கேள்விக்கு பதில் சொல்லாமல், அவள் முகத்தையே ஆராய்சியாகப் பார்த்தவர், “ஆனந்தி, நைட் சரியா தூங்கலையா? உனக்கு மறுபடியும் கனவு எதுவும் வரலையே…” தவிக்கும் மனநிலையில் கேட்டார்.

அது அவளுக்கும் புரியவே, “அம்மா… அப்படியெல்லாம் எதுவும் இல்லை. அதான் இத்தனை கயிறு கட்டி விட்டிருக்கீங்களே, அதைத் தாண்டி எதுவும் வருமா என்ன? எனக்கு காலேஜுக்கு டைம் ஆச்சு நான் கிளம்பறேன்.

“உங்ககூட பேசிட்டு இருந்தால் நான் பஸ்ஸை மிஸ் பண்ணிடுவேன். எனக்கு கொஞ்சம் சூடா டீ எடுத்துட்டு வாங்க…” தாய், தன்னை அதற்குமேல் துருவும் முன்னர், பாத்ரூமுக்குள் சென்று புகுந்து கொண்டாள்.

அவளுக்கு ஈவினிங் காலேஜ் என்பதால், மதியம் கல்லூரிப் பேருந்தில் செல்லும் அவளை, மாலையில் ரவி அலுவலகம் முடிந்தவுடன் சென்று அழைத்துக் கொண்டு வருவார்.

ஆனந்தி குளித்து முடித்து வர, ரவி அலுவலகம் கிளம்பி உணவு மேஜை முன்னால் அமர்ந்து காலை உணவை உண்டுகொண்டிருந்தார். ஆனந்தி அவர் அருகில் வந்து

அமர்ந்தவள். “குட் மார்னிங் டேட்... ஆபீஸ் கிளம்பிட்டீங்களா?” அவள் கேட்க,

“வெரி குட் மார்னிங் ஆனந்தி... இன்னைக்கு என்ன லேட்... இல்லன்னா காலையிலேயே எழுந்து அம்முவுக்கு ஏதாவது பாடம் சொல்லிக் கொடுப்பியே” மனைவியை ஒரு பார்வை பார்த்தவர் அவளிடம் விசாரித்தார்.

“இன்னைக்கு தூக்கம் வந்துடுச்சு டேட்...” சற்று சலிப்பாய் சொன்னவள் தாய் கொடுத்த டீ கோப்பையை கைகளில் எடுத்துக் கொண்டாள். கல்பனாவின் பார்வை கணவனை மேலும் தூண்ட, ‘அவளை ஃப்ரீயா விடு...’ அவரும் பார்வையால் பதில் கொடுத்தார். அவர்கள் பார்வையால் தங்களுக்குள் பேசிக் கொள்வது அவளுக்கும் புரிய, அதை கண்டுகொள்ளாமல் அமர்ந்திருந்தாள்.

‘இந்த கனவு, குரல் கேக்கும் விஷயத்தை அம்மாகிட்டே சொல்லியே இருக்கக் கூடாது’ கோடி முறையாக மனதுக்குள் நொந்துகொண்டாள்.

“சரிம்மா... நீ டிபன் சாப்பிடு, டேட் ஆபீஸ் கிளம்பறேன்” அவளிடம் சொல்லிவிட்டு எழுந்து கொண்டார்.

அதன்பிறகு தாயுடன் அவள் தனித்திருக்கவே, அவரின் வாடிய முகம் காண சகிக்காமல், அவரிடம் பேசியவாறு அவர் கையால் உணவு உண்டு, அவருடன் சேர்ந்து சமைத்து என தாயை கூல் செய்துவிட்டாள். அவள் அப்படி நினைத்துக் கொள்ள, தாயின் மனதுக்குள் இருக்கும் குழப்பங்களை, பயத்தை அவள் அறியவே இல்லை.

அதே நேரம், அவளது மனமும் காரணமின்றி, ஒரு மாதிரி படபடத்தது. இதற்கு முன்னர் அவள் இப்படி ஒரு உணர்வை அனுபவித்ததே இல்லை. கனவில் அந்த குரல் கேட்கும் நேரத்தில் ஒரு மாதிரி உணர்வாள். அதுவும் விழிப்பு வந்துவிட்டால், அதை கனவு என்றே கடந்து விடுவாள்.

ஆனால் இன்று என்னவோ அவள் மனம் ஒரு நிலையில் இல்லை. மனதை அடக்க நினைத்தாலும், அவள் கட்டுப்பாட்டை மீறி, ஒரு மாதிரி அலை பாய்ந்தது. அது ஏன் என்று அவளால் உணர முடியவில்லை.

கல்லூரிக்குச் செல்லவே மனமில்லை, ஆனால்... வீட்டிலேயே இருந்தால் அந்த உணர்வு இன்னும் அதிகரிக்கும் என்பதாலும், அதைவிட தாயின் கேள்விகளுக்கோ, அவரது கண்ணீருக்கோ தன்னால் பதில் சொல்ல முடியாது என்பதால் கிளம்பினாள்.

அதே நேரம், அவளது தோழி அரசியைப் பார்த்து, தன் மனதில் எழும் குழப்பங்களுக்கு விடை அறிய வேண்டும் என எண்ணிக் கொண்டாள். தாயிடம் சொன்னால் இன்னும் பயந்துவிடுவார் என்பதால், தன் நிலையை அவருக்குச் சொல்ல மறுத்தாள்.

அவள் கல்லூரிக்கு கிளம்பி வரவே, தெருமுனை வரைக்கும் அவளுக்குத் துணையாகச் சென்றார் கல்பனா.

இது வழக்கமாக நிகழும் ஒன்றுதான் என்பதால், தாயுடன் நடந்தவளுக்கு, சட்டென தன்னைக் கடந்து சென்ற காரை ‘கவனி’ என அடிமனதில் ஒரு உந்துதல்.

தன்னைக் கடந்து சென்ற காரை கவனி என அவளது உள்ளுணர்வு அவளை உந்த, ஒரு நொடி அப்படியே சாலையில் நின்றுவிட்டாள். அந்த நேரம், சாலையைக் கடந்து கொண்டிருந்தாள் என்பது எல்லாம் அவள் நினைவுக்கு வரவே இல்லை.

***

# நிழல் – 3

தன்னைக் கடந்து சென்ற காரை கவனி என அவளது உள்ளுணர்வு அவளை உந்த, ஒரு நொடி அப்படியே சாலையில் நின்றுவிட்டாள். அந்த நேரம், சாலையைக் கடந்து கொண்டிருந்தாள் என்பது எல்லாம் அவள் நினைவுக்கு வரவே இல்லை.

அவளது பார்வை தன்னைக் கடந்து, சாலையில் கலந்துவிட்ட அந்த காரிலேயே இருக்க, “ஏய்… என்னடி ஆச்சு…? ஆனந்தி… ஏன் இப்படி நடு ரோட்டில் நின்னுட்ட, முதல்ல வா…” அவளது தாய், வலுக்கட்டாயமாக அவளது கையை பிடித்து இழுத்துச் செல்ல வேண்டி இருந்தது.

பேருந்து நிறுத்தத்துக்கு வந்த பிறகும், அவள் கவனம் அங்கே திரும்பவே இல்லை. அதை உணர்ந்த அவள் தாய், அவள் பார்வை சென்ற திக்கில் ஊர்ந்து சென்ற காரைப் பார்த்தவர்,

“ஆனந்தி, நான் பேசுறது கேக்குதா இல்லையா? அந்த காரில் யார் இருக்கா? உனக்குத் தெரிஞ்சவங்களா?” அவளது கவனம் கொஞ்சம் கூட அவர் பக்கம் திரும்பாமல் போகவே, வலுக்கட்டாயமாக அவள் முகத்தை தன் பக்கம் திருப்பி சற்று உரக்கவே கேட்டார்.

அது மதிய நேரம் என்பதால், பேருந்து நிறுத்தத்தில் கூட்டம் சுத்தமாக இல்லை. எனவே அவர்களை வேடிக்கை பார்க்கும் மனிதர்கள் யாரும் அங்கே இருக்கவில்லை.

அப்பொழுதும் அவளது கவனம் தன்பக்கம் வராமல் போக, “ஆனந்தி… ஆனந்தி…” தன் கையில் இருந்த தண்ணீர் பாட்டிலை திறந்து, அவள் முகத்தில் நீரை அடித்தார். அப்பொழுதுதான் திடுக்கிட்டு தெளிந்தவள், அவரை கேள்வியாக பார்த்தாள்.

“என்னம்மா… எதுக்கு இப்போ இப்படி மூஞ்சியில் தண்ணியை தெளிச்சீங்க? பாருங்க, ட்ரெஸ் எல்லாம் ஈரமாகிடுச்சு…” சற்று முன்னர் நடந்தவற்றை எல்லாம் அவள் உணர்ந்ததாகவே இல்லை.

“தூங்கிட்டே நடக்குறியா என்ன? அந்த காரை அப்படிப் பாத்தியே அதுக்குள்ளே யார் இருந்தாங்கன்னு கேட்டேன்” கல்பனாவின் முகத்தில் பெரும் பீதி உதயமானது.

“என்ன கார்? யார் பாத்தா? சும்மா உளறாதீங்கம்மா. சரி சரி… என் பஸ் வந்துடுச்சு நான் கிளம்பறேன். நீங்க பத்திரமா வீட்டுக்குப் போங்க…” பேருந்து வரவே சட்டென அதில் ஏறிக் கொண்டாள்.

அவளது பார்வை தன் தோழி அரசியைத் தேட, “ஏய்… நான் இங்கே இருக்கேண்டி வா… ஹாய் ஆண்ட்டி…” அவள் கை அசைக்க, தன் மகளையே கவலையாக பார்த்திருந்தார்.

அவர் அவ்வாறு பாக்கவே, “என்ன ஆண்ட்டி, இன்னைக்கு வழக்கமா சொல்ற டயலாக்கை சொல்லக் காணோம்? சரி நீங்க சொல்லலை என்றாலும், நானே சொல்லிடுறேன். ஆனந்தியை நான் பத்திரமா பாத்துக்கறேன்…” அவள் சொல்லிக் கொண்டிருக்கையிலேயே பேருந்து நகர்ந்துவிட்டது.

பேருந்து சென்ற பிறகும் சில நொடிகள் அசையாமல் அங்கேயே நின்றிருந்தார் கல்பனா. சில நிமிடங்களுக்கு முன்னர் நடந்த நிகழ்வு அவரை உறைந்து போக செய்திருந்தது. நிலைமை தங்கள் கையை விட்டுப் போகும் உணர்வு.

“பழனி ஆண்டவா… என் பொண்ணை நீதான் பாத்துக்கணும்…” அது சாலை என்றும் பாராமல், கையை தலைக்குமேல் குவித்து வணங்கியவர், இந்த விஷயத்தை உடனே தன் கணவனிடம் தெரிவிக்க வேண்டி அலைபேசியை எடுத்து அழைத்தார்.

பேருந்திலோ, “ஆதி... உங்க அம்மாவுக்கு இன்னைக்கு என்ன மந்திரம் போட்ட, இப்படி உறைஞ்சு போய் நிக்கறாங்க. வழக்கமா ஏதாவது கதை சொல்வியே, இன்னைக்கு எனிதிங் ஸ்பெஷல்?” தன் அருகில் இருந்த தோழியின் தோளில் தன் தோளால் இடித்தாள்.

“உனக்கு நான் சொல்றது எல்லாம் கதையா தெரியுதா?” போலி கோபத்தில் கேட்டாள்.

“ச்சே... ச்சே... நான் அப்படி சொல்வேனா? அதைவிட இன்ட்ரெஸ்ட்டா இருக்குடி” அவள் சீரியசாக சொல்ல, அவள் கையில் நறுக்கென கிள்ளினாள்.

“ஸ்... ஆ... எரும இப்போ எதுக்குடி கிள்ளி விட்ட, பார் எப்படி சிவந்து போச்சுன்னு...” அவள் கிள்ளிவிட்ட இடத்தைக் காட்டினாள்.

நிஜமாகவே அந்த இடம் சற்று கன்னிப் போயிருக்க, “ஹையோ சாரிடி, நாளுக்கு நாள் எனக்குள் நடக்கும் விஷயங்களை பாக்குறப்போ ரொம்ப பயமா இருக்கு. நீ புரிஞ்சுக்காமல் கேலி பண்ணவே இப்படி பண்ணிட்டேன்” அவள் கரத்தை எடுத்து, தான் கிள்ளிவிட்ட இடத்தை வருடினாள்.

“ம்ச்... இதை விடு... என்ன ஆச்சு அதைச் சொல்லு. மறுபடியும் அந்த குரல் கேட்டுச்சா?” இப்பொழுது அரசி சீரியசானாள்.

“முன்னெல்லாம் என்னைக்காவதுதான் அந்த குரல் கேக்கும், இப்போல்லாம் தினமும் கேக்கற மாதிரி கேக்குது... இப்போ கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி, அப்படியே மூளையே அடைச்ச மாதிரி உறைஞ்சு போய் நடு ரோட்டிலேயே நின்னுட்டேன்.

“என்னை பாஸ் பண்ண காரைப் பாத்து என்ன நினைச்சேன்னே தெரியலை அப்படியே நின்னுட்டேன். எனக்கு ரொம்ப தெரிஞ்ச யாரோ அதுக்குள்ளே இருக்குற

மாதிரி ஒரு ஃபீல்… இப்போ கூட…” திடுமென அவளது இதயத்துடிப்பு எகிற, தோழியின் கரத்தை தன் நெஞ்சில் வைத்து அதன் துடிப்பை அவளை உணர வைத்தாள்.

“ஏய்… என்னடி இது? நெஞ்சு ஏன் இப்படி படபடங்குது? வேர்க்குதுடி… இல்ல, உடனே ஹாஸ்பிடல் போயாகணும்…” ஆனந்திக்குள் எதுவோ நடப்பதை அவளால் புரிந்துகொள்ள முடிந்தது.

“அதெல்லாம் வேண்டாம் விடு… இங்கே பக்கத்தில்… யாரோட ஹார்ட் பீட்டோ எனக்கு ரொம்ப கேக்குது…” சொன்னவள் பார்வையை பேருந்தை விட்டு வெளியே செலுத்தி, சாலையை அலசினாள்.

“எரும, உன் ஹார்ட் பீட் தான் அது…” அரசி அலற,

“இல்லடி வேற…” ஆனந்தி அழுத்திச் சொல்லவே, பெரும் கவலைக்கு உள்ளானாள்.

“ஆதி… எனக்கென்னவோ ரொம்ப பயமா இருக்குடி. உடனே ஒரு டாக்டரை பாத்தே ஆகணும். உங்க வீட்டில் சொல்ல முடியலன்னா போகுது, நான் எங்க வீட்டில் சொல்லி உன்னை அழைச்சுட்டு போறேன். இதை இப்படியே வளர விடுறது நல்லதில்லை” தோழியின் கரத்தை கெட்டியாக பற்றிக் கொண்டாள்.

தோழியின் கரம் தன் கரத்தை கெட்டியாக பற்றிக் கொள்ள, திறந்திருந்த அவள் விழிகளில் மசமசப்பாய் சில உருவங்கள் உலா போனது. ‘ஏனடி ஆனந்தவல்லி… இவ்வளவு நேரமாக எங்கே போயிருந்தாய்? நான் உன்னை தேடுவேன் என்பது உனக்குத் தெரியாதா?’ இதேபோல் அவளது கரத்தை பற்றிக்கொண்டு கேட்டுக் கொண்டிருந்தாள் அரசி.

அவளது உடையும், அலங்காரமும், அவர்கள் இருந்த இடமும் ஏதோ ஒரு அரண்மனையின் அந்தப்புரம் என்பதை

உணர்த்த, தன் மற்றொரு கரத்தால் அரசியின் கரத்தை கெட்டியாக பிடித்துக் கொண்டாள்.

“அரசி... தாங்களை அதிக நேரம் காக்க வைத்து விட்டேனா? என்னை மன்னித்து விடுங்கள்...” நிஜத்தில் ஆனந்தி அரசியிடம் உரைக்க, முழுதாக குழம்பிப் போனாள் அரசி.

“ஆதி... திடீர்ன்னு என்ன என்னவோ பேசுறியேடி... ஆமா இதென்ன பாஷை? தூங்குறியா?” சுற்றிலும் தங்கள் கல்லூரித் தோழிகள் இருக்கவே அடிக்குரலில் அவளை கலைக்க முயன்றாள்.

ஆனந்தியின் பிடி இரும்பாய் இறுக, “ஸ்... அம்மா... கையை உடைச்சுடாதே...” தன் கரத்தை அவள் பிடியில் இருந்து உருவிக் கொள்ளவே, ஆனந்தியின் கனவுகள் சட்டென அறுந்து போனது.

“அரசி... அரசி...” அவள் அழைக்க,

“அடச்சீ... பேரை ஒழுங்கா கூப்பிட்டுத் தொலை... என்னவோ ராணியை கூப்பிடுற மாதிரி கூப்பிடுற. கேக்குற எனக்கு ஒரு மாதிரியா இருக்கு. எவ காதிலாவது விழுந்து தொலைச்சா வச்சு செய்யப் போறாளுக. ஏற்கனவே இந்த பேரை வச்சுகிட்டு நான் படுற பாடு தாங்கலை... இதில் நீவேற பெருசா பிளான் போடுற... ஒழுங்கா பேசுடி” அவளை கடிந்து கொண்டாள்.

“தாங்கள் ராணிதான்...” ஆனந்தி சொல்ல,

“ஆமா... நான் ராணி, நீ என்ன சேடிப்பெண்ணா?” கடுப்பானாள்.

“ஆமாம்...” ஆனந்தி உடனே ஒத்துக்கொள்ள,

“இன்னைக்கு என்னடி, உனக்கு பலியாடு நானா...? எரும, எரும... முதல்ல தெளிவா பேசுடி...” அவளைக் கலைக்க, ஆனந்தி தலையில் கை வைத்துக் கொண்டாள்.

“ஏய்… நீ பண்றதை எல்லாம் பாத்தா எனக்கு பீதி ஆவுதுடி… என்னன்னு சொல்லு” அவளை உலுக்க, அதன் பிறகே நடப்புக்குத் திரும்பினாள். திடுக்கிட்டு தெளிந்தவள், அரசியையும், அவளது உடையையும் வேகமாக தொட்டுப் பார்க்கவே அவளை வித்தியாசமாகப் பார்த்தாள்.

“என்னடி… இப்பவும் ஏதாவது கனவு கண்டியா? ஆமான்னு சொல்லி என் தலையில் கல்லைத் தூக்கிப் போட்டுடாதே” அவள் சொல்ல, தன் தலையில் கை வைத்து தாங்கிக் கொண்டாள் ஆனந்தி.

அதே நேரம் பேருந்து கல்லூரிக்குள் நுழையவே, அவர்களது பேச்சு தற்காலிகமாக தடைபட, இருவரும் பேருந்தை விட்டு இறங்கி நேராக வகுப்பறைக்குச் சென்றார்கள். கல்லூரி துவங்க இன்னும் நேரம் இருக்கவே, வகுப்பறைகள் காலியாக இருக்க, ஓய்வெடுக்கும் அறை, ஆடிட்டோரியங்களில் மட்டுமே மாணவிகள் இருந்தார்கள்.

தங்கள் இடத்தில் சென்று அமர்ந்தவர்கள், “இப்போ சொல்லுடி, உனக்கு என்னதான் ஆகுது?”.

“அரசி, சொன்னால் நீ நம்புவியா இல்லையான்னு தெரியலை. ஆனா… நீ ராணிதான்… நான் உன் தோழியும்…” ஆனந்தி சொல்ல, நெஞ்சில் கை வைத்து அதிர்ந்தாள்.

“சத்தமா சொல்லித் தொலையாதடி, இந்த காலத்தில் வந்துட்டு ராணி பொடலாங்கான்னு… உனக்கு கண்டிப்பா ட்ரீட்மென்ட் கொடுத்தே ஆகணும். இல்லன்னா இப்படி பண்ணலாமா… நம்ம காலேஜ் சைக்காலஜி லெச்சரர் இருக்காரே ரமணன்… அவரைப் போய் பார்த்தால்…?” அவள் கேட்க, அவளை முறைத்தாள்.

“அரசி, ஏற்கனவே அந்த ஆள் என்னைப் பாக்குற பார்வையே சரியில்லன்னு நீதான் சொன்ன. இப்போ நீயே இப்படிச் சொன்னால்?”.

“இல்லடி... எனக்கென்னவோ உனக்கு வர்ற மாதிரியே, அவருக்கும் கனவு வருதோன்னு சந்தேகமா இருக்கு. அதான் சொன்னேன்...” தீவிர பாவனையில் உரைக்க, ‘அப்படியும் இருக்குமோ?’ என யோசித்தாள்.

ஆனால், அவன் கண்களில் தெரியும் ஒருவித கயமை, அவனை நம்பி எதையும் கேட்கும் தைரியத்தை அவளுக்கு வழங்கவில்லை. அதே நேரம், வாசலில் நிழலாட, அங்கே நிமிர்ந்து பார்த்தால், அவர்களைப் பார்த்தவாறே நின்றிருந்தான் அந்த லெச்சரர் ரமணன்.

***

# நிழல் – 4

ப்ரொஃபசரைப் பார்த்த இரு பெண்களின் கண்களும் ஒன்றை ஒன்று சந்தித்துக் கொண்டன. அவர்கள் அவனைப் பற்றி பேசிய உடனேயே அவன் அங்கே பிரசன்னமானது இருவரையும் ஒருங்கே அதிரச் செய்தது. ஆனந்தியின் கரம் அரசியை கெட்டியாக பற்றிக் கொள்ள, அரசி சலனமே இல்லாமல் அவனை வெறித்தாள்.

ரமணனும் அவர்களிடம் பேசவெல்லாம் முயலவில்லை, ஆனால்… பார்வை அவர்களிடம் எதையோ சொல்ல முயன்றது. அதே நேரம், கல்லூரி துவங்குவதற்கான மணி அடிக்கவே, ரமணன் அங்கிருந்து அகன்றான்.

அவன் செல்லவே, “ஆதி… நாம பேசிகிட்டது இவருக்கு எப்படிடி கேட்டுச்சு? சரியா இங்கே வந்து நிக்கறார்?” அவளிடம் கேட்டாள்.

“அதான் சொன்னியே… அவருக்கும் ஏதாவது நினைவு வந்திருக்கலாம்னு, அதான் வந்து பாத்துட்டுப் போறார்…” ஆனந்தி சாதாரணமாகச் சொன்னாலும், அவள் கரத்தில் தெரிந்த அழுத்தம், அரசிக்கு வேறு கதை சொன்னது.

“ஏண்டி… உங்க கேமுக்குள் என்னை இழுத்து விட்டுடாதடி…” அரசி அலறினாள்.

“ஆட்டமே உன்னை வச்சுதாண்டி…” ஆனந்தி சொல்ல, பெரும் கலவரத்துக்கு உள்ளானாள்.

“உன்கூட சகவாசம் வச்சதுக்கு என்னை எப்பவும் பரபரப்பாவே வச்சிருக்கடி. நல்லா வருவ…” அலுத்துக் கொண்டாள். அடுத்த சில நிமிடங்களில் அறை முழுக்க மாணவிகள் நிறைய, லெச்சரர் வந்து பாடம் நடத்த துவங்கவே அரசியின் கவனம் அதில் பதிந்தது.

ஆனால், ஆனந்தியால் அது முடியவில்லை. அவளது கவனம் முழுவதும் வந்து சென்ற ரமணன் மீதே இருந்தது. ‘அவன் சும்மா இங்கே வரலை… அவன் என்னைப் பாக்க வரானா? இல்ல அரசியையா?’ முதல்முறையாக அவளுக்கு சந்தேகம் எழுந்தது.

சட்டென ஒரு மாதிரி தலை சுற்ற, கலங்கலாக சில காட்சிகள்… போர் வீரன் உடையில் ரமணன் தோன்ற, அவன் கண்களில் தெறித்த கோபம்… அதைப் பார்த்தவளுக்கு, நினைவில் கூட தேகத்தின் முடிகள் அனைத்தும் சிலிர்த்துக் கொண்டது.

‘ஆனந்தவல்லி… நீ செய்வது தர்மம் இல்லை… இளவரசி எனக்கானவள்… நீ குறுக்கே வராதே… அவ்வாறு வந்தால்…’ கையில் நீட்டிய வாளோடு அவன் கத்த, அதையெல்லாம் ஆனந்தவல்லி கொஞ்சம் கூட கண்டுகொள்ளவில்லை. ஆனால், இங்கே ஆனந்தியின் தேகம் நடுங்கியது.

“அரசி… உனக்கு ஆபத்து… ஆபத்து…” திடுமென ஆனந்தி எழுந்து கத்த, வகுப்பறையே அவளைப் பார்த்து சிரித்தது.

“அதான் கிட்டே உக்காந்திருக்கியே நீயே பாதுகாப்பு குடுக்குறது. அதை விட்டு இப்படி எழுந்து கத்துனா? எங்களுக்கு டார்ராவுதா இல்லையா?” வகுப்பில் ஒருத்தி கமெண்ட் கொடுக்க, வகுப்பறை முழுவதும் கொல்லென சிரித்தது.

அரசி, ஆனந்தியை முறைக்க, “சைலன்ஸ்…” குரல் உயர்த்தி கத்திய லெச்சரர், “கிளாஸ்ல தூங்குனது மட்டும் இல்லாமல், எழுந்து கத்த வேற செய்யிறியா? அவுட்…” வாசலைக் கை காட்ட, வேறு வழியின்றி தன் பொருட்களை கையில் எடுத்துக் கொண்டாள்.

ஏற்கனவே அவள் இருக்கும் மனநிலையில் அவளை தனியே விட மனமின்றி, சட்டென இருக்கையில் இருந்து எழுந்த அரசி, “சார், அவளுக்கு கொஞ்சம் உடம்பு

சரியில்லை... சோ நானும் அவளோட போகவா?” அவள் கேட்கவே,

‘போய் தொலை...’ என்பதுபோல் செய்கை காட்ட, இருவருமே வகுப்பை விட்டு வெளியே வந்தார்கள்.

“சத்தியமா எனக்கு ஆபத்து தாண்டி... ரெண்டு வருஷமா உன்னோட போராடியாச்சு, இன்னும் ஒரு வருஷத்தில் இதெல்லாம் முடிஞ்சுடும்னு பாத்தா, என்னை வச்சு செய்யிற பாத்தியா? இதுக்கு காலேஜுக்கு வராமலே இருந்திருக்கலாம்.

“இன்னைக்கு தொடர்ந்து மூணு கிளாஸ் அந்த ஆள் பீரியட் தான்... உள்ளே போகவே முடியாது. வா... ஆடிட்டோரியத்தில் போய் உக்காருவோம்...” அரசி புலம்பிக்கொண்டே வர, ஆனந்தி பெரும் அமைதியாக உடன் வந்தாள்.

“இப்போ சொல்லுடி, அப்படி என்ன ஆபத்து?”.

“அரசி... அந்த ரமணன் என்னைப் பாக்க வரலை...” அவள் தயங்கி நிறுத்த,

“பிறகு...”

“உன்னைத்தான் பாக்க வர்றான்...” அவள் சொல்லி நிறுத்த, தன் நெஞ்சில் கை வைத்து அதிர்ந்தாள்.

“என்னைப் பாக்க வர்றானா? ஏன்...? இதெல்லாம் உனக்கு எப்படித் தெரியுது?” அரசியால் அவள் சொல்வதை நம்பவும் முடியவில்லை, நம்பாமல் இருக்கவும் முடியவில்லை.

“இதென்னவோ பூர்வ ஜென்ம பந்தம் மாதிரி இருக்கு” அரசியை வெறித்தாள்.

இதை அரசியும் கொஞ்சம் ஒத்துக்கொள்ள வேண்டி இருந்தது. முதல்நாள் கல்லூரியில் அடியெடுத்து வைத்த அன்று, அடுத்த சில நொடிகளிலேயே அரசியைப் பார்த்த

ஆனந்தி, அவளாகவே வந்து, அவளை அரசி என அழைத்து பேசினாள்.

சொல்லப்போனால் ஆனந்தி அந்த நொடி தன்னை மீறி அவளிடம் உரையாடினாள் என்று சொல்வதுதான் சரியாக இருக்கும். அப்பொழுதெல்லாம் அவளுக்கு எந்த கனவோ, குரலோ கேட்டது இல்லை. ஆனால், அரசியைப் பார்த்தவுடன், ஏதோ ஒரு சக்தி அவளை, அவளிடம் இழுத்து வந்தது.

ஆனந்தி தன்னை அரசி என அழைத்துப் பேச, “என்னை உனக்கு முன்னாடியே தெரியுமா?” அரசி கேட்ட பிறகுதான், தான் அவளிடம் பேசிக் கொண்டிருப்பதையே உணர்ந்தாள்.

திடுக்கிட்டு தெளிந்தவள், “இ...ல்..ல... ஆனா... உன்னை எங்கேயோ பாத்த மாதிரி ஒரு ஃபீல்... அதான்...” ஒரு மாதிரி சம்மாளித்தாள். கூடவே, அரசியாலும் ஆனந்தியை தவிர்க்க முடியவில்லை. முதல் நாளே நட்பானவர்கள் அந்த கல்லூரியிலேயே அவர்களாகத்தான் இருக்கும்.

சொல்லப்போனால் அவர்களை மீறி, அவர்கள் நட்பானார்கள் என்றுதான் சொல்ல வேண்டும்.

“இன்னைக்கு காலையில் யார் மூஞ்சியில் முழிச்ச? நடக்குறது எல்லாம் வில்லங்கமாவே இருக்கு. இதெல்லாம் எங்கடி போய் நிக்கும்...?” நிஜமாகவே கவலை கொண்டாள் அரசி.

“அரசி... நிஜமாவே எனக்குள் என்ன நடக்குதுன்னு சுத்தமா தெரியலை. நேத்து நைட் துவங்கி, இப்போ இந்த நிமிஷம் வரைக்கும் நான் என் கட்டுப்பாட்டிலேயே இல்லை. என் மூளையும், மனசும் ரெண்டா பிரிச்சு நிக்குது.

“இந்த கண்ணுக்குள் வர்ற காட்சி எல்லாமே வேற எங்கேயோ நடக்குறதுதான் தெரியுது. கூடிய சீக்கிரம் எதுவோ நடக்கப் போகுது, அது மட்டும் நல்லா தெரியுது...”

வியர்வை வழியும் தன் முகத்தை கர்ச்சீப்பால் துடைத்துக் கொண்டாள்.

“ஆதி, சொல்றேன்னு தப்பா நினைக்காதே… இதை நாம பெரியவங்க கிட்டே கொண்டு போகணும். இதை இப்படியே வளர விடுவது நல்லதுக்கே இல்லை…” கவலையானாள்.

“இல்ல அரசி, முதல்ல இது என்னன்னு நான் தெளிவாகணும். இது ஜஸ்ட் கனவா? இல்லைன்னா வேற ஏதாவதான்னு நான் கண்டு பிடித்தே ஆகணும். இந்த டென்ஷனை இப்படியே வளர விடுவது எனக்கு சரியா படலை”.

“என்னடி சொல்ற…? ஆனா ஏதோ குரல் கேக்குது, ஆனால் அதை தெளிவா கேக்க முன்னாடி அந்த விசில் சத்தம் உன்னை கலைக்குதுன்னு சொல்லிட்டு இருந்தியே, இப்போ மட்டும் எப்படி கண்டு பிடிப்பியாம்? என்னால் உனக்கு ஏதாவது உதவ முடியும்னா கண்டிப்பா செய்திருப்பேன்” அவளால் உதவ முடியவில்லையே என வருத்தமாக இருந்தது.

“சரியா சொன்ன… இன்னைக்கு நைட் காதுக்குள் பஞ்சை வச்சுட்டு படுக்கறேன். அப்போ யார் என்னை கலைக்கறாங்கன்னு பாப்போம்” அவள் ஒரு முடிவுக்கு வந்தாள்.

“ஏய்… ஒரு வேளை அந்த விசில் சத்தம் கேக்கறதே ஏதாவது நன்மைக்கா இருந்தால்? நீ எதையாவது கண்டு பிடிக்கறேன்னு சிக்கலுக்குள் போய் மாட்டிக்காதே” அவளுக்கு எதுவும் ஆபத்து வந்துவிடக் கூடாது என்பது மட்டுமே அவளது கவலையாக இருந்தது.

“இல்ல அரசி… எனக்கு என்னவோ அந்த விசில் வேலை கூட, இந்த ரமணன் வேலையா இருக்குமோன்னு தோணுது. எனக்கு எதுவோ நினைவுக்கு வரக் கூடாதுன்னு அவன் தடுக்கப் பாக்கறான். அதை என்னன்னு நான்

தெரிஞ்சே ஆகணும்” அவள் குரலில் ஒருவித தீவிரம் எட்டிப் பார்த்தது.

“அரசி, நீ எதுக்கும் அந்த ரமணன் கிட்டே கொஞ்சம் ஜாக்கரதையா இரு. நமக்கு முன்னாடியே அவன் ஆட்டத்தை ஆரம்பிச்சுட்ட மாதிரி இருக்கு” அரசிக்கு என்னவோ மர்மகதை கேட்பதுபோல் இருந்தது.

அவர்கள் பேசப் பேச, அனைத்தையும் அடுத்த பக்கம் நின்று கேட்டுக் கொண்டிருந்த ரமணனை அவர்கள் அறியவே இல்லை. அதைவிட, அவன் கண்களில் தெரிந்த வன்மம், ஆனந்தியை கொன்று போடும் வேகம், அனைத்தையும் சூழ்நிலை கருதி அடக்கிக் கொண்டான்.

ஆனால், அடுத்ததாக தான் செய்ய வேண்டிய விஷயங்களை இன்னும் வேகமாக துரிதப்படுத்த வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து கொண்டான்.

***

# நிழல் – 5

கல்லூரியில் இருந்து வந்தது முதல், தன் குழப்பங்களை பெற்றவர்களுக்கு காட்டாமல் மறைக்க மிகுந்த பாடுபட்டாள் ஆனந்தி. ‘எப்படியாவது உறங்கச் செல்லும் வரைக்கும் சம்மாளிக்க வேண்டும்’ என்பது மட்டுமே அவளது எண்ணமாக இருந்தது.

ஏதாவது ஒன்று அவள் நினைவுக்கு வந்துவிட்டால் பரவாயில்லை, என்னும் நிலை அவளுக்கு. தன் வாழ்வில் நிகழும் வினோத சம்பவங்களுக்கு ஒரு முடிவு வந்துவிட்டால் நன்றாக இருக்குமே என்னும் எண்ணம்.

ஆனால், தன் நினைவுகளில், கனவுகளில் தொடர்புடையவை எல்லாம், அரசியிடம் சென்று நிற்பதைத்தான் அவளால் கணிக்க முடியவில்லை. ‘என் வாழ்வின் சம்பவங்களில் நான் இல்லாமல், எப்படி அரசி சம்பந்தப்படுகிறாள்?’ அவள் மனத்தைக் குடைந்த விஷயம் இதுதான்.

தங்களுக்குள் அப்படி என்ன நடந்திருக்கும்? என்பதை அறிய பெரும் ஆவலாக இருந்தாள். அந்த ரமணன் வேறு அவர்களையே சுற்றி வருவது அவளுக்கு அவ்வளவு சரியாகப் படவில்லை.

ஒருவேளை அவனால் அரசிக்கு ஏதும் ஆபத்து வரவிருந்தால்? அதை தன்னால் தடுக்க முடிந்தும், அதைச் செய்யாமல் போய்விட்டால் அவளை அவளாலேயே மன்னிக்க முடியாது.

எப்படியாவது இதற்கெல்லாம் ஒரு தீர்வு கிடைக்க வேண்டி, அன்றைய இரவை ஆர்வமாக எதிர்பார்த்தாள். தீர்வுகள் கிடைக்குமா என்று அவளுக்குத் தெளிவாகத் தெரியவில்லை. ஆனால், முயற்சிக்காமல் தோல்வியை ஒத்துக்கொள்ள முடியாதே.

அன்று படுக்கையில் படுக்கும் முன்னர், காதுக்குள் கொஞ்சம் பஞ்சை வைத்து அழுத்தமாக அடைத்துக் கொண்டவள், தலைக்கு குல்லாவையும் மாட்டிக் கொண்டவள், படுத்துக் கொண்டாள். அக்காவின் முனைப்புகளைப் பார்த்த அம்முவோ, குளிருக்கு அப்படி படுத்திருக்கிறாள் என எண்ணிக் கொண்டு, தானும் படுத்துக் கொண்டாள்.

ஆனந்தி கொஞ்சம் கொஞ்சமாக உறக்கத்துக்குள் அமிழ, நேரம் பன்னிரண்டு மணியை நெருங்கிக் கொண்டிருந்தது. சற்று நேரத்தில் அவள் எதிர்பார்த்து காத்திருந்த அந்த குரல் அவளைத் தீண்டியது.

‘ஆனந்தவல்லி... ஆனந்தவல்லி...’ மென்மையாக அழைக்க, முன்னர் சற்று பயந்து நடுங்கும் ஆனந்தி, இன்று அந்த குரலுக்காகவே காத்திருந்ததாலோ என்னவோ பயம் வரவில்லை. மாறாக, ‘ம்...’ அந்த குரலுக்கு செவிமடுக்கத் துவங்கினாள்.

வழக்கமாக அவளது பெயரை மட்டுமே மீண்டும் மீண்டும் அழைக்கும் அந்த குரல், இன்று அவள் தன்னை கவனிக்கிறாள் எனத் தெரியவே, “ஆனந்தவல்லி... நான் சொல்வதைக் கேள்... நீ இதை செய்யக் கூடாது. அவ்வாறு செய்தால், என் நேசத்தை நீ இழக்க வேண்டி இருக்கும்...” மிகவும் தெளிவாக அது உரைக்க, அந்த வார்த்தைகளுக்கான அர்த்தம் புரியவே அவளுக்கு சற்று நேரமானது.

கூடவே, அவளது இதழ்களோ... “அமிழ்தன்...” மெதுவாக, மென்மையாக உச்சரிக்க, அந்த பெயர் அவளுக்குள் பல தாக்கங்களை நிறைவேற்றியது.

அந்த குரல் தன்னை எதையோ செய்ய விடாமல் தடுப்பது புரிய, அது என்னவென்று அவளுக்குத் தெரியவில்லை. ஆனால், கனவில் அந்த வாக்குவாதம் தொடர்ந்தது.

“என்னால் அதைச் செய்யாமல் இருக்க முடியாது. தாங்கள் தடுத்தாலும் நான் அதைச் செய்தே தீர்வேன்…” அவளது குரலில் பிடிவாதம் ஓங்கி ஒலித்தது.

“என் நேசத்தை விட, உன் நட்பு மட்டுமே உனக்கு பெரிதாகப் போய்விட்டதா?” அமிழ்தனின் குரலில் கோபம் கூட, அந்த கோபத்தை ஆனந்தவல்லி கணக்கிலேயே கொள்ளவில்லை.

“சுயநலத்துக்காக நட்புக்கு துரோகம் இழைக்க என்னால் ஆகுமா?” அவனிடம் கேட்க, குரல்களை மட்டுமே கேட்டவளுக்கு அமிழ்தனை காண முடியவில்லை.

அந்த நட்பு என அவள் குறிப்பிடுவது அரசியையா? அவளுக்கு உதவுவதை அமிழ்தன் தடுக்கிறானா? இங்கே ஆனந்தி தனக்குள் கேட்டுக் கொள்ள,

“நீ இவ்வாறு செய்தால் நான் உன்னை விட்டு விலகிச் சென்றுவிடுவேன்” அவன் சொல்ல,

“அது தங்களால் கூடாத காரியம் என எனக்குத் தெரியும்” ஆனந்தவல்லியின் குரலில் இருந்த பாவனை, உன் நேசம் எனக்குத் தெரியும் என்ற கர்வம்… இங்கே ஆனந்தியின் தேக முடிகள் அனைத்தும் சிலிர்த்துக் கொண்டது.

“அந்த உன் நம்பிக்கையால்தான் ராஜகுருவின் கட்டளையையும் மீறி இதைச் செய்யத் துணிந்தாயா?”.

“ஒரு பெண்ணின் மனம் மற்றொரு பெண்ணுக்குத்தான் தெரியும். இப்பொழுது என்னை விட்டு விலக நினைக்கும் தாங்கள், அந்த முடிவை நான் எடுத்தால் அமைதியாக இருப்பீர்களா?” அவனிடம் கேட்க,

“அடிக்கள்ளி… இந்த உன் ஆணவம் தானே என்னை உன்மேல் பித்துக் கொள்ள வைத்தது…” சட்டென அவள் முகம் முழுக்க ஈரம் படியும் உணர்வு. அது எதனால் ஏற்பட்டது என ஆனந்தி உணர, பட்டென கண் திறந்தவள், வேகமாக

தன் முகத்தை இரு கரங்களால் அழுத்தமாக துடைத்துக் கொண்டாள்.

இந்த நிமிடம் அவளால் எதையும் உணரமுடியவில்லை என்றாலும், அந்த வெம்மையும், ஒருவித குளுமையும் அடிமனம் வரைக்கும் தீண்ட, ‘அமிழ்தன்... அமிழ்தன்...’ அந்த பெயரை தனக்குள் மீண்டுமாக சொல்லிக் கொண்டாள்.

‘ச்சே... ஒரு முத்தம் கொடுத்து என் கனவை கலைத்து விட்டானே’ எண்ணியவளின் மனம் படபடத்தது.

அவளுக்கு நினைவுக்கு வந்த விஷயங்களை, கேட்ட விஷயங்களை கோர்க்க முயன்றாள். ஆனால், அது ஒரு காதலர்களுக்கு நடுவிலான ஒரு சாதாரண உரையாடலாக மட்டுமே இருந்திருக்க, அதிலிருந்து எதையும் அவளால் கணிக்க முடியவில்லை.

அதில் புதிதாக கேட்ட ‘ராஜகுருவின் கட்டளை’ என்ற வாசகம் மட்டும் வித்தியாசமாக ஒலிக்க, முன்ஜென்ம விஷயங்கள்தானோ இவை?’ தன்னையே கேட்டுக் கொண்டாள்.

இவையெல்லாம் இப்பொழுது மட்டும் தொடர்ச்சியாக நினைவுக்கு வருகிறது என்றால்... நிச்சயமாக எதுவோ நடக்கப் போகிறது. அது நல்லதாக இருக்கப் போவதில்லை என அவளது அடிமனம் உரைக்க, அப்படியே அமைதியாக படுத்துக் கொண்டாள்.

வழக்கமாக ஒருமுறை கண் விழித்துவிட்டு மறுபடியும் தூங்கினால், இரண்டாம் முறையாக அவளுக்கு கனவுகள், குரல் கேட்பது இல்லை. ஆனால், அன்று... தூக்கத்திலேயே யாரோ அழும் ஓசை கேட்க, உறக்கம் கலைந்து எழுந்தவளின் கடைவிழியோரம் கண்ணீர் கோடாக இறங்கி இருந்தது.

‘என்ன இது? கனவில் அழுதால், இப்பொழுது எப்படி என் கண்ணில் ஈரம்?’ குழப்பம் தெளிய முயன்றவளுக்கு, மேலும்

குழம்பிப் போன உணர்வு. அதற்கு மேலே தூங்க முடியாமல் படுக்கையில் எழுந்து அமர்ந்து கொண்டாள்.

கல்லூரிக்குச் சென்று அனைத்தையும் உடனே அரசியிடம் சொல்ல வேண்டும்போல் இருந்தது. அந்த நேரமும் வர, கல்லூரிப் பேருந்தில் ஏறியவளுக்கு, அங்கே அரசி இல்லாமல் போகவே சோர்ந்து போனாள்.

‘கல்லூரிக்கு ஏன் வரவில்லை? அப்படியே வரவில்லை என்றால் போன் செய்து சொல்வாளே, அதையும் செய்யவில்லையே…’ தனிமையில் அமர்ந்து நகம் கடித்தாள். வேகமாக தன் அலைபேசியை எடுத்தவள், அரசிக்கு அழைக்க, அவளது அலைபேசியோ அணைத்து வைக்கப் பட்டிருந்தது.

‘ஏதோ சரியில்லை…’ அவளது உள்ளுணர்வு உணர்த்த, அரசியின் வீட்டுக்குச் செல்ல முடிவெடுத்தாள். கல்லூரிப் பேருந்தில் இருந்து பாதியில் இறங்க முடியாது என்பதால், கல்லூரிக்குச் சென்றவள், அங்கே இருந்து அரசியின் வீட்டுக்கு கிளம்பிச் சென்றாள்.

நாளைக்கு பார்த்துக் கொள்ளலாம் என்று கூட அவளால் பொறுமையாக இருக்க முடியவில்லை. இன்று வரைக்கும் அரசியின் வீட்டுக்கு என்ன, தனியாக ஒரு கடைக்கு கூட அவள் சென்றது கிடையாது. ஆனால், இன்று அப்படி அவளால் இருக்க முடியவில்லை.

தனக்கு நேரம் மிகவும் குறைவாக இருப்பதாக அவளது உள்ளுணர்வு சொல்லிக் கொண்டே இருந்தது. எனவேதான் அனைத்தையும் தானே எதிர்கொள்வது என முடிவெடுத்தாள்.

வீட்டுக்குச் சென்று தாயை அழைத்துச் செல்லலாம் என்றால், அவரோ தனக்கு ஏதோ ஒன்று ஆகிவிடப் போவதுபோல், எப்பொழுதும் கலவரமாகவே இருக்க, தனியே செல்ல முடிவெடுத்தாள். ஒரு ஆட்டோவை

அமர்த்திக் கொள்ளலாம் என்றால், அவன் சொன்ன ஐநூறு ரூபாய் அவள் வயிற்றில் புளியைக் கரைத்தது.

எனவே பாதி தூரம் பேருந்தில் பயணம் செய்து, சென்றவள், அங்கிருந்து ஆட்டோ பிடிக்க முயன்றாள். ஆனால், அவள் சொன்ன அட்ரஸைக் கேட்ட அனைவருமே, அங்கே ரோட் மிகவும் மோசமாக இருக்கும் என்பதால், வர மறுத்தார்கள்.

நடந்து செல்லலாம் என்றால், எந்த பக்கம் செல்வது என்று கூட தெரியாமல் இருக்கையில், எப்படிச் செல்வதாம்? மீண்டுமாக அவளது அலைபேசியை தொடர்புகொள்ள முயல, அப்பொழுதும் அது அணைத்து வைக்கப் பட்டிருப்பதாகவே சொன்னது.

‘இங்கே வந்தும் வேஸ்ட்டா?’ எண்ணியவள், வீட்டுக்கே திரும்பிச் செல்லலாம் என முயல்கையில், சற்று தூரத்தில் ஒரு கார் வருவதைக் கண்டாள். அடுத்த நிமிடம், அவளது கால்கள் தானாகவே சாலைக்கு நடுவில் பயணிக்க, அப்படியே அசையாமல் நின்றாள்.

எதற்காக அப்படிச் செய்கிறாள் என்று அவளுக்கே தெரியவில்லை. ஆனால், அதை செய்யச் சொல்லி அவளது உள்ளுணர்வு கட்டளை இட்டது.

சாலைக்கு குறுக்காக அவள் அப்படி வந்து நிற்பாள் என எதிர்பாராத அவன், சட்டென வேகம் குறைத்து அவள் அருகில் வந்து காரை நிறுத்தினான். கார் தன் அருகில் வந்து நின்ற பிறகுதான் தெளிந்தவள், அதில் இருந்து இறங்கி வந்தவனைப் பார்த்து அப்படியே உறைந்து நின்றுவிட்டாள்.

அவளது இதழ்களோ, “தர்மா…” தன்னை மீறி உச்சரிக்க, கோபமாக இறங்கி அவள் அருகே வந்தவன், அவள் தன் பெயரைச் சொல்லி அழைக்கவே, ஒரு நொடி நிதானித்தான்.

‘இவளுக்கு எப்படி என்னைத் தெரியும்?’ எண்ணியவனுக்கு அவளைப் பார்த்த நினைவு சுத்தமாக இல்லை.

அவளிடம் அவள் யார் எனக் கேட்க முயல, “அரசியை காணத்தானே... நான் வழி காட்டுகிறேன்...” உரைத்தவள், அவனைத் தாண்டிச் சென்று காரின் கதவைத் திறந்து ஏறிக்கொள்ள, அதிர்ச்சி பலமாக தாக்க, குழப்பமான மனநிலையில் காருக்கு அருகில் சென்றான்.

***

# நிழல் – 6

கா ரிலிருந்து இறங்கியவனை பார்த்தவுடன், ஆனந்தியின் கண்களுக்குள், சட்டென சில காட்சிகள் மின்னி மறைந்தது. “ஆனந்தவல்லி, இளவரசியை எப்படியாவது கோவிலுக்கு அழைத்து வந்துவிடு. அவளிடம் சில முக்கியமான விஷயங்கள் பேச வேண்டி இருக்கிறது” அவனது குரலும், அதற்கு சம்மதமான, ஆனந்தவல்லியின் குரலும் காதுக்குள் ஒலிக்க, நொடிகளுக்குள் அவன் யார் என்பதை உணர்ந்து கொண்டாள்.

‘அரசியின் காதலன்…’ அவள் நினைக்க, அவளது நினைப்பு அவனுக்கு எங்கே கேட்கும்?

வழியில் சந்தித்த ஒரு பெண், அதுவும் முறையாக லிப்ட் கூட கேட்காமல், நடு வழியில் நின்று காரை மறித்துவிட்டு, தன்னைப்பற்றிய ஒரு அறிமுகம் கூட செய்து கொள்ளாமல், அவனை பெயர் சொல்லி அழைத்துவிட்டு, உன்னை நான் அரசியிடம் அழைத்துச் செல்கிறேன் வா’ எனச் சொன்னால் அவன் என்னவென்று நினைக்க?

அதிலும் அவள் சட்டமாக காருக்குள் ஏறி அமர்ந்துகொண்ட விதம், கோபத்துக்குப் பதிலாக ஒருவித குழப்பத்தையே அவனுக்கு அளித்தது. ஒரு வயதுப்பெண், அதுவும் அழகான பெண், இப்படி புத்தி பிசகி இருக்கிறாளே என்றுதான் அவனுக்குத் தோன்றியது.

அவள் உடுத்தியிருந்த உடை, அவளது பாவனை, எதுவும் அவளை புத்தி பிசகியவளாக காட்டவில்லை என்றாலும், அவள் நடந்து கொண்ட முறை, அவனை அப்படி எண்ணத் தோன்றியது.

‘இவளை இப்படியே ரோட்டில் அலைய விட்டு விட்டு, இவளைப் பெற்றவர்கள் என்ன செய்கிறார்கள்?’ என்றும் எண்ணிக்கொண்டான். கூடவே, ‘இவ்வளவு அழகான

பெண்ணுக்கு, இப்படி ஒரு நிலை வந்திருக்க வேண்டாம்' எனவும் அனுதாப பட்டான்.

அவனது குழப்பத்தை கண்டுகொள்ளாமல், "இன்னும் என்ன பண்றீங்க, சீக்கிரம் வாங்க? அரசிக்கு ஏதோ ஆபத்து, நாம போய் அவளுக்கு ஹெல்ப் பண்ணனும். நீங்க வந்தால்தான் முடியும்" அவனை அவசரபடுத்தினாள்.

அவளது பேச்சு இன்னும் அதிகமாக அவனை குழப்ப, அவளருகே வந்தவன், அவள் பக்க கதவை திறந்து, "உங்க வீடு எங்க இருக்கு? நீ தனியாகவா வந்த?" அவளிடம் கேட்டான்.

அவன் எதற்காக அப்போது அதை கேட்கிறான் எனப் புரியாமல், "அரசியை பார்க்கப் போகலாம்ன்னு சொல்லிட்டு இருக்கேன். நீங்க என்னன்னா, என்னை விசாரணை பண்ணிட்டு இருக்கீங்க. உங்களுக்கு அவசரம்னு புரியலையா?" அவனிடம் கேட்டாள்.

'என்னடா இது எனக்கு வந்த சோதனை?' என அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"அவங்க வீட்டு அட்ரஸ் இருக்கா?" அவளிடம் கேட்டான். 'வா என சொன்னவுடன், அவளை அழைத்துக் கொண்டு எப்படி செல்வதாம்? பிறகு யாராவது, அவளைக் கடத்தி விட்டான் என, போலீசில் புகார் கொடுத்தால் அவன் என்ன செய்வது? எனவே அப்பொழுதும் தயங்கினான்.

அவளோ, தன் அலைபேசியை இயக்கி, அதில் இருந்த அரசியின் வீட்டு முகவரியை எடுத்து, அவனுக்கு முன்பாக காட்டினாள். "இங்கே தான் போகணும், இப்போ போகலாமா? வாங்க…" அவனை அழைத்தாள். இப்பொழுது இருக்கும் நிலையில், அவளது கரத்தில், ஒரு அலைபேசி இருப்பதும், அதில் ஒரு விலாசம் இருப்பதுமே, அவனுக்கு போதுமானதாக இருந்தது.

அந்த முகவரியை ஒருமுறைக்கு இருமுறை, நன்றாகவே வாசித்துப் பார்த்தான். அது அவனுக்கு நன்றாக தெரிந்த ஏரியா. அதைவிட அந்த முகவரியில் இருந்த, கமலக்கண்ணனை அவனுக்கு நன்றாகவே தெரியும். அதிலும் அவருக்கு ஒரு மகள் உண்டு என்பது வரைக்கும் அவனுக்கு தெரியும்.

அவன் ஜான்சன் பொருட்களை விற்பனை செய்யும் கடைகளுக்கு பொருட்களை சப்ளை செய்யும் டீலர் என்பதால், கடை வைத்திருக்கும் பெரும்பான்மையானவர்களை அவனுக்கு தெரியும். அதிலும் கமலக்கண்ணனின் அலைபேசி எண் கூட அவனிடம் இருந்தது.

‘ஒருவேளை, அவள் இப்படி தொலைந்து போவாள் எனத் தெரிந்தே, இப்படியான ஏற்பாட்டை, அவளது வீட்டு ஆட்கள் செய்திருக்கிறார்களோ என எண்ணினான். ஆனால் இவளது வீட்டு விலாசத்தை எழுதாமல், அடுத்தவர் வீட்டு விலாசத்தை ஏன் எழுதி வைத்திருக்கிறாள் என அவனுக்கு புரியவே இல்லை.

“இந்த கமலக்கண்ணன் யாரு? அவர் உங்களுக்கு சொந்தமா?” அவளைப் பற்றி கொஞ்சமாவது தெரிந்துகொள்ள முடியுமா என பார்த்தான்.

“அவர் அரிசியோட அப்பா” அவள் சொல்ல, ‘ஓ... கமலக்கண்ணனின் மகள் பெயர் அரசி?’ தனக்குள் கேட்டுக்கொண்டான். அதன் பிறகும் கூட, அவனுக்கு காரை எடுக்க கொஞ்சம் உதறலாகத் தான் இருந்தது,

“உங்க கூட வேற யாரும் வரலையா?” மீண்டும் அவன் கேட்க, காரை விட்டு இறங்க முயன்றாள்.

“இல்ல, நீங்க வராதீங்க... நானே பாத்துக்கிறேன்....” அவள் இறங்க முயல, வேகமாக கதவை பூட்டினான். இந்த நிலைமையில், அவளை தனியாக விட்டுச் செல்ல அவனுக்கு மனம் வரவில்லை.

வேகமாக அவளைத் தடுத்தவன், தன் அலைபேசியிலிருந்து கமலக்கண்ணனை தொடர்பு கொள்ள முயன்றான். ஆனால் அவரது அலைபேசி எண் அணைத்து வைக்கப்பட்டிருக்க, அவர்கள் வீட்டுக்கே சென்று பார்ப்பது என முடிவெடுத்தான்.

காரைச் சுற்றி வந்து, ஓட்டுனர் இருக்கையில் அமர்ந்தவாறு, சுற்றிலும் வெளியே பார்வையை செலுத்தினான். இறுதி நிமிடத்திலாவது, அவளைத் தேடி, யாராவது வந்துவிட மாட்டார்களா என்று இருந்தது. அவன் செய்வது சரிதானா என்ற குழப்பம், அப்பொழுதும் அவனுக்கு இருந்தது.

காரை வேகமாக செலுத்தி, கமலக்கண்ணனின் வீட்டின் முன்னால் காரை நிறுத்த, காரிலிருந்து இறங்கியவள், “நீங்களும் வாங்க...” அவனை அழைத்தாள்.

கமலக்கண்ணனுக்கும் அவனுக்குமான உறவு தொழில் சம்பந்தப்பட்டது. அப்படி இருக்கையில், வீடு வரைக்கும் வருவது அவனுக்கு சரியாகத் தோன்றவில்லை.

எனவே, “நீங்க போங்க... நான் இங்கேயே இருக்கிறேன்” தன்மையாகவே மறுத்தான்.

“நீங்க இங்கேயே இருங்க, போயிடக் கூடாது” அவனிடம் கட்டளை இட்டு விட்டே சென்றாள். அவனுக்கும் அங்கே இருந்து செல்லும் எண்ணமெல்லாம் இல்லை.

ஒருவேளை அங்கே இருப்பவர்களுக்கு, அவளைத் தெரியாமல் போய்விட்டால் என்ன செய்வது? எனவே அங்கேயே இருந்தான். அரசியின் வீட்டின் முன்னால் நின்று, அவள் அழைப்பு மணியை அழுத்த, ‘என்ன நடக்கும்?’ என அசையாமல் பார்த்திருந்தான்..

உள்ளே இருந்து வந்த ஒரு வயதான பெண்மணி, உடனே கதவைத் திறந்து அவளை உள்ளே அழைத்துக் கொள்ள, நிம்மதியாக மூச்சு விட்டான். ஆனந்தியோ உள்ளே செல்லாமல், அவனைக் கைகாட்ட, திடுக்கிட்டான்.

“நீ உள்ளே போம்மா… நான் அவரை அழைச்சிட்டு வர்றேன்…” அரசியின் தாய் விஜயா அவனை நோக்கி வந்தார். அவர் வரவே, “இப்ப வந்த பொண்ணு…” அவன் இழுக்க, “என் பொண்ணோட ப்ரண்டுதான்… அவ தனியே எங்கேயுமே போனது கிடையாது என்று என் பொண்ணு சொல்லி இருக்கா. இவ்வளவு தூரம் அவ எப்படி தனியே வந்தான்னு யோசித்தேன்.

“அவளை உனக்கு எப்படிப்பா தெரியும்?” கடையில் வைத்து, விஜயாவையும் அவன் பார்த்திருக்கிறான் என்பதால், சாதாரணமாகவே கேட்பது போல் இருந்தாலும், அதில் ஒரு ஆராய்ச்சி பார்வை இருந்ததை அவன் உணர்ந்து கொண்டான்.

“மெயின்ல ஆட்டோ புடிக்க நின்னுட்டு இருந்தா. இந்த ஏரியாவுக்கு தான் ஆட்டோக்காரன் எவனும் வரமாட்டானே, உங்க அட்ரஸ்சை சொல்லி விசாரிக்கவே, நான் இந்தப்பக்கம் தான் போறேன்னு சொல்லி அழைச்சுட்டு வந்தேன்…

“சார்க்கு போன் போட்டால் போகவே இல்லை… அதான் நானே அழைச்சுட்டு வந்தேன்” அவன் சொல்லவே அதை அவரும் ஏற்றுக்கொண்டார். ஆட்டோக்கள் எதுவும், அவர்கள் ரூட் வருவது இல்லை. அப்படியே வந்தாலும், இரண்டு மடங்கு பணம் கொடுத்தால் மட்டுமே வருவார்கள்.

“சரிப்பா இவ்வளவு தூரம் வந்துட்டு, வாசலிலேயே இருந்தால் எப்படி? உள்ளே வா…” அவர் அழைக்கவே,

“இல்லை எனக்கு கொஞ்சம் வேலை இருக்கு. நான் கிளம்பறேன்…” அப்படியே கிளம்பிவிட்டான்.

வீட்டுக்குள், தன் அறையில் நின்ற தோழியை நம்பமுடியாமல் பார்த்தாள் அரசி. ஆனந்தி வீட்டை விட்டு வெளியே வருவதாக இருந்தாலேஅவளது துணைக்கு, அவளது தாய் வருவார். அப்படி இருக்கையில், இவ்வளவு தூரம் அவள் வந்திருக்கிறாள் என்றால், அது தனக்காக

மட்டுமே என்பது புரிய, ஓடிவந்து தோழியை அணைத்துக்கொண்டாள்.

“ஏன்டி இன்னைக்கு காலேஜுக்கு வரல? போனை வேற ஏன் ஆப் பண்ணி வச்சிருக்க? உனக்கு எத்தனை முறை கால் பண்ணுவது?” படபடவென பொரிந்தாள்.

“ஆதி... நானே உன்கிட்ட எப்போ பேசுவோம்ன்னு தவிச்சு போயிருக்கேன். இங்கே என்ன நடந்தது தெரியுமா...?” அவள் கேட்டுக் கொண்டிருக்கையிலேயே, விஜயா கையில் காபியோடு அறைக்குள் வந்தார்.

“என்னம்மா உன் பிரண்டு அதுக்குள்ள உனக்கு போன் பண்ணி விஷயத்தை சொல்லிட்டாளா? எங்களுக்கு முன்னாடியே தெரிந்திருந்தால், உன்னை காலையிலேயே இங்கே வரச் சொல்லி இருப்போம். சரி நீங்க பேசிட்டு இருங்க, நான் வர்றேன்...” அவர் கிளம்பி விட தோழியை குழப்பமாக ஏறிட்டாள்.

“என்னடி? ஆன்ட்டி என்னமோ சொல்லிட்டு போறாங்க? ஏன் இப்படி கம்முனு இருக்க?” அவளை உலுக்கினாள்.

தாய் வெளியே செல்லவே, வேகமாக சென்று, தன் அறைக்கதவை சாத்தியவள், “ஆதி நீ சொன்னது சரியாப் போச்சு. அந்த ரமணன் அவன் வேலையை காட்டி விட்டான். இன்னைக்கு காலையில், அவனோட பேரன்சை கூட்டிட்டு, இங்க வீட்டுக்கே வந்துட்டான்...” அதிர்ச்சி விலகாமல் உரைத்தாள்.

“இங்க வந்தான்னா? அவன் எதுக்கு இங்கே வந்தான்?” அவளுக்குப் புரியவே இல்லை.

“என்னை பெண் கேட்டு வந்தான்...” அவள் சொல்ல, அதிர்ச்சியில் வாயடைத்து நின்றுவிட்டாள்.

“என்னடி சொல்ற? நான் இப்போதான் உன்னோட கடந்தக்கால காதலனை சந்திச்சிட்டு வரேன், நீ என்னன்னா

இப்படி ஒரு குண்டை தூக்கி போடுற?” அவள் சொல்ல,

“என்னது என்னோட கடந்தகால காதலனா? நீதான்டி இப்போ குண்டை போடுற. இங்க என்னதாண்டி நடக்குது? தயவுசெய்து எதையாவது கொஞ்சம் தெளிவா சொல்லு. அந்த ரமணன் வந்து நின்ன அதிர்ச்சியே இன்னும் தெளியலை. நீ என்னன்னா, புதுசா ஏதோ கதை சொல்ற. எனக்கு எதுவுமே புரியலை” தலையில் கைவைத்து அப்படியே சோர்ந்து அமர்ந்துவிட்டாள்.

“அரசி, எனக்கே இன்னும் எதுவும் தெளிவா தெரியலை. ஆனா கூடிய சீக்கிரம் தெரிஞ்சிப்பேன்…”

“நீ இருக்க வேகத்துக்கு, எனக்கு கல்யாணம் முடிஞ்சு, குழந்தையும் பிறந்திடும் போல…” கடுப்பானாள்.

“அவனும், அவன் மூஞ்சியும்… இங்கே வந்து என்னவெல்லாம் பேசினான் தெரியுமா? கொஞ்சம் விட்டு இருந்தா, எங்க அப்பா என்னை இப்போவே அவனுக்கு தாரைவார்த்துக் கொடுத்து இருப்பார்…” நடந்து முடிந்த நிகழ்வுகளின் தாக்கம் அவளை அவ்வாறு பேசத் தூண்டியது.

“என்னது? என்னடி சொல்ற?”.

“ம்… நொன்ன சொல்றாங்க. இத்தனை நாள் நீ ஏதோ கதை சொல்றன்னு பேசாமல் அசால்ட்டா இருந்தேன். ஆனா இப்போ தான் தெரியுது, என்னைய வச்சு நீ ஏதோ விளையாடி இருக்கன்னு. ஏதாவது செய் ஆதி. எனக்கு என்னவோ ரொம்ப பயமா இருக்கு.

“வச்சி செய்வாங்கன்னு கேள்விப் பட்டிருக்கேன்… ஆனா அதை இப்போதாண்டி பாக்கறேன். உன் கதையில் என்னை கோர்த்து விட்டு வேடிக்கை பாக்குற பார்… அப்படியே பூரிச்சுப் போயிருக்கேண்டி. அதெப்படி நீ பேசுறதெல்லாம் அவனுக்குப் புரியுதோ? விடிஞ்ச உடனே இங்கே வந்து

நின்னான் பார்...” தன் தலையிலேயே அடித்துக் கொண்டாள்.

கூடவே, “அவனுக்கு ஏதோ தெரிந்து இருக்கு. இல்லைன்னா அவன் இப்போ வந்திருக்கவே மாட்டான். ப்ளீஸ் ஆதி... நான் உன்னை தான் நம்பி இருக்கேன்” அவள் கரத்தை கெட்டியாக பற்றிக் கொண்டாள்.

“நான் உன்னை காப்பாத்தறேனோ இல்லையோ, உன் காதலர் உன்னை காப்பாற்றுவார். இப்ப கூட, அவர் வெளியே தான் இருக்கார்...” அவள் சொல்ல அவளை கையெடுத்துக் கும்பிட்டாள்.

“அறஞ்சேன்னா பார்... என் காதலனா? நான் கொலைகாரியா மாற முன்னாடி வாயை மூடிடு...

“ஏற்கனவே ஒரு விஷயத்தை ஆரம்பிச்சு, அது வீடு வரைக்கும் வந்து நிற்கிது. இப்போ என்னவோ, என் முன்ஜென்ம காதலன்னு சொல்ற, அவனையும் வாசல்ல நிப்பாட்டி வச்சிருக்க, இங்க என்ன சுயம்வரமா நடக்குது?” நொந்து போனாள்.

“அரசி... எதையும் நான் வேணும்னு செய்யலை... எல்லாம் தானா நடக்குது” கவலையானாள். ஆனந்தியும் ஆசைப்பட்டா அனைத்தையும் செய்கிறாள்? அவளுக்குமே இது எவ்வளவு மன அழுத்தத்தை கொடுக்கிறது என்பது மற்றவர்களுக்கு எப்படித் தெரியும்?

அவள் முகம் வாட உரைக்க, அரசியால் அதைத் தாங்க முடியவில்லை. “சரி அவனை எங்கே...? அவனை எங்கே கண்டு?” ஆயிரம்தான் என்றாலும், தோழி ஒரு விஷயத்தை சொல்கையில் அவ்வளவு சீக்கிரம் அதை தள்ளிவிட அவளால் முடியவில்லை.

ஆனந்தி நடந்த விஷயத்தைச் சொல்ல, பக்கென சிரித்தவள், “உன்னை சரியான லூசுன்னு நினைச்சிருப்பான். இப்படியா முன்ன பின்ன தெரியாத

ஆளோட வண்டியில் ஏறி வருவ?” அவளை கடிந்துகொண்டாள்.

“இல்லடி... அதென்னவோ அவரை அப்படியெல்லாம் சந்தேகப்படவே தோணலை. அவரைப் பார்த்த அந்த நிமிஷம்... அப்படியே மூளை எல்லாம் அடைச்சுடுச்சு. உன்னை வந்து பாக்கணும், அது மட்டும்தான் ஞாபகம் இருந்தது. உன்னைப் பற்றியும் சொல்லியிருப்பேன், ஆனா, எனக்கே தெளிவா எதுவும் தெரியாதப்போ, இப்போ சொல்ல வேண்டாம்னு நினைத்தேன்...” இருவரும் பேசியவாறே வெளியே வந்தார்கள்.

“அம்மா பரதேவதை... அப்படியெல்லாம் அவன்கிட்டே எதையும் உளறி வைக்காதே. இப்போவாவது நீ லூசா இருப்பியோன்னு கொஞ்சம் டவுட்டோட இருப்பான். நீ எதையாவது சொன்ன... கன்ஃபாமே பண்ணிடுவான்...” சொல்லிவிட்டு அரசி சிரிக்க, அவள் முதுகிலேயே நாலு அடி போட்டாள்.

“ஸ்... ஆ... எரும அடிக்காதடி...” போலியாக அலறியவள், வெளியே எட்டிப் பார்த்தாள்.

அங்கே அவனது கார் இல்லாமல் போகவே, “என்னடி... என்னோட லவ்வர் காணாம போய்ட்டார்...” அவள் கேட்க,

“அதெல்லாம் எங்கேயும் போக முடியாது. இங்கே பார்... அவரோட விசிட்டிங் கார்ட், கார்ல தர்மன் என்ற பேரில் இந்த கார்டை பாத்த உடனே சுட்டுட்டேன்...” பெருமை பொங்க உரைத்தாள்.

“அவன்தான் தர்மன்னு உனக்கு எப்படித் தெரியும்?” அவள் கேட்க, “நீதான் அரசின்னு எனக்கு எப்படித் தெரியும் அரசி? அது சரி, நீ என்னை நம்புறியா இல்லையா, எனக்கு அதை மட்டும் சொல்லு...” அவள் கேட்க,

“உன்னை நம்பாமல் வேற யாரை நம்பப் போறேன்? ஆனால், நீ சொல்லும் விஷயங்களை, உன்னை

பெத்தவங்க நம்பணுமே? சும்மா வாய் வார்த்தையா சொன்னால் எல்லாம் யாரும் நம்ப மாட்டாங்க…" அவள் சொல்ல இருவருமே சில நொடிகள் அமைதியானார்கள்.

சட்டென ஒரு யோசனை தோன்றவே, "அரசி, ஆண்ட்டி கிட்டே எனக்கு இப்படி கனவு வருது, குரல் கேக்குதுன்னு சொல்லிப் பார்ப்போம். அவங்க என்ன சொல்றாங்களோ அதன்படி செய்யலாம். இதுக்குள்ளே நீ வர்றன்னு நாம இப்போதைக்கு சொல்ல வேண்டாம் என்ன சொல்ற?" அவள் கேட்க, அரசிக்கும் அப்போதைக்கு வேறு வழி தெரியவில்லை.

"ஆனந்தி, ஒரு விஷயம் எனக்கு நல்லா தெரியும். உங்க அம்மாவுக்கு சாமியார் மாதிரி, எங்க அம்மாவுக்கு நாடி ஜோசியம்… அனேகமா உன்னை அங்கேதான் இழுத்துட்டு போவாங்கன்னு நினைக்கறேன். சொல்லிப் பார்ப்போம்…" இருவரும் ஒரு முடிவுக்கு வந்து, ஆனந்தியின் விஷயத்தை அவர்களிடம் உரைத்தார்கள்.

***

# நிழல் – 7

ஆனந்தி சொன்ன விஷயங்களை சில நிமிடங்கள் செலவு செய்து கேட்ட அரசியின் பெற்றவர்கள், ஒருவர் ஒருவரைப் பார்த்துக் கொண்டார்கள். உலகத்தில் இப்படியும் நடக்க வாய்ப்பு இருக்கிறதா? தங்களுக்குள் கேட்டுக் கொண்டார்கள்.

அதே நேரம், “அங்கிள், ரமணன் சார் இங்கே வந்துட்டு போனதா அரசி சொன்னா… நீங்க என்ன முடிவு எடுத்திருக்கீங்கன்னு நான் தெரிஞ்சுக்கலாமா?” சற்று தயங்கியவாறே கேட்டாள்.

“எங்களுக்கே அவர் இப்படி கேட்டது அதிர்ச்சி தாம்மா… ஆனா அவர் இவ்வளவு விரும்பி வரப்போ, அவருக்கே கட்டிக் கொடுத்தால் நல்லா இருப்பான்னு தோணுது…” விஜயா சொல்ல, உள்ளுக்குள் அதிர்வதை வெளியே காட்டாமல் இருக்க மிகவும் போராடினாள்.

“அப்படி சொல்லிட முடியாதே அங்கிள். இதில் அரசிக்கு சம்மதமா என்று கேட்டீங்களா?” அதென்னவோ ரமணனை அரசி திருமணம் செய்வதை நினைத்துப் பார்க்க கூட முடியவில்லை.

ரமணன் உண்மையானவனாக, நேர்மையானவனாக இருந்திருந்தால், அவனுக்கு நினைவுக்கு வரும் விஷயங்களைப் பற்றி அவர்களிடம் நேரடியாக விவாதித்து இருக்கலாமே. அதை விடுத்து, தானும் தோழியும் பேசிய மறு நாளே, அவளை பெண் கேட்டு வருவது எப்படிப் பட்ட செயல்?

“அவளுக்கு என்னம்மா தெரியும்? அவளுக்கு எது நல்லதுன்னு நாங்கதான் முடிவு செய்யணும்” விஜயா உரைக்க, ஆனந்திக்கு என்ன சொல்வது என்றே தெரியவில்லை.

“இல்ல ஆன்ட்டி… நீங்க உடனே எதுவும் முடிவெடுக்க வேண்டாம். எதுவாக இருந்தாலும் கொஞ்சம் நிதானமா யோசித்து செங்க” அவளால் அதற்குமேல் எதையும் சொல்ல முடியவில்லை. கையில் எந்த ஆதாரமும் இல்லாமல், தன் கனவுகளை நம்பி மட்டும் என்ன செய்ய முடியும்?

“திருமணம் செய்து கொடுப்பதாக இருந்தால், இந்த வருஷம் படிப்பு முடிந்த பிறகுதான் என்று சொல்லிவிட்டேன். அதுக்கு இன்னும் ஒரு வருஷம் இருக்கும்மா…” கண்ணன் சொல்ல, சற்று ஆசுவாசமானாள்.

‘அதற்கு அவன் என்ன சொல்லியிருப்பான்?’ அவளது அடிமனம் குறுகுறுக்க, அதை அவர்களிடம் கேட்டுவிட்டாள்.

“அவர் என்னவோ கல்யாணம் உடனே இருந்தால் நல்லா இருக்கும்னு சொல்றார். கல்யாணம் முடிஞ்ச பிறகும், அவ இங்கேயே இருக்கட்டும், படிப்பு முடிஞ்ச பிறகு அவரோட வீட்டுக்கு வந்தால் போதும்னு சொல்றார்” அவர் சொல்ல, இடைப்பட்ட இந்த நாட்களில் நிச்சயம் எதுவோ நடக்கப் போகிறது என்று அவளுக்குத் தெரிந்தது.

“அதுக்கு நான் ரொம்ப தெளிவா சொல்லிட்டேன். உங்களால் வெயிட் பண்ண முடிந்தால் இந்த ஒரு வருஷம் காத்திருங்க. இல்லையா வேற இடம் பாத்துக்கோங்கன்னு சொல்லிட்டேன்” அவர் சொல்ல, அவன் அப்படியெல்லாம் காத்திருக்க மாட்டானே.

கண்ணுக்குத் தெரிந்த எதிரியோடு போராடலாம்… கண்ணுக்குத் தெரியாத துரோகியோடு எப்படிப் போராட முடியும்? அதிலும் நேராக நின்று மோதாமல், திரைமறைவில் நின்று அடிப்பவனை என்ன செய்ய? இதிலேயே அவனது குணம் தெரிய ஒரு மாதிரி வெறுத்துப் போனது.

ஆனால் அதிரடியாக அவர்களிடம் எதையும் சொல்லாமல் அமைதியாகவே அமர்ந்து கொண்டாள். தனக்கு உண்மைகள் அனைத்தும் தெரிய வேண்டிய நேரம் எப்பொழுது வரும்? அது அவளுக்குத் தெரிந்தே ஆக வேண்டும்.

அவளுக்கு ஒன்று மட்டும் புரியவே இல்லை. பூர்வ ஜென்ம நினைவுகள் வருவதாக இருந்தால், அதில் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் ஏன் வர மாட்டேன் என்கிறது? அவளுக்கு வருகிறது, ரமணன் நடந்துகொள்ளும் முறையைப் பார்த்தால், அவனுக்கும் வருவதாகத் தெரிகிறது.

ஆனால், அவளது நெருங்கிய தோழி அரசிக்கோ, தன்னை சற்று முன்னர் பார்த்த தர்மனுக்கோ, அவ்வளவு ஏன்... அரசியின் பெற்றவர்களை நேரில் பார்த்த பிறகு, முன் ஜென்மத்தில், அரசிக்கு பெற்றவர்களாக இருந்த அவர்கள்தான் இந்த ஜென்மத்திலும் அவளது பெற்றவர்கள் என்பதை அவளால் இனம் காண முடிந்தது.

ஆனால், இவர்கள் யாருக்குமே எந்த நினைவுகளுமே வர மறுக்கிறதே ஏன்? ஒரு வேளை, இந்த என் நினைவுகள் எல்லாம் வலுக்கட்டாயமாக எனக்குள் திணிக்கப் படுகிறதா? அப்படியென்றால் யார் செய்கிறார்கள்? சிந்திக்கையில் அவளுக்கு தலையை வலித்தது.

ஆனந்தியின் இப்போதைய பெற்றவர்கள் அவளது முன்ஜென்ம பெற்றவர்கள் இல்லை. அது அவளுக்கு நன்றாகத் தெரிந்தது. அப்படியென்றால் அந்த பெற்றவர்கள் எங்கே? நான் இவர்களது சொந்த பெண் தானா?

சில நேரங்களில் அவளை ஆட்டுவிக்கும் அந்த வினா இப்பொழுதும் எழ, தலையை உலுக்கி தன்னை மீட்டுக் கொண்டாள். கல்பனாவும் சரி, ரவியும் சரி ஒரு நாள், ஒரு நொடி கூட தன்னை மாற்றான் வீட்டு பெண்ணாக கருதியதோ, நடத்தியதோ கிடையாது.

அப்படி இருக்கையில் இப்படி ஒரு நினைவு தனக்கு எப்படி வரலாம்? என தனக்குத் தானே கேட்டுக் கொண்டாள். நிலைமை தன் கைமீறி போவது போன்ற ஒரு எண்ணம். அதை எப்படியாவது தன் கட்டுக்குள் கொண்டுவந்தே ஆகவேண்டும் என்று இருந்தது.

யார் என்றே தெரியாத இவர்களிடம் சொல்லி உதவி கேட்பதை விட, தன் தாய் வருந்தினாலும் பரவாயில்லை என்று அவரிடமே சொல்லி உதவி கேட்டு விடுவோமா?' ஒரு நொடி சிந்தித்தாள். நேரம் செல்லச் செல்ல, அந்த நினைப்பு விஸ்வரூபம் எடுப்பதை அவளால் தடுக்க முடியவில்லை.

கூடவே, கடந்த முறை அவளை மந்திரிக்க என்று அந்த சாமியாரிடம் அழைத்துச் சென்றபொழுது, 'இன்னும் இந்தமாதிரி ஏமாத்துக்கார சாமியார்களை நம்பறீங்க பாருங்க, உங்களைச் சொல்லணும்' அவருக்கு முன்பாகவே கத்தியிருக்க,

அவரோ, அவளது கோபத்தை எல்லாம் கொஞ்சம் கூட கண்டுகொள்ளாமல், 'நீயே ஒரு நாள் என்னைத் தேடி வருவாய்...' அவர் சொல்லியிருந்தார்.

'என் உயிரே போனால் கூட, உங்க முன்னாடி வந்து நிக்க மாட்டேன்'.

'உன் உயிர் போகாமல், உன் குழப்பங்களுக்கு விடை தேடும் நேரம் என் முன்னால் வருவாய்...' அவர் சொன்னது நினைவுக்கு வர, நானே ஏன் அவரைப் போய் பார்க்கக் கூடாது என முடிவெடுத்தாள். அன்று ஏற்கனவே தாமதமாகி விட்டதால், வீட்டுக்குச் செல்ல முயன்றாள்.

அவர்களிடம் விடைபெற்று வெளியே வருகையில், அரசியின் தாய் விஜயா அவளை தடுத்து நிறுத்தி, "அம்மாடி... சொல்றேன்னு தப்பா நினைக்காதே, ஆயிரம்தான் இருந்தாலும் நீ உன் விஷயத்தை பெத்தவங்க கிட்டே சொல்லி முடிவெடுப்பதுதான் புத்திசாலித்தனம்.

“இப்போ என்னோட மகள் இப்படி ஒரு நிலையில் இருக்கும்போது, அவ என்னை விட்டு வெளியே போய் பேசினால் அதை என்னால் தாங்கிக்க முடியுமா? ஒரு அம்மாவா நான் சொல்றேன்...” அவர் சொல்லவே,

“நானே அந்த முடிவுக்குத்தான் ஆன்ட்டி வந்திருக்கேன். ரொம்ப தேங்க்ஸ்...” அவருக்கு நன்றி உரைத்தாள்.

வாசலில் இறங்கியவள், “ஆன்ட்டி, என்னை ட்ராப் பண்ண அந்த தர்மாவை உங்களுக்குத் தெரியுமா?” அவனைப் பற்றிய அவரது நினைப்பு என்னவென்று அவளுக்குத் தெரிந்துகொள்ள வேண்டி இருந்தது.

“தர்மாவை தெரியாமல் போகுமா? கடைக்கு அவன்தானே பொருள் சப்ளை பண்றான். சொன்னா சொன்ன நேரத்துக்கு டெலிவரி பண்ணிடுவான். வேலையில் ரொம்ப கெட்டி... ரொம்ப சுறுசுறுப்பு...” அவர் சொல்ல, தோழியிடம் ஜாடை காட்டினாள்.

அவளை பார்வையால் கண்டித்தவள், ‘எதையும் உளறி வைக்காதே’ எச்சரித்தாள்.

“ஓகே ஆன்ட்டி... அப்போ நான் கிளம்பறேன்...” அவரிடம் விடை பெற்றாள்.

“பாத்து வீட்டுக்குப் போம்மா. நீ இங்கே தனியா வந்தது தெரிந்தாலே உன்னைப் பெத்தவங்க தவிச்சு போய்டுவாங்க. எதுவா இருந்தாலும் பெத்தவங்க கிட்டே பேசும்மா. அவங்களைத்தவிர உன் மீதோ, உன் வாழ்க்கையின் மீதோ அக்கறை கொண்டவங்க வேற யாருமே இருக்க முடியாது.

“நாங்க ஹெல்ப் பண்ணலையேன்னு நினைக்காதே. ஆனா, இப்படி ஒரு சூழ்நிலையில் என்னால் ஒரு அம்மாவா மட்டும்தான் யோசிக்க முடியுது. பாத்துக்கோ... நீ அவளை அனுப்பிட்டு வா...” மகளை அவளுடன் அனுப்பினார்.

வெளியே வந்தவள், “சாரிடி, என் அம்மா இப்படி காலை வாருவாங்கன்னு நான் நினைக்கவே இல்லை. இப்போ என்ன செய்ய?” அவளுக்கு வருத்தமாக இருந்தது.

“உங்க அம்மா சொன்னது நூத்துக்கு நூறு சரி. பெத்தவங்க கிட்டே சொல்ல முடியாத விஷயம் என்ன இருக்கு நமக்கு? ஆனா சில நேரம் அவங்களை பயம் காட்ட வேண்டாம்னு தோணுது. இதில் அவங்களை நான் ஏமாத்துறதா நினைக்கவே இல்லை.

“இதை நானே சம்மாளிக்கிறதுன்னு முடிவு பண்ணிட்டேன். நாளைக்கு நீ என்னோட வந்தால் மட்டும் போதும், மிச்சத்தை நான் பாத்துக்கறேன். உன்னால் செய்ய முடியுமா?” அவளிடம் கேட்க, தோழியை போலியாக முறைத்தாள்.

“என்கிட்டே நீ அடிதான் வாங்கப் போற, நீ எங்கே கூப்பிட்டாலும் நான் வர்றேன். நீ இப்போ தனியா போயிடுவியா? வீட்டுக்குப் போனதும் எனக்கு கால் பண்ணு...” அவள் சொல்ல,

“முதல்ல உன் போனை ஆன் பண்ணி வை... அதை ஆப் பண்ணி போட்டுட்டு எனக்கு அட்வைஸ் மட்டும் கிழியுது...” அவளுக்கான பேருந்தில் ஏறிக் கொண்டாள்.

“அந்த ரமணன் வேற கால் பண்ணானா, இருந்த டென்ஷனில்... அதை ஆப் பண்ணி தூக்கிப் போட்டுட்டேன். உடனே ஆன் பண்ணிடுறேன். நீ பாத்துப் போ... கனவில் இவனைத்தான் பாத்தேன்னு எவன் பின்னாடியாவது போய்டாதே...” அடிக்குரலில் அவளிடம் சொல்ல, நறுக்கென அவளைக் கிள்ளிவிட்டே சென்றாள்.

அப்பொழுதுதான் அவளும் ஒன்றை யோசித்தாள்... தனது அமிழ்தன் எங்கே இருப்பான்? அந்த பெயரே வித்தியாசமாக இருக்க, அவனைக் காண மனதின் ஓரம் கொஞ்சமாய் ஏங்கியது.

அந்த நினைப்பை துடைத்துப் போட வைத்த ஒரே விஷயம் ரமணன் மட்டுமே. அவனது அடுத்தகட்ட நடவடிக்கை என்னவாக இருக்கும் என அவளுக்குத் தெரியவில்லை. அதைவிட, தர்மன், அரசியின் வீட்டு வாசல் வரைக்கும் வந்த பிறகும், அவளை நேரில் சந்திக்கவில்லையே என வருத்தமாக இருந்தது.

அப்படி அவர்கள் நேரில் சந்தித்தால், அவர்களது எதிர்வினை என்னவாக இருக்கும் எனத் தெரிந்துகொள்ள ஆவலாக இருந்தது. எதை எதையோ எண்ணியவாறு ஒரு வழியாக வீட்டுக்கு வந்து சேர்ந்து விட்டாள். பெற்றவர்களிடம் சொல்லாமல், அரசியின் வீட்டுக்குச் சென்று வந்தது பெரும் தவிப்பாக இருந்தது.

இதுவரைக்கும் அவள் தன் பெற்றவர்களிடம் சொல்லாமல் எதையுமே செய்தது இல்லை. முதல்முறையாக செய்த இந்த செய்கை அவளை அமைதியின்றி அலையச் செய்தது. தந்தையிடமும் இன்று கல்லூரியில் இருந்து சீக்கிரமாகவே வந்துவிட்டதாகச் சொல்லவே, அவரும் அவளை கல்லூரியில் சென்று தேடவில்லை.

பெற்றவர்களிடம் தன் நிலையைச் சொல்லலாம் என்றால், எங்கே இருந்துதான் அந்த தயக்கமும் பயமும் வந்து அவளை கவ்விக் கொள்கிறதோ? அவர்களிடம் எதையும் வாயே திறக்கவில்லை. மாலையில் வந்தது முதல் மகள் ஒரு மாதிரி இருக்கவே, இரண்டு மூன்றுமுறை, அவள் நெற்றியில் கை வைத்து பார்த்துவிட்டார்.

“என்னம்மா… காலேஜில் இருந்து சீக்கிரமா வேற வந்துட்ட, உடம்பு எதுவும் சரியில்லையா? தலை வலிக்குதா?” பாசமாக கேட்க, அவரது மடியில் தலை வைத்து படுத்துக் கொண்டாள். இது அவர்களுக்குள் அடிக்கடி நிகழும் ஒன்றுதான் என்பதால், அம்முவும் அதை அசட்டை செய்துவிட்டு சென்றாள்.

அன்றைய இரவில் அவளுக்கு தூக்கம் கூட வரவில்லை. எப்பொழுது விடியும், அந்த சாமியாரை சென்று பார்ப்போம் எனக் காத்திருந்தாள். மறுநாள் கல்லூரிக்குச் சென்ற இருவருமே, சற்று நேரத்தில் அந்த சாமியாரைப் பார்க்க அவரது ஆஷ்ரமம் சென்றார்கள்.

அந்த இடமே ஒருவித ஏகாந்தத்தில் நிலைத்து இருந்தது. பெரிதாக எந்த வசதி வாய்ப்போ, பக்தர்களோ அங்கே இருப்பதாகத் தெரியவில்லை. “ஏய்... நாம சரியான இடத்துக்குதான் வந்திருக்கோமா?” அரசி கூட அவளிடம் கேட்டுவிட்டாள்.

“எனக்கும் அதே சந்தேகம்தான்... ஒரு வேளை சாமியார் இடத்தை மாத்திட்டாரோ” அவர்கள் தங்களுக்குள் பேசிக்கொள்ள, சற்று தூரத்தில் தெரிந்த ஒரு குடிசையில் இருந்து காவி உடை அணிந்த ஒரு துறவி அவர்களை நோக்கி வந்தார்.

அவர்கள் அருகே வந்தவன், “நீங்க குருஜியை பாக்க வந்திருக்கீங்களா? அவர் இப்போ இங்கே இல்லை. இமையமலைக்கு போயிருக்கார்.” அவன் சொல்ல, முழுதாக சோர்ந்து போனாள்.

“அவர் என்னைக்கு போனார்?”

“அவர் போய் நான்கு மாதம் ஆகுது...” அவன் சொல்ல, சற்று தகர்ந்து போனாள்.

“அவர் எப்போ வருவார்னு சொல்ல முடியுமா?” அவள் கேட்க,

“அவர் நினைத்தால் நிமிஷத்தில் இங்கே வந்துடுவார். ஆனா அந்த நிமிஷம் எப்போ வரும் என்று யாராலும் சொல்ல முடியாது. உங்க விவரம் வேண்ணா கொடுத்துட்டுப் போங்க, அவர் வந்த உடனே சொல்றேன். குருஜி எப்படியாவது உங்களை தொடர்பு கொள்வார்...” அவன் கேட்க, அவன் கூற்றில் பெரிதாக அவளுக்கு எந்த நம்பிக்கையும் இல்லை.

ஆனால், அந்த நேரம் அவனை நம்புவதைத் தவிர அவளுக்கு வேறு வழியும் இருக்கவில்லை.

அவளுக்கு இருந்த ஒரே நம்பிக்கை அவர் மட்டுமே, அப்படி இருக்கையில் அவரும் இல்லையென்றால் அவள் யாரிடம் போய் தன் குழப்பங்களை தீர்த்துக் கொள்வாள்? ஒரு நொடி அப்படியே சோர்ந்து அமர்ந்துவிட்டாள்.

***

# நிழல் – 8

அவள் அப்படி சோர்ந்து அமர்ந்த நேரத்தில், "ஹல்லோ மேடம், நீங்க எங்க இங்கே?" அவளுக்கு பழக்கமான ஒரு குரல் கேட்கவே சட்டென நிமிர்ந்து பார்த்தாள்.

"ஹல்லோ தர்மா சார்… இந்த சாமியாரைப்…" அவள் சொன்ன தோரணையில் அவன் முகத்தில் சிறு அதிருப்தி நிலவ, சட்டென வார்த்தைகளை அப்படியே நிறுத்திக் கொண்டாள்.

"சுவாமிஜீயை நம்பிக்கை இல்லாமலா பாக்க வந்தீங்க?" அவனது அடுத்த கேள்வி இதுவாகத்தான் இருந்தது.

"நம்பிக்கை இல்லாமன்னு இல்லை… எனக்கு சில உண்மைகளை தெரிஞ்சுக்கணும் அதான் வந்தேன். ஆனா அவர் ஊரில் இல்லையாமே…" அவள் குரலில் இருந்த வருத்தம் அவனை சில நொடிகள் அமைதியாக்கியது.

"உங்களுக்கு தெரிஞ்சவங்களா?" அந்த சீடன் கேட்க, இதற்கு என்ன பதில் சொல்வது எனத் தெரியாமல் இருவருமே சற்று தடுமாறினார்கள்.

"ஆமா…" அவன் சொல்லவே அந்த சீடன் தன் வேலையைப் பார்க்கப் போய்விட்டான்.

அவனது பார்வை அரசியிடம் பாய, அவளும் அவனைத்தான் பார்த்திருந்தாள். ஏற்கனவே ஆனந்தி தர்மன் எனப் பெயர் சொல்லியிருந்ததால், 'இவர்தான் அவரா?' என்ற ஆராய்ச்சிப் பார்வை அவளிடம் இருந்தது.

தர்மன் ஐந்தரை அடிக்கு மேல் உயரம், அகன்ற தோள்கள், மாநிறம், அடர்த்தியான மீசை, கூர்மையான கண்கள் என சற்று வசீகரிக்கும் தோற்றத்தில் இருந்தான். அவனைப் பார்த்தவுடன் சிறு படபடப்போ, பரவசமோ எதுவும் அரசிக்குத் தோன்றவில்லை.

அதே நேரம், அவனும் அரசியைத்தான் பார்த்திருந்தான். ‘கண்ணனின் மகள் இவள்தானா?’ என்ற பார்வை மட்டுமே அவனிடமும் இருந்தது. இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்ள, அவர்களை ஆர்வமாகப் பார்த்திருந்த ஆனந்திக்கு ஏமாற்றமாக இருந்தது.

“அரசி… உனக்கு ஏதாவது ஞாபகம் வருதா?” அவள் காதைக் கடிக்க, எங்கே அவனுக்கு கேட்டுவிடப் போகிறதோ என தவித்துப் போனாள்.

“சும்மா இருடி… ஒரு மண்ணும் ஞாபகம் வரலை…” அடிக்குரலில் உறுமினாள்.

“என்னங்க… அன்னைக்கு உங்களைப் பாக்கத்தான் வந்தாங்களா? என்னை வேற அரசியை பாக்க நான் அழைச்சுட்டு போறேன்னு என் காரில் ஏறி வந்தாங்க… நான் வேற பயந்துட்டேன்…” அவன் சொல்ல, இப்பொழுது வெளிப்படையாகவே ஆனந்தியை முறைத்தாள்.

‘என்னடி இதெல்லாம்…?’ பார்வை அவளிடம் கேள்வி கேக்க,

“இல்லடி… உன் ஆளைப் பாத்த சந்தோஷத்தில் என்ன செய்யிறேன்னே தெரியாமல்…” சொல்லிக்கொண்டே வந்தவள், அரசியின் கண்களில் சுடர்விட்ட நெருப்பில் நாக்கை கடித்துக் கொண்டு வார்த்தைகளை அப்படியே நிறுத்திவிட்டாள்.

தர்மனின் பார்வை சுவாரசியமாக பெண்கள்மேல் பதிய, இரு பெண்களுக்கும் அவனை எப்படி ஏறிட்டு பார்ப்பது எனத் தயக்கமாக இருந்தது.

“அன்னைக்கும் இதே மாதிரிதானே என்னவோ பேசுனீங்க… அன்னைக்கு எனக்கு சரியா புரியலை. இப்போ…” அவன் குரலில் மெல்லிய கேலியும், சுவாரசியமும் தெரிய, ஆனந்தி அவனைக் கெஞ்சலாக ஏறிட்டாள்.

“வாயைத் தொறந்த... முதல் டெட்பாடி நீதான் புரியுதா?” தோழியை தள்ளிக்கொண்டு சென்ற அரசி, அவளிடம் கோபமாகப் பொரிந்தாள்.

“இல்லடி... உங்களுக்குள் சின்ன ஸ்பார்க் பத்த வச்சால்...” அவள் இழுக்க,

“நீ ஆணியே புடுங்க வேண்டாம்... புடுங்குன வரைக்கும் போதும். உன்னோட வந்ததுக்கு எனக்கு எத்தனை சோதனைதான் வைப்ப? அதுவும் முன்னே பின்னே தெரியாத அவன்கிட்டே போய்...” அவனைத் திரும்பி பார்த்தவள், அவனது பார்வை இன்னுமே அவர்கள் பக்கம் இருக்க, சட்டென பார்வையை திருப்பிக் கொண்டாள்.

“இல்லடி... அவர்கிட்டே பேசினால் ஏதாவது க்ளூ கிடைக்குமேன்னு பார்த்தேன்” அவள் உரைக்க,

“நீ இதுவரைக்கும் புடுங்குனது பூராவுமே தேவையில்லாத ஆணிதான். இப்ப புதுசா எதையுமே புடுங்க வேண்டாம்...” தன்னை இப்படி முன்னே பின்னே தெரியாதவனிடம் சங்கடப்பட வைக்கிறாளே என்று இருந்தது. எனவே அவ்வாறு பேசினாள்.

“அரசி... இவ்வளவு தூரம் வந்துட்டு... சரி, இதை மட்டும் சொல்லு, உனக்கு அவரைப் பாத்தால் ஒண்ணுமே தோணலையா?” அப்பாவியாக கேட்டாள்.

“ஏன்... உனக்கு ஏதாவது தோணுதா?”.

“ச்சீ... என்னடி இப்படி தப்பா பேசுற?” ஆனந்தி முகம் சுழித்தாள்.

“நாயே நான் என்ன கேட்டால், நீ என்ன அர்த்தம் பண்ணிக்கற? உன்னை கொல்லப்போறேண்டி... கொஞ்ச நேரம் பேசாமல் இரு. நான் போன பிறகு உனக்கு என்ன செய்யணுமோ செய்...” அவனது பார்வை அவள் முதுகைத் துளைக்கும் உணர்வு.

இரண்டு பெண்கள் சேர்ந்து வழக்கடித்துக் கொள்வதை வெகு சுவாரசியமாகவே பார்த்திருந்தான். அதிலும் அரசியின் முகத்தில் விரவும் பாவங்கள், கோபம், சங்கடம்... ‘அட...’ என அவனை ரசிக்கத் தோன்றியது.

கூடவே ஆனந்தியை கொஞ்சம் கழண்ட கேஸ் என்றுதான் நினைக்கத் தோன்றியது. எதையுமே யோசிக்காமல் பேசிவிடும் அவளது சுபாவம்... எதிரில் இருப்பவர்கள் என்ன நினைப்பார்கள் என கவலைப்படாத அவளது குணம், இவள் எப்படிப்பட்டவள்? என மனதுக்குள் எடை போட்டுக் கொண்டிருந்தான்.

முதல் முதலில் தன்னைப் பார்த்தவுடன் தன் பெயரை எப்படி சரியாகச் சொன்னாள்? என்பது மட்டுமே அவனுக்கு பெரும் வியப்பாக இருந்தது. அதை அவளிடம் கேட்டு தெரிந்துகொள்ள விரும்பினான்.

இரு பெண்களும் ஒரு மாதிரி சமாதானம் ஆகி வர, “ஆதி, நான் கிளம்பறேண்டி...” அவளால் அங்கே இருக்க முடியவில்லை. ஆனந்தி செய்து வைக்கும் செயல்களின் தாக்கம் அவளை ஒரு மாதிரி அதிர்ச்சிக்கு உள்ளாக்க அங்கிருந்து அகன்றுவிட விரும்பினாள்.

“சரி நீ கிளம்பு, நான் சார் கூட கொஞ்ச நேரம் பேசிட்டு பிறகு வர்றேன்” ஆனந்தி கிளம்பவில்லை என உரைத்துவிட, சில நொடிகள் அங்கிருந்து அசையாமல் நின்று அவளைப் பார்த்தாள். அந்நிய ஆடவனோடு அவளை எப்படி விட்டுச் செல்வது என்று இருந்தது.

அதைப் புரிந்த தர்மன், “ஏங்க... நானும் கொஞ்சம் நல்லவன்தான்” நக்கலாக உரைக்கவே,

அவனை திரும்பியும் பாராமல் வேகமாக நடந்துவிட்டாள். அவள் செல்லவே, “உங்ககிட்டே நான் ஒரு விஷயம் கேக்கணும்?” அவன் கேட்கவே, அரசியின் மேல் இருந்த பார்வையை அவன் பக்கம் திருப்பி, அவன் முகம் பார்த்தாள் ஆனந்தி..

“நீங்க என்னை இதற்கு முன்னாடி பாத்திருக்கீங்களா?” அவன் கேட்க,

“ஆமா… அதான் அன்னைக்கு…” அவள் சொல்லத் துவங்கவே,

“அதாவது அன்னைக்கு என்னை பாக்குறதுக்கு முன்னாடி கேக்கறேன்” அவன் சொல்ல, அவனிடம் எப்படிச் சொல்ல எனத் தெரியாமல் திணறினாள்.

ஆனால், ஒரு விஷயத்துக்குள் சம்பந்தப்பட்டவர்களிடம் விஷயத்தை சொல்லாமல் இருப்பது எந்த அளவுக்கு தான் கண்டுபிடிக்க நினைக்கும் விஷயத்துக்கு துணை செய்யும் எனத் தெரியாமல் தடுமாறினாள். ஒரு வேளை, ஆயிரத்தில் ஒன்றாக தான் சொல்லும் விஷயங்களை வைத்து, இவன் அரசியை தொல்லை செய்ய முயன்றால்?

அவன் அப்படிச் செய்ய மாட்டான் என உள்ளுணர்வு அடித்துச் சொன்னாலும், வெளி மனம் அவளிடம் வாதாடுகையில் அவளுக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை.

அவள் முகத்திலேயே கவனமாக இருந்தவன், “என்னங்க, அன்னைக்கு அவ்வளவு தைரியமா புது ஆளோட வர்றோம் என்ற பயமே இல்லாமல் என்னோட வந்தீங்க. கிட்டத்தட்ட அரைமணி நேரம் என் காரில் என்னோட தனியா இருந்திருக்கீங்க அப்போ எல்லாம் என்னைப்பற்றி எந்த சந்தேகமும் வரலை, இப்போ மட்டும் என்ன?” அவன் கேட்க, அவன் கேள்வியில் இருந்த நியாயம் அவளுக்குப் புரிந்தது.

“நான் சொல்வதை நீங்க எந்த அளவுக்கு நம்புவீங்க என்று தெரியலை, அதான் யோசிக்கறேன்” அவள் சொல்ல, புருவம் சுருக்கினான்.

“எதுவா இருந்தாலும் சொல்லுங்க…” அவளது தயக்கத்தை களைய முயன்றான்.

“இல்ல… முன் ஜென்மத்தில் உங்களோட பேர் தர்மேந்திரன்… அதை சுருக்கிதான் அன்னைக்கு தர்மான்னு சொன்னேன்…” அவள் தயங்கி தயங்கி உரைக்க, அவன் முகத்தில் ஒரு தீவிர பாவம் குடியேறியது.

“அப்படின்னா உங்களுக்கும் எனக்கும் முன்ஜென்ம பந்தம் இருக்குன்னு சொல்றீங்களா?” அவன் கேட்க,

“கெட்டுது போங்க… உங்களுக்கும், இப்போ இங்கே இருந்து போனாளே அரசி, அவளுக்கும்தான் சம்பந்தம்… நான் முன் ஜென்மத்தில் உங்களோட காதலுக்கு ஹெல்ப் பண்ணி இருக்கேன்…” அவள் சொன்ன வேகத்தில் அவனுக்கு சிரிப்பு வர, கடகடவென சிரித்துவிட்டான்.

அவன் சிரிக்கவே, “அப்போ நீங்க நான் சொன்னதை நம்பலை அதானே… இதுக்குதான் நான் சொல்ல மாட்டேன்னு சொன்னேன்…” முகத்தை திருப்பிக் கொண்டாள்.

“நீங்க சொன்னதை நம்பலைன்னு நான் எப்போ சொன்னேன்?” அவன் கேட்க,

“அப்போ நம்பறீங்களா?” வேகமாக கேட்டாள்.

“நான் நம்பறது இருக்கட்டும், உங்க ப்ரண்ட் நம்பலையா? ரொம்ப கோபமா போறாங்க…” தன் தாடையை தேய்த்தவாறே கேட்டான்.

“அதெல்லாம் நம்பறா… என்ன உங்ககிட்டே கோர்த்து விடறேன்னு கோபம், அதெல்லாம் சரியாப் போய்டும்…” அவள் சொல்ல, இப்படிப் பேசும் அவளை இவள் என்ன இப்படி’ என்பதுபோல் மீண்டும் பார்த்தான். அவள் பேசும் விஷயத்தில் இருக்கும் கனம் அவளுக்குப் புரிகிறதா இல்லையா? அவனுக்கு சுத்தமாகப் புரியவில்லை.

அவன் தன்னை ஆராய்சியாகப் பார்க்கவே, “உங்ககிட்டே ஒண்ணு சொல்லவா? இப்போ நான் உங்களோட

சுவாமிஜீயை தேடி வந்த காரணமே அரசிதான். அது மட்டும் இல்லை, அவளுக்கு என்னவோ நடக்கப் போகுதுன்னு என் உள்ளுணர்வு சொல்லிட்டே இருக்கு.

“அது மட்டும் இல்லை, நைட் ஒரு குரல்... அது என்னை எதையோ செய்ய விடாமல் தடுக்கப் பாக்குது. இந்த பழைய நினைவுகள் எல்லாம் எனக்கு மட்டும் வரலை, உங்க காதலுக்கான பழைய எதிரி ரமணன் இருக்கானே, அவனுக்கும் வந்துடுச்சு.

“உங்க காதலியை இந்த ஜென்மத்தில் அவன் கட்டிக்க வேண்டி எல்லா ஏற்பாடும் செய்ய ஆரம்பிச்சுட்டான். நீங்க என்னன்னா இன்னும் பச்சப் பிள்ளையாவே சுத்திட்டு இருக்கீங்க. உங்களுக்கு ஹெல்ப் பண்ணலாம்னு பார்த்தால், அதையும் கண்டுக்காமல், எனக்கு என்னவோ மறை கழண்டுடுச்சுன்னு பாருங்க...” அவள் படபடவென உரைக்க, வாய் பிளந்தான்.

“நீங்க என்னென்னவோ சொல்றீங்க, எனக்கு எதுவுமே புரியலை. நீங்க சொல்றதில் எதுவுமே கோர்வையா இல்லை... இப்படிச் சொன்னால் எனக்கு எப்படிப் புரியும்?” அவள் சொன்ன விஷயங்களைக் கேட்டவனுக்கு அப்படித்தான் எண்ணத் தோன்றியது.

“சார்... நிஜமாவே எனக்கும் இன்னும் எதுவுமே தெளிவா தெரியலை. ஆனா, கூடிய சீக்கிரமே எதுவோ நடக்கப் போகுதுன்னு மட்டும் தெரியுது. அதை என்னால் தடுக்க முடியுமா? முடியாதான்னு கூட தெரியலை. அதான்... சுவாமிஜீயை பாத்து கேட்டுட்டுப் போகலாம்னு வந்தேன்” அவள் சொல்ல, அவளை அழைத்துக் கொண்டு மரத்தடியில் அமர்ந்தான்.

“முதல்ல நீங்க சொல்ல வரதை கொஞ்சம் நிதானமா... ஒண்ணு ஒண்ணா சொல்லுங்க... எனக்கு ஏதாவது தோணுதான்னு சொல்றேன்” அவன் சொல்லவே, கனவுகள் துவங்கி, அந்த குரல், அவள் சந்திக்கும் மனிதர்களில்

சிலரைப் பற்றிய முன்ஜென்ம நினைவுகள் கோர்வையாக வருவது என அனைத்தையும் உரைக்க, சில நொடிகள் அமைதியானான்.

“நீங்க சொல்றதை வைத்துப் பார்த்தால் முன்ஜென்மத்தில் நாங்க காதலர்கள், எங்களுக்கு உதவி செய்த ஆள் நீங்க. எங்க காதலுக்கு தடையாக இருந்தது ரமணன்... இதில் அந்த ராஜகுரு, உங்க காதலர் எல்லாம் எங்கே?” அவன் கேட்க, தோளைக் குலுக்கினாள்.

“அப்போ, இந்த ஜென்மத்திலும் ரமணன் எங்கள் காதலை கெடுக்க முயற்சி பண்றான். அது ஓகே... ஆனால் நாங்கதான் லவ்வர்சே இல்லையே. இதில் எங்கே இருந்து அவன் கெடுக்க? உங்களுக்கு வரும் நினைவுகள் எங்களைப் பற்றியது.

“ஆனால், நாங்க ரெண்டுபேரும் நேரில், அதுவும் இவ்வளவு அருகில் சந்தித்து இருக்கிறோம். குறைந்த பட்சம் எங்கேயோ பார்த்த நினைவு கூட வரலையே. அப்படி இருக்கும்போது அந்த ரமணன் அவளை திருமணம் செய்து கொண்டால் என்ன?” அவளிடம் கேட்க,

“ஒரு லவ்வர் மாதிரியா பேசுறீங்க?” வெடுக்கென கேட்டாள்.

“ஏங்க... நாங்கதான் லவ்வர்சே இல்லைன்னு சொல்றேன். நீங்க என்னன்னா...” அவன் இழுக்க,

“அப்போ நீங்க எனக்கு ஹெல்ப் பண்ண மாட்டீங்க அதானே... இதை நானே பாத்துக்கறேன். என் அரசியோட வாழ்க்கை அப்படியெல்லாம் நாசமாக நான் விட மாட்டேன்...” கோபமாக அவனிடம் பேசியவள் அங்கிருந்து அகன்று விட்டாள்.

ஆனால், அவன் பேசியதில் இருந்த நியாயம் அவளுக்கும்புரிந்ததுதான். இந்த ஜென்மத்திலும் அவர்கள் காதலர்களாக இருந்தால், அவள் போராடுவதில் நியாயம்

இருக்கிறது. ஆனால், அவர்கள் காதலர்களே இல்லை என்னும்போது, அவள் யாருக்காக போராடுகிறாள்?

அந்த கேள்விக்கான பதில் அந்த சுவாமியிடம் மட்டுமே அவளுக்கு கிடைக்கும் என்று தோன்றியது. ஆனால், அவர் இல்லை என்ற சோகத்தில் அங்கிருந்து அகன்றாள்.

அடுத்து வந்த இரண்டு நாட்களும் அந்த சாமியாரிடம் இருந்து ஏதாவது தகவல் வருமா என காத்திருந்து சோர்ந்து விட்டாள். அப்படி எந்த தகவலும் வரும் வழியைக் காணோம். ஆனால், மற்றொரு விஷயம் நடந்தது.

அதுநாள்வரை அவளிடம் பேசியிராத ரமணன், அன்று அவளைத் தேடி வந்தான். அதுவும் ப்ரீ டைமில் அவள் அரசியோடு சேர்ந்தே இருப்பாள் என்பதால், வகுப்பு நடக்கும் வேளையில், அவளிடம் பேசவேண்டும் என அழைத்துச் சென்றான்.

‘இவன் எதற்கு என்னை அழைக்கிறான்?’ என்ற கேள்வியோடு அவனைப் பின்தொடர்ந்தாள் ஆனந்தி.

அவன் முகத்தில் இருக்கும் கோபம் எதனால் என அவளுக்குத் தெரியவில்லை. அவனுடன் சென்றால் அதற்கான விடை கிடைக்கும் என்பதால் அவனுடன் சென்றாள்.

நேராக கல்லூரியில் இருக்கும் மரத்தடிக்குச் சென்றவன், அவளைப் பார்த்து திரும்பி, “இன்னொரு முறை அரசியை அந்த தர்மாவுடன் இணைக்கும் வேலையில் ஈடுபட்டால், பிறகு என்ன செய்வேன்னு எனக்கே தெரியாது...” அவன் குரலில் அவ்வளவு அடக்கப்பட்ட கோபம் கொப்பளித்தது.

அவன் அதிரடியாக இப்படிப் பேசுவான் என எதிர்பாராத ஆனந்தி திகைத்துப் போனாள். அதிலும், தர்மாவைப் பற்றி அவன் பேசியது... ‘இவன் என்ன எங்களை கவனிக்க ஆள் வைத்திருக்கிறானா?’ அவளுக்கு இப்படித்தான் எண்ணத் தோன்றியது.

அவளே தர்மாவை எதேச்சையாக இரண்டு முறை மட்டுமே சந்தித்து இருக்கிறாள். அப்படி இருக்கையில், இவனுக்கு எப்படி அவனைப் பற்றி தெரியும் குழம்பினாள்.

‘ஒரு வேளை, எனக்கு முன்பே இவனுக்கு தர்மாவை தெரிந்திருக்குமோ?’ எண்ணியவளது புலன்கள் எல்லாம் கூர்மையானது.

“அரசியைப் பற்றி நீங்க பேசக் கூடாது…” அவள் பட்டெனெ உரைக்க,

“என்ன… அவளைப் பற்றி நான் பேசக் கூடாதா? இத்தனை ஜென்மமாக, அவன்… அவள் யாரென்றே தெரியாமல் பிறப்பெடுத்தால், ஒவ்வொரு முறையும் அவளுக்காகவே பிறப்பெடுக்கும் நான் பேசாமல் யார் பேசுவா?” அவன் ஆத்திரமானான்.

“இத்தனை ஜென்மமா எதுக்கு காத்திருக்கணும்? அதான் முந்தின ஜென்மங்களிலும் அவளைத் தெரிந்தே தானே பிறப்பு எடுத்தீங்க. அப்போ எல்லாம் அவளை அடைய முடியலையா?” அதென்னவோ ஆயிரம் குழப்பங்கள் இருந்தாலும் அவனிடம் அடங்கிப் போக அவள் விரும்பவில்லை.

“எந்த ஜென்மத்திலும் உனது இந்த திமிர் மட்டும் உன்னை விட்டு போக மாட்டேன் என்கிறது…” அவளைப் பார்வையாலேயே எரித்தான்.

“ஓ… அப்படின்னா இத்தனை ஜென்மத்திலும் என்கிட்டே மண்ணைக் கவ்விட்டுதான் இந்த பேச்சா?” அவள் படு நக்கலாக வினவ, கண்மண் தெரியாத கோபம் கொண்டான்.

“ஏய்… இங்கே பார்… இந்த ஜென்மத்தில் அவள் கழுத்தில் தாலி கட்டப் போவது நான்தான். உனக்கு இறுதி எச்சரிக்கை கொடுக்கிறேன். அரசியை அவனிடம் பேச

வைக்கும் வேலையை இனிமேல் செய்யாதே. அவள் எனக்கு மட்டுமே சொந்தம்.

“இந்த முறை எந்த தடையுமே இல்லை என நான் நினைத்துக் கொண்டிருந்தால், நீ புதிதாக ஆரம்பிக்கிறாய். நேர்வழியில் முடியவில்லை என்றால், குறுக்கு வழியிலாவது அவளை அடைவேன். தர்மா இருந்தால் தானே அவனுடன் சேர்க்க முயல்வாய்...” அவன் கண்களில் வழிந்த குரோதத்தில் அவளுக்கு வாயடைத்துப் போனது.

‘இவன் என்ன என்னை மிரட்ட வரச் சொன்னானா? இல்லையென்றால் அவனால் என்ன முடியும் என எனக்கு காட்ட வரச் சொன்னானா?’ குழம்பிப் போனாள்.

அவன் எதற்கு வரச் சொல்லியிருந்தாலும், அவன் பேசிய பேச்சுக்கள் எதையும் அவளால் ரசிக்க முடியவில்லை என்றே சொல்லலாம். தன்னைவிட அதிகமாக அவனுக்கு பல விஷயங்கள் தெரிந்திருக்கிறது என்பது வேறு புரிய, அவளால் அதை ரசிக்க முடியவில்லை.

அவனது பேச்சுக்களை வீண் பேச்சு என தள்ளி விடவும் முடியவில்லை. ஆறு ஜென்மங்களாக அவர்களை சேர விடாமல் தடுப்பவன், இந்த ஜென்மத்திலும் அவர்களை சேர விட மாட்டானோ? தவித்துப் போனாள். இதற்கு ஏதாவது செய்ய வேண்டும்... முடிவெடுத்தாள்.

***

# நிழல் – 9

தன்னிடம் பேசவேண்டும் எனச் சொல்லி அழைத்தவள், எதுவுமே பேசாமல் இருக்க அவள் முகத்தை பார்த்தவாறே அமர்ந்திருந்தான். அவனை அழைத்தவளோ, என்ன சொல்வது, அதை எப்படிச் சொல்வது எனத் தெரியாமல் குழம்பிப் போய் அமர்ந்திருந்தாள்.

சில நிமிடங்கள் வரைக்கும் பேசாமல் இருந்த தர்மன், அவள் தானாக எதையும் பேசப்போவதில்லை என்பது புரிய, “பேசணும்னு இவ்வளவு தூரம் வந்துட்டு பேசாமல் இருந்தால் எப்படி? என்னன்னு சொல்லுங்க” ஆனந்தியிடம் கேட்டான்.

“நீங்க உடனே அரசியை கல்யாணம் பண்ணிக்கோங்க” அவள் பட்டென சொல்ல, திடுக்கிட்டான்.

“என்னங்க சொல்றீங்க? கல்யாணமா? அதென்ன சாதாரண விஷயமா?” அவனுக்கு என்னவோ அவள் புரியாமல் பேசுவது போலவே இருந்தது.

“கல்யாணம் சாதாரண விஷயம் இல்லைன்னு எனக்கும் தெரியும். ஆனா, அந்த ரமணன் கிட்டே இருந்து அரசியைக் காப்பாத்த எனக்கு வேற வழி தெரியலை…” தவித்தாள்.

“ஏங்க… நான் அன்னையில் இருந்து அதைத்தான் சொல்றேன்… எதுக்குங்க காப்பாத்தணும்? அவருக்கு அவங்கதான்னு கடவுள் போட்ட முடிச்சை மாற்ற நாம யார்? நீங்க எதுக்காக இவ்வளவு கஷ்டப்படணும்? இந்த நிமிஷம் வரைக்கும் எனக்கு அவங்க மேலே எந்த இன்ட்ரெஸ்ட்டும் இல்லை.

“அப்படி இருக்கும்போது… எந்த நம்பிக்கையில் நீங்க இதை என்கிட்டே கேக்கறீங்கன்னே எனக்குப் புரியலை?” அவன் மனதில் இருப்பதை அப்படியே அவளிடம் உரைத்தான்.

“ஹையோ... இந்த நிமிஷம் வரைக்கும் இல்லை சரி, ஆனால் இனிமேல் வரலாமே. அந்த ரமணன் வேற என்னை கூப்பிட்டு மிரட்டுறான். நீங்க இருந்தால் தானே, அவளை அவனுக்கு கட்டி வைக்க ட்ரை பண்ணுவன்னு வேற கேக்கறான். எனக்கென்னவோ பயமா இருக்கு” நடக்கப்போவது இன்னதென்று தெரிந்தால் போராடலாம்.

அது என்னவென்றே தெரியாத பட்சத்தில் அவளும் என்ன செய்ய? அவள் கண்கள் இரண்டும் கலங்கிப் போனது. “உங்க பிரச்னைக்கு நடுவில் ஏன் என் தலையை உருட்டறீங்க? அதான் நான் இந்த ஆட்டத்துக்கு வரவே இல்லையே பிறகு ஏன் அவர் என்னை இதில் மிரட்டணும்?” அவனுக்குப் புரியவே இல்லை.

அரசி வேண்டும் என அவனது மனது ஒரு சதவீதம் கூட ஆசைப்படவில்லை. அவளை நேருக்கு நேர் சந்தித்த பொழுது கூட, மற்ற பெண்களை எப்படி சாதாரணமாக கடந்து விடுவானோ, அப்படித்தான் அவளையும் கடந்திருக்கிறான்.

அப்படி இருக்கையில், ஆனந்தி சொல்கிறாள் என்பதற்காக அவனால் எதையும் செய்துவிட முடியுமா என்ன? முன் ஜென்மத்தில் அரசியும் அவனும் காதலர்களாக இருந்திருக்கலாம். அதற்காக இந்த ஜென்மத்திலும் அவர்கள் காதலர்களாகவே இருக்க வேண்டும் என்ற கட்டாயம் எதுவும் இருக்கிறதா என்ன?

“எனக்கும் அதுதான் புரியவே இல்லை சார்... கடந்த ஆறு ஜென்மமா பிறப்பெடுத்துட்டே இருக்கானாம்... அதுவும் அரசியை கல்யாணம் பண்ணதுக்கு வேண்டியே. இது ஏழாவது ஜென்மமாம்... இந்த ஜென்மத்திலும் அவனால் அவளை அடைய முடியவில்லை என்றால் என்ன ஆகும்னே தெரியலை?” அவள் அவ்வளவு கவலையாக உரைக்க, அவனுக்கோ ஒரு சின்னப்பெண் எவ்வளவு குழப்பங்களைத்தான் தாங்குவாள் என்று இருந்தது.

“ஏன் ஆறு ஜென்மமா அவனால் அவளை அடைய முடியலையாம்?” அவன் கேட்க,

“என்னவோ என்னால்தான் ஆச்சுன்னு சொன்னான்” பரிதாபமாக உரைத்தாள்.

“ஆனந்தி... நீயே யோசிச்சுப் பார்... திடுதிப்புன்னு போய், கமலக்கண்ணன் கிட்டே இப்படியெல்லாம் பேச முடியாது. அதைவிட ரமணன் எனக்கு முன்னாடி இருக்கும்போது, நான் எப்படி கேக்க முடியும்? அவங்க ஏற்கனவே அரசியோட படிப்பு முடிந்த பிறகுதான் எதையும் செய்வோம்னு சொல்லியிருக்காங்க.

“அப்படியிருக்கும்போது, விரும்பவே செய்யாத நாங்க, அவங்களுக்கும் தெரியாமல் எப்படி கல்யாணம் பண்ணிக்க முடியும்? அப்படி கல்யாணம் செய்து என்ன சாதிக்கப் போகிறோம்? இப்படி வேண்ணா செய்யலாம்... அவளோட படிப்பு முடிந்த பிறகு வேண்ணா பார்க்கலாம்...” அவன் சொல்ல, அவளுக்கு அழுகை முட்டியது.

தன் கையில் அவ்வளவு நேரம் இருப்பதாக அவளுக்குத் தெரியவில்லை. அவர்களது படிப்பு முடியும் வரைக்கும் நேரம் இருந்திருந்தால், ரமணனே இவ்வளவு அவசரப்பட மாட்டான். அப்படி இருக்கையில், தனக்கு உதவ யாருமே இல்லையே என மருகினாள்.

ஒரு அளவுக்கு மேலே அவனிடம் போராட முடியாமல் சோர்ந்து போய் திரும்பினாள். அவனும் அவளிடம் விடைபெற்றுச் சென்றுவிட, அந்த ஆஷ்ரமத்தில், குருஜியின் குடிசைக்குள் நுழைந்தாள் ஆனந்தி.

சாதாரண மண் சுவர்தான்... மேலே பனை ஓலை வேயப்பட்டிருக்க, தரையின் ஜில்லிப்பு கால் வழியாக தேகத்துக்குள் ஊடுருவும் உணர்வு. தன்னை அறியாமல் அப்படியே தரையில் அமர்ந்துவிட, கண்களில் கண்ணீர் வழிந்தது.

‘என்ன செய்யப் போகிறேன்? ஏது செய்யப் போகிறேன்?’ மனதுக்குள் கேள்விகள் படையெடுத்தது.

சற்று நேரத்துக்கெல்லாம் மனதில் ஒருவித அமைதி குடியேற, தன்னை அறியாமலே தனக்குள் மூழ்கத் துவங்கினாள். அவ்வளவு நேரமாக அவள் மனதை அழுத்திய துன்பம் அவளை விட்டு அகன்று ஓடும் உணர்வு. அதை அவளால் நன்கு உணர முடிந்தது.

திடுமென அந்த இடமே சில்லென்று ஆகும் உணர்வு. கண்களைத் திறக்க நினைத்தாலும் அது அவளால் முடியவில்லை. வெறும் தரையில் கால்களை மடக்கி அதன்மேல் அமர்ந்திருந்தவளுக்கு, தான் என்னவோ ஒரு ப்ரீசருக்குள் அமர்ந்துவிட்டாற்போல் இருந்தது.

வெளியே அவ்வளவு அனலில் நின்றிருந்தவள், அறைக்குள் வருகையில் கொஞ்சம் குளுமையை உணர்ந்தாள். ஆனால் இப்பொழுது, நேரம் செல்லச் செல்ல, குளிரின் அளவு அதிகரிக்கவே, அதில் தான் உடல் விறைத்து இறந்து விடுவோமோ என்று அஞ்சினாள்.

தன் தொடைகளுக்கு மேலே இருந்த கரத்தை நகர்த்தி, தன்னை கதகதப்பாக்கிக் கொள்ள வேண்டி, கரங்களை ஒன்றோடு ஒன்று உரசக் கூட முடியவில்லை.

“ஆனந்தவல்லி…” தனக்கு எதிரில் இருந்து யாரோ தன்னை அழைப்பதுபோல் இருக்கவே, முயன்று கண் திறந்தாள். தன் கண்களைத் திறந்தவளுக்கு தன்னால் தன் கண்களையே நம்ப முடியவில்லை.

‘ஒரு வேளை நான் கனவு காண்கிறேனோ?’ மீண்டுமாக பட்டென கண்களை இறுக மூடிக் கொண்டாள்.

அவள் அவ்வாறு செய்யவே, அவளுக்கு எதிரில் அமர்ந்திருந்த அந்த உருவம், “ஆனந்தவல்லி…” மீண்டுமாக அழைக்க, ஆழமாக மூச்செடுத்தவள் தன்னை நிலைநிறுத்திக் கொண்டு கண்களைத் திறந்தாள்.

ஆனால், நாசியில் ஏறிய அந்த குளிர், அவள் மூச்சை வெளியிடுகையில் வெளியேறிய புகை... தான் கனவு காணவில்லை என்பதை அவளுக்கு உணர்த்தியது.

அதைவிட, தனக்கு எதிரில் இருந்த சுவாமிஜி... அவர் இதழ்களில் உறைந்திருந்த மெல்லிய புன்னகை, அவர் கண்களில் வழிந்த சாந்தம்... தும்பைப்பூவாக வெளுத்திருந்த அவரது சிகை, முகம்... அனைத்தயும் அதிர்ச்சி குறையாமல் பார்த்திருந்தாள்.

கூடவே தன்னைச் சுற்றிலும் பார்வையைத் திருப்ப, கண்ணுக்கெட்டிய தூரம் வரைக்கும் உறைந்திருந்த வெண் பனி, உடை மீறி, சதை தாண்டி, எலும்பில் இறங்கிய அந்த குளிர்... அவள் தேகம் கிடுகிடுவென நடுங்க, அதைப் பார்த்தவர், தன் வலக்கை ஆள்காட்டி விரலை ஒரு பக்கமாக நீட்டி சுட்டிக் காட்டினார்.

அங்கே இருந்த கம்பளியைப் பார்த்தவள், ஓடிச் சென்று அதை எடுத்து வேகமாக தன்னைப் போர்த்திக் கொண்டாள். அதைப் போர்த்திய பிறகுதான் குளிர் கொஞ்சம் மட்டுப்பட்டது. அப்பொழுதுதான் மூளை கொஞ்சம் செயல்பட,

‘நான் எப்படி இங்கே...?’ எண்ணியவள், “இல்ல... இல்ல... நான் தெளிவா கனவுதான் காண்கிறேன். இப்படி நடக்க வாய்ப்பே இல்லை...” தனக்குத் தானே சொல்லிக் கொள்வது போல, உரக்கவே சொன்னாள்.

“கண்களைத் திறந்துகொண்டே கனவு காண்பது சாத்தியமா?” அவரது குரல் மென்மையாக அவள் செவிகளைத் தீண்ட, கண்களைத் திறந்தவள், நடப்பதை நம்ப முடியாத திகைப்போடு மீண்டும் அவர் முன்னால் வந்து அமர்ந்தாள்.

அவளது தலைக்கு மேலேயும் பனி உறைந்திருக்க, அது ஒரு குகை என்பதை கண்டுகொண்டாள். அந்த குகையின் ஒரு மூலையில் இருந்து மெல்லிய ஒளி கசிய, அதில் அவரது

முகம் பார்த்தவள், தன்னை அறியாமலே அவர் காலில் விழுந்து வணங்கினாள்.

அவள் தலைக்கு மேலே கைகளைக் குவித்து ஆசி வழங்கியவர், ‘உனக்கு என்ன கேட்க வேண்டுமோ கேள்…’ என்பதுபோல் பார்த்தார்.

அவள் எங்கே பேசும் நிலையில் இருந்தாள்? ஆனாலும் இதை விட்டால் வேறு சந்தர்ப்பம் கிடைக்காது என்பதால், தனக்கு நடப்பவற்றை அவரிடம் சொல்லி முடித்தவள், அவர் வாயில் இருந்து உதிர்ந்து விழும் வார்த்தைகளுக்காக காத்திருந்தாள்.

அவர் முகத்தில் கொஞ்சம் கூட சலனமே இல்லை. தன் விழிகளை மூடிக் கொண்டவர், சில நொடிகள் கழித்து கண் திறந்து பார்த்தார். “இவையெல்லாம் முன்ஜென்ம சாபம் அதுதான் உன்னை, அவர்களை எல்லாம் விடாமல் துரத்துது…” அவர் சொல்ல, அவரையே பார்த்திருந்தாள்.

“என்ன சாபம்? இது தீர நான் என்ன செய்யணும்?” அவரிடம் கேட்டாள்.

“அது என்னவென்று உனக்குத் தெரியும் நேரம் இன்னும் வரவில்லை. ஆனால், உனக்கு நேரம் மிகவும் குறைவாக இருக்கிறது” அவர் சொல்ல, அவளுக்கு இருக்கும் குழப்பம் அதிகரித்ததே தவிர குறையவில்லை.

“அரசியும், தர்மாவும் நேருக்கு நேர் பார்த்த பிறகும், அவர்கள் ஒருவரை மற்றவர் அடையாளம் கண்டுகொள்ளவில்லையே ஏன்?” அதற்காவது பதில் சொல்வாரா எனப் பார்த்தாள்.

“அது அவர்களுக்கு இருக்கும் சாபம்…” அவர் அமைதியாகச் சொல்ல, அவளுக்கு பிபி எகிறியது.

“இப்போ ரமணன் அரசியை திருமணம் செய்துகொண்டால் என்ன நடக்கும்?” அவரிடம் கேட்க,

“அவர்களுக்கான நட்சத்திர பலனுக்கான, சாதகமான நேரத்தில் செய்தால் அந்த ஜென்மம் முழுவதும் கணவன் மனைவியாக தொடர்வார்கள்… அதுவே மற்ற நேரத்தில் என்றால்…”

“அவளுக்கு அடுத்த நொடி பழைய நினைவுகள் எல்லாம் திரும்ப வரும், அடுத்த நொடியே தன் வாழ்க்கையை முடித்துக் கொள்வாள். அவளது ஆத்மா அமைதியற்ற ஆத்மாவாக, தீய சக்தியாக உரு மாறும்…” அவர் வெகு நிதானமாகச் சொல்ல, மூச்சு விடவும் மறந்தாள்.

“அ… அ… அப்படின்னா முந்தைய ஜென்மத்திலும் அப்படித்தான் நடந்ததா?” அவள் திணறி திண்டாடி கேட்டாள்.

“அப்படி நடந்திருந்தால் ஏழாவது ஜென்மத்தை அவள் கண்டிருக்கவே மாட்டாளே” அவர் உரைக்க, கொஞ்சமாக நிம்மதியானாள்.

“இப்போ ரமணன் அவளை திருமணம் செய்வது தள்ளிப் போனால்?”.

“தனக்கு சாதகமான கிரக நிலை வருவதற்காக காத்துக் கொண்டிருப்பவன், அப்படி வரும் சந்தர்ப்பத்தை நழுவ விடுவானா என்ன? அவனுக்கு சாதகமான நேரத்தில் அவளை அவன் அடைந்து விட்டால், அரசிக்கு முன்ஜென்ம நினைவுகள் வரவே செய்யாது.

“ஆனால், அவளது இயற்கையான மரணத்துக்குப் பிறகு, உண்மைகள் தெரியவர, அது ஒரு துர் ஆத்மாவாக மாறும்…” அவர் சொல்லச் சொல்ல, அப்படி ஒன்றை நடக்க விடக் கூடாது என முடிவெடுத்தாள்.

“அரசிக்கோ, தர்மாவுக்கோ முன்ஜென்ம நினைவுகள் வர வாய்ப்பு இருக்கா?” அவள் கேட்க,

ஒரு மந்தகாச புன்னகை அவர் இதழ்களில் உதயமானது. "ரமணன் தவறு செய்தால் அதற்கான சாத்தியக்கூறுகள் உண்டு…".

"அது என்ன தவறு?" படபடத்தாள்.

அதற்கு அவரது பதில் வெறும் மௌனமாக இருக்க, 'இதற்கு பதில் என்னிடம் இல்லை' என்பதுபோல் அமர்ந்திருந்தார்.

"அரசியை திருமணம் செய்யச் சொல்லி தர்மாவை சொன்னால் கேட்க மாட்டேன் என்கிறாரே ஏன்?" அவள் கேட்க, 'இதற்கான பதிலை ஏற்கனவே சொல்லிவிட்டேன் என்பதுபோல் அவளைப் பார்த்தார்.

"அவங்களுக்கு சாபம் இருக்கு… அப்போ எப்படி தர்மா அரசியின் கழுத்தில் தாலி கட்டுவார்? அப்படி அவர் கட்டிவிட்டால்?" அவள் கேட்க, "சில விஷயங்கள் என்னையும், என் சக்தியையும் மீறியவை…" அவரது பதிலில் பெரும் ஏமாற்றமாக உணர்ந்தாள்.

"அவங்களுக்கு மட்டும் சாபத்தினால் எதுவும் நினைவுக்கு வரவில்லை சரி. எனக்கு எந்த சாபமும் இல்லையா?" அவள் கேட்டுவிட்டு, "ஒரு வேளை, எனக்கு இப்படி எல்லாம் ஞாபகம் வருவதே சாபம் தானோ?" சற்று வேடிக்கையாகவே கேட்டாள்.

"ஏழு ஜென்மங்களாக நீ உன் பெற்றவர்களை பிரிந்து இருக்கிறாயே" அவர் சொல்ல, அவள் கண்களில் பெரும் அதிர்வு.

"அப்போ… என்னோட அப்பா அம்மா…" கேட்கும்பொழுதே காற்றுதான் வந்தது.

"உரிய நேரத்தில் உன்னை வந்து சேர்வார்கள்…" அவர் சொல்ல, அவள் அறிந்த விஷயத்தை கிரகிக்க அவளுக்கு சற்று நேரம் தேவைப்பட்டது.

சில நிமிடங்கள் கழித்து, அதை விடுத்து, “எனக்கு ஏன் எல்லா நினைவுகளும் வரவில்லை? எங்கள் வாழ்க்கையில் என்ன நடந்தது என்று தெரியவில்லையே. அதைக் கொஞ்சம் சொல்லுங்களேன்”.

“அது உனக்கு தெரிய வேண்டிய நேரம் இன்னும் வரவில்லை. அப்படி அனைத்து உண்மைகளையும் நீ அறிந்த பிறகு, உனக்கு நேரம் மிகவும் குறைவாகவே இருக்கும்…” உரைத்தவர், தான் பேசவேண்டியது இவ்வளவுதான் என்பதுபோல் இமைகளை மூடிக் கொண்டார்.

அவர் பாதம் பணிந்து எழுந்தவள், இமைகளை மூடிக் கொள்ள, அடுத்த சில நிமிடங்களில் அவள் தேகம் மெல்லிய வெப்பத்தை உணரத் துவங்கியது.

***

# நிழல் – 10

தன் தேகத்தில் மெல்லிய வெப்பத்தை உணரத் துவங்கவே, கண்களை மெதுவாகத் திறந்தாள் ஆனந்தி. அவள் இருந்த இடமோ சுவாமிஜியின் குடிசை. சற்று நேரத்துக்கு முன்னர் நடந்தவை அனைத்தும் உண்மையா பொய்யா?

‘ஒரு வேளை, நான் வழக்கமாக காணும் கனவைப் போலவே இதுவும் கனவா?’ அவள் யோசித்துக் கொண்டிருக்க, குடிசைக்குள் நுழைந்தான் சீடன்.

“நீங்க இங்கேயா இருக்கீங்க? கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி நான் இங்கே வந்து பாக்கும்போது நீங்க இல்லையே…” அவன் சொல்ல, அவனுக்கு என்ன பதில் சொல்வது எனத் தெரியாமல் விழித்தாள்.

அவனோ, “இதென்ன… இந்த வெயிலில் கம்பளி எல்லாம் போர்த்திட்டு உக்காந்து இருக்கீங்க?” அவன் ஆச்சரியமாக வினவ, அப்பொழுதுதான் தன் உடலைச் சுற்றி இருந்த அந்த கம்பளியை கவனித்தாள்.

அவள் தேகம் அப்படியே சிலிர்த்து அடங்கியது. சுவாமிஜி நொடியில் இமயமலைக்கு போய்வருவார் எனச் சொன்னபொழுது அவள் கொஞ்சம் கூட நம்பவில்லை. ஆனால், இப்பொழுது, இமை மூடி திறக்கும் நேரத்துக்குள் அவளையே அங்கே அழைத்து பேசியிருக்கிறார்.

அவரது சக்தியை எண்ணி பரவசமானாள். அப்படியே தரையில் மண்டியிட்டு வணங்கியவள், அந்த ஷாலை இறுக பற்றிக் கொண்டாள்.

அது அவளுக்கு தேவையான பதிலை உரைக்க, புது உத்வேகம் பிறந்தது. சுவாமிஜி சொன்னதை வைத்துப் பார்த்தால், அந்த ரமணனுக்கு சாதகமான நேரம் வராமல் அவன் எதையும் செய்து வைக்கப் போவதில்லை.

தனக்கு அனைத்தும் நினைவுக்கு வந்த பிறகுதான், நடக்க வேண்டிய அனைத்தும் நடைபெறும். அப்படி இருக்கையில், தேவையில்லாமல் ஏன் இப்பொழுதே குழம்பித் தவிக்க வேண்டும்? நடப்பவை அனைத்தும் அதன் போக்கில் நடக்கட்டும் பார்த்துக் கொள்வோம்?

அந்த சீடன் அவளையே பார்த்துக் கொண்டிருக்க, "நீங்க இமயமலைக்கு போயிருக்கீங்களா?" அவனிடம் கேட்டாள்.

"இல்லையே... ஏன் கேக்கறீங்க?" அவன் திருப்பிக் கேட்க,

"நான் இப்போதான் போயிட்டு வந்தேன். இந்த ஷால்வை சுவாமிஜி கொடுத்ததுதான்" உரைத்தவள், அதிர்ந்து நின்ற அவனைக் கண்டுகொள்ளாமல் அங்கிருந்து வெளியேறினாள்.

இப்பொழுது அவள் மனதுக்குள் ஓடிய விஷயம் ஒன்றுதான். 'ரமணன் தவறு செய்தால்...?' அந்த வார்த்தைகள் அவளை அதிகம் தொல்லை செய்தது.

'அவன் இப்பொழுது வலுக்கட்டாயமாக அரசியை திருமணம் செய்ய நினைப்பதே பெரிய தவறுதான்... ஆனால் அதை அவர் சுட்டிக் காட்டவில்லையே. அது தவறு இல்லையென்றால், வேறு எதுதான் தவறு?' அவளுக்குப் புரியவே இல்லை.

ஆஷ்ராமத்தை விட்டு வெளியே வந்தவள், கல்லூரி முடிய இன்னும் நேரமிருக்கவே, நேராக கல்லூரிக்குச் சென்றாள். அவள் செல்கையில் இறுதி பாடவேளை துவங்குவதற்கான மணியடிக்கவே, வேகமாக தன் வகுப்புக்குச் சென்றாள்.

அவளைப் பார்த்த அரசி, "என்னடி... இன்னைக்கும் ஆஷ்ராமத்துக்கு போய்ட்டுதான் வர்றியா? சாமியாரைப் பாத்தியா இல்லையா?" தன் கைப்பையில் இருந்து தண்ணீர் பாட்டிலை எடுத்து குடித்தவாறே கேட்டாள்.

“பாக்குறது மட்டும் இல்லை, அவர்கிட்டே எல்லாத்தையும் பேசிட்டுதான் வர்றேன்...” அசால்ட்டாக சொன்னவள், அவளிடம் எதையும் விவாதிக்க முயலவில்லை.

அவளுக்கு ஒரு விஷயம் நன்றாக புரிந்தது, அவளுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் சாபத்தின் விளைவாக தான் என்ன சொன்னாலும் அவளை அது நம்ப விடாது என்பது புரியவே, அமைதியாக அமர்ந்து கொண்டாள்.

“என்னடி சொல்ற...? அவரைப் பாத்து பேசினியா? என்ன சொன்னார்? உன் கனவுக்கெல்லாம் என்னதான் முடிவாம்?” அவளைப் பொறுத்த வரைக்கும், தோழியின் குழப்பம் முடிவுக்கு வந்தால் போதும் என்று இருந்தது.

அதற்குமேல் ரமணனின் பிரச்சனை இப்போதைக்கு இல்லை என்றே எண்ணினாள். அவளது பெற்றவரே படிப்பு முடியும் வரைக்கும் அவளுக்கு திருமணம் செய்து வைக்கும் எண்ணமில்லை என்று சொல்லிவிட்டாரே. அப்படி இருக்கையில் அவரை மீறி எதுவும் வந்துவிடாது என நம்பினாள்.

“என்னோட கனவெல்லாம் கூடிய சீக்கிரம் ஒரு முடிவுக்கு வரப் போகுதுன்னு சொன்னார்” அவள் சொல்லிக் கொண்டிருக்கையிலேயே பேராசிரியர் வகுப்புக்குள் வர அவர்களது பேச்சு தடை பட்டது.

தான் சுவாமிஜியை பார்த்துவிட்டு வந்திருக்கிறோம் எனச் சொன்ன பிறகும், ‘என்னைப்பற்றி ஏதாவது கேட்டாயா? என்ன சொன்னார்?’ இப்படி எந்தவிதமான ஆர்வமும் காட்டாத தோழியை அமைதியாக ஒரு பார்வை பார்த்தாள்.

வகுப்பில் பாடத்தை கவனிக்காமல், தன்னையே பார்த்துக் கொண்டிருந்த தோழியைப் பார்த்தவள், “என்னடி என்னையே பாத்துட்டு இருக்க? நீ இன்னுமே அந்த நினைப்பை விடலையா? எனக்கு இப்போதைக்கு லவ் பண்ற மூட் எல்லாம் இல்லை விடு...” கேலியாக என்றாலும், அதில் சிறு அழுத்தம் கொடுத்தே உரைத்தாள்.

அதை உணர்ந்துகொண்ட ஆனந்தி, “நீ இப்படியே எப்பவும் நிம்மதியா சந்தோஷமா இருக்கணும் அரசி… எனக்கு அது போதும்…” அவளுக்கு நேரவிருக்கும் விபரீதம் ஆனந்தியின் அடிவயிற்றை பதறச் செய்தது.

அவள் துர் ஆத்மாவாக அலைவதை அவளால் கற்பனை கூட செய்து பார்க்க முடியவில்லை. இப்படி அவளுக்கு அந்த ஞாபகம் வருகிறது என்றால், அதற்குப் பின்னால் வலுவான காரணம் இருக்கும் என இப்பொழுது அவள் நம்பத் துவங்கி இருந்தாள்.

“என் சந்தோஷத்துக்கு என்னடி குறைச்சல்? நீ நிம்மதியா நைட் தூங்கினால் எனக்கு அது போதும்” அவள் சொல்ல, இருவரும் ஒருவர் மற்றவரைப் பார்த்து சிரித்துக் கொண்டார்கள்.

மாலையில் அரசி கல்லூரிப் பேருந்தில் செல்ல, அவளை அழைத்துச் செல்ல வந்திருந்த ரவியுடன் பைக்கில் ஏறிக் கொண்டாள். பெற்றவர்களுக்குத் தெரியாமல் தான் செய்யும் விஷயங்கள் அனைத்தும் அதிக நாளாக அவள் மனதை அரிக்கவே, தாயிடம் தானே பேச முடியவில்லை, தந்தையிடம் பேசுவது என முடிவெடுத்தாள்.

அதுவும் சுவாமிஜி அவர்கள் அவளது பெற்றவர்களை அவள் பிரிந்து இருக்கிறாள் எனச் சொன்னதை கேட்ட பிறகு, இத்தனை வருடங்கள் தன்னை கண்ணின் மணிபோல் பாதுகாக்கும் பெற்றவரிடம் மட்டுமாவது அனைத்தையும் பேசிவிட முயன்றாள்.

“அப்பா… ஒரு காபி குடிச்சுட்டு போலாமா?” அவரிடம் கேட்கவே, மகளைத் திரும்பி ஒரு பார்வை பார்த்தவர், அருகில் இருந்த ஹோட்டலுக்கு வண்டியை விட்டார்.

ஹோட்டலுக்குச் சென்று, காபி ஆடர் செய்து அது வரும் வரைக்கும் இருவரும் எதையும் பேசிக் கொள்ளவில்லை. காபி வரவே, ரவி அதைப் பருகத் துவங்க, தந்தையை சில நொடிகள் அசையாமல் பார்த்தவள், “நான் உங்க சொந்த

பொண்ணு இல்லையாப்பா?” ஒருவித தெளிவான மனநிலையோடு கேட்டாள்.

முன்ஜென்மம் பற்றிய நினைவுகளையே தாங்கிக் கொண்டவளுக்கு, இது அவ்வளவு பெரிய அதிர்ச்சியை கொடுக்கவில்லை. ஆனந்தி தன்னை அழைத்து வந்து, இப்படி ஒரு கேள்வியை தன்னிடம் கேட்பாள் என்பதை அவர் சற்றும் எதிர்பார்க்கவில்லை.

“என்னம்மா திடீர்ன்னு… அப்படியெல்லாம் எதுவும் இல்லை…” அவரது பேச்சில் அழுத்தம் கொஞ்சம் கூட இல்லாததை கவனித்தாள்.

“எனக்கு எல்லாம் தெரியும்ப்பா…” அவரிடம் சொன்னவள், “நான் எப்படிப்பா உங்ககிட்டே வந்தேன்? எனக்குத் தெரிஞ்சாகணும்” அவள் பிடிவாதமான குரலில் கேட்க, அவரால் உண்மையைச் சொல்லாமல் இருக்க முடியவில்லை.

அவள் ட்ரெயினில் கிடைத்ததாகச் சொல்ல, அங்கே இருந்த லோக்கல் ஸ்டேஷனில் புகார் பதிவு செய்ததையும் சொன்னார். ஆனால், அவளைத் தேடி யாருமே வராமல் போகவே, அவளை தங்களுடனே வைத்துக் கொண்டதையும் சொன்னார்.

“உன்னை ஒரு நாள் கூட வேறா நினைத்ததே கிடையாதும்மா. சொல்லப்போனால், அம்முவை விட ஒருபடி மேலேதான் உன்மேல் நாங்க பாசம் வைத்திருக்கிறோம்” அவர் சொல்ல,

“அப்பா… அதை நீங்க சொல்லவே வேண்டாம்… எனக்கே தெரியும். நீங்க என்னை நல்லா கவனிக்கலை, பாசமா இல்லைன்னு சொன்னா, அது இந்த உலகத்திலேயே மிகப்பெரிய பொய்யா இருக்கும்” அவரிடம் சொன்னவள், சற்று தயங்கி,

“உங்ககிட்டே ஒரு விஷயம் சொல்லணும்ப்பா. இதை உங்ககிட்டே சொல்லலன்னா என்னையே என்னால் மன்னிக்க முடியாது” அவள் சொல்ல, தாங்கள் சந்திக்க விரும்பாத அந்த நொடிகள் தங்களை சந்திக்க வருவதை அவர் தெளிவாய் உணர்ந்தார்.

“சொல்லும்மா...” அவர் கேட்கவே, சில நிமிடங்கள் செலவழித்து அவள் விஷயத்தைச் சொல்ல, ரவியின் கண்களில் மெல்லிய நீர்ப் படலம்.

“நான் செய்யிறது சரியா தப்பா எதுவுமே எனக்குப் புரியலப்பா. ஒவ்வொரு நைட்டும் நான் அனுபவிக்கும் டென்ஷன், அது முழுசா என்னை விட்டுப் போகணும். அதேபோல், நான் அரசியை அப்படியே விட்டுடக் கூடாதுன்னு மட்டும் என் அடிமனசு சொல்லிட்டே இருக்கு.

“வேற யாருக்கும் எதுவும் நினைவுக்கு வராமல், எனக்கு மட்டும் நினைவுக்கு வருது என்றால், அதில் நான் மட்டுமே எதையோ செய்ய முடியும்னு தானே அர்த்தம்? சொல்லுங்கப்பா... ஏன் அமைதியா இருக்கீங்க” தான் இவ்வளவு சொல்லியும், அவர் அமைதியாக இருக்கவே அவர் கரத்தை உலுக்கினாள்.

அவர் கையில் இருந்த காபியில் ஆடை தேங்கியிருக்க, கப்பை மேஜைமேல் வைத்தார். “நீ இப்போ சொல்வதில் எனக்கு அதிர்ச்சி இல்லைன்னு சொல்ல மாட்டேன். ஆனா... இப்படி ஒரு சிச்சுவேஷனை நாங்க சந்திச்சே ஆகணும்னு எங்களுக்குத் தெரியும்.

“நீயே எங்களுக்கு இல்லை என்ற ஒரு நிலை கூட வரும்னு எங்களுக்குத் தெரியும். அது இன்னும் எத்தனை நாள் தள்ளிப் போகும் என்பது மட்டுமே எங்களது எதிர்பார்ப்பா, வேண்டுதலா இருக்கு. உங்க அம்மா உன்னை இப்படி பொத்தி வைக்கறாளே ஏன்?

“நீ எதை தெரிஞ்சுக்கணும்னு ஆசைப்படுறியோ, அதை நீ தெரிஞ்சுக்கவே கூடாதுன்னு அவ நினைக்கறா. ஆனா...

விதியின் கையில் நாமெல்லாம் ஒரு விளையாட்டு பொம்மை மட்டும்தான். அதை நாங்க புரிஞ்சுக்கணும். நீ தெரிஞ்சுக்க நினைப்பதை நான் தடுக்க நினைக்கலை.

“ஆனா… நீ எந்த ஆபத்திலும் சிக்கக் கூடாது என்று ஒரு அப்பாவா என் மனசு தவிக்குதும்மா. அதே மாதிரி, உனக்கு என்ன உதவி வேண்டும் என்றாலும் என்கிட்டே கேள். என்னால் முடிந்ததை நான் நிச்சயம் சொல்றேன்.

“அதே மாதிரி இதையெல்லாம் உங்க அம்மாகிட்டே சொல்ல வேண்டாம். அவளுக்கே தெரிய வரப்போ தெரிஞ்சுக்கட்டும். இப்போவே சொன்னால், உன்னை தன்னோட முந்தானையில் கட்டி வைக்கத்தான் பாப்பா” அவர் சொல்ல,

“அப்படின்னா நான் அந்த கனவு வருதுன்னு சொன்னதில் இருந்தே நீங்க எல்லாம் மனசுக்குள் வச்சு புழுங்கிட்டு இருக்கீங்க இல்ல. என்கிட்டே சொல்லியிருக்கலாமேப்பா?” சொல்லும்பொழுதே அவள் கண்களில் கண்ணீர் நிறைந்தது.

“நீ எங்க பொண்ணு இல்லைன்னு நாங்களே எப்படிம்மா உன்கிட்டே சொல்ல முடியும்? இப்போ சொல்லு… அடுத்ததா என்ன செய்யலாம்னு இருக்க?” அவர் கேட்க,

“எனக்கு சுத்தமா தெரியலப்பா. ஆனா கண்டிப்பா என்ன செய்யணும்னு எனக்கே தெரிய வரும்னு சுவாமிஜி சொல்லியிருக்கார். சோ… அதுக்காக காத்திருக்கப் போறேன்” அவள் சொல்ல தலை அசைத்தார்.

“அரசியோட அப்பாகிட்டே பேசணும்னா நானே பேசறேன்மா. ஆனா… தெளிவா எதுவும் தெரியாமல் அவங்ககிட்டே பேசி அவங்களையும் குழப்ப வேண்டாம்னு பாக்கறேன். நீ என்ன சொல்ற?” அதை அவளும் ஆமோதித்தாள்.

“ரியலி லவ் யூப்பா… இப்படி ஒரு அப்பா கிடைக்க நான் ஏதோ ஒரு ஜென்மத்தில் ரொம்ப புண்ணியம்

செய்திருக்கணும்” அவர் கரத்தை கெட்டியாக பற்றிக் கொண்டாள்.

அதென்னவோ தன் மனதின் குழப்பங்களை அவரிடம் சொன்ன பிறகு அவளுக்கு அவ்வளவு நிம்மதியாக இருந்தது. இனிமேல் செய்ய வேண்டிய விஷயங்களுக்கு கூட தந்தையின் உதவியை தன்னால் பெற்றுக்கொள்ள முடியும் என்ற நம்பிக்கை வந்தது.

வீட்டுக்குப் போனவள், தாயை கட்டிக் கொண்டு அவர் கன்னத்தில் அழுத்தமாக முத்தமிட்டாள். யாருக்கு கிடைக்கும் இப்படி ஒரு தாய்? அவர்களுக்கு என்று குழந்தை வருவதற்கு முன்னர் தத்து குழந்தைகளை நல்லபடியாக பார்க்கும் பெற்றவர்கள், அவர்களுக்கு என ஒரு குழந்தை வந்த பிறகு, மற்ற குழந்தையை வெறுக்க துவங்கி விடுவார்கள்.

ஆனால், எதேச்சையாக கிடைத்த தன்னை, இன்று வரைக்கும் தங்கள் சொந்த மகளை விட, ஒரு படி மேலாகவே பாதுகாக்கும் தாய் கிடைக்க தவம் பண்ணியிருக்க வேண்டும். அன்று இரவு தாயுடன் சேர்ந்து சமையலுக்கு உதவி செய்து, சமைத்து சாப்பிட்டார்கள்.

அத்தோடு, தாயை தன்னுடனே படுக்கச் சொல்ல, மனம் ஒருவித தெளிவில் இருக்கவே, ரமணன் தவறும் விதம், இடம் எதுவாக இருக்கும் என சிந்தித்துக் கொண்டிருந்தாள்.

நள்ளிரவைத் தாண்டிய நேரத்தில், வழக்கமான கனவு வர, “கோபம் அனைத்திற்கும் சத்ரு ஆனந்தவல்லி… கோபம் கொள்ளாதே… அது அனைத்தையும் அழித்துவிடும்…’ வழக்கமாக அவளை பெயர்சொல்லி அழைக்கும் அந்த குரல், அன்று அவளிடம் சற்று கோபமாக இரைந்தது.

அதைக் கேட்ட ஆனந்தி திடுக்கிட்டு எழுந்து அமர்ந்தாள். அதே நேரம், தான் செய்ய வேண்டியது இன்னதென்று அவளுக்கு புரியத் துவங்கியது.

***

# நிழல் – 11

அந்த ஏகாந்த இரவில், தனக்கு வந்த கனவின் மூலம் தான் செய்ய வேண்டியது இன்னதென்று அவள் அட்டவணைப் படுத்த, அதே நேரம் தன் வீட்டின் படுக்கையறையில் பத்மாசன நிலையில் அமர்ந்திருந்தான் ரமணன்.

அவன் முகத்தில் ஒருவித ஆக்ரோஷமும் கோபமும் தாண்டவமாட, தான் எந்த இடத்தில் தவறுகிறோம் என தனக்குத் தானே கேட்டுக் கொண்டான். ஒவ்வொரு ஜென்மங்களிலும் அவன் அடைந்துவரும் தோல்வி, அவனை மிகவும் மூர்க்கனாக்கியது.

இது அவர்கள் அனைவரின் ஏழாவது ஜென்மம். இதற்குமேல் அவனுக்கு வாய்ப்பே இல்லை. அவளை அவனால் அடைய முடியாது. இதுவே அவனுக்கு இருக்கும் கடைசி வாய்ப்பு.

இந்த ஜென்மத்தில் ஒரு சிறு தவறு கூட நேர்ந்துவிடக் கூடாது என்பதற்காக பார்த்து பார்த்து ஒவ்வொன்றையும் வெகு கச்சிதமாகவே செய்து வந்தான்.

அதிலும், ஆனந்தியின் பதினெட்டாம் வயதில் அவளுக்கு பூர்வ ஜென்ம நினைவுகள் வரத் துவங்கும் என்பதால், அதை வளர விடாமல் இருக்க, அதை முளையிலேயே கிள்ளி எறிய வேண்டி அனைத்து வேலைகளையும் செய்தான்.

முந்தின ஜென்மங்களில் அவளுக்கு அதே வயதிலும், அதே நேரங்களிலும் நினைவுகள் வந்தது என்பதால், அவனால் அவற்றை சரியாக உணர முடிந்தது.

அவளுக்கு எந்த நேரம் கனவுகள் வரும் என்பதை அறிந்திருந்தவன், சரியாக அது வரும் வேளையில் அவள் உறக்கம் கலைக்க வேண்டி, அந்த கூர்க்காவை ஏற்பாடு

செய்தவன் அவன்தான். அவளுக்கு உறக்கம் கலைந்துவிட்டால், அவளால் முழுதாக எதையும் உணர்ந்துகொள்ள முடியாது என கணக்குப் போட்டான்.

கனவுகள் அவளுக்கு வரவில்லை என்றால், தர்மாவை அவளால் கண்டுபிடிக்கவே முடியாது என அவன் நினைத்திருக்க, அவனை அவள் சந்தித்ததை அவனால் நம்பவே முடியவில்லை.

கனவுகள் அனைத்தும் முழுமையடையாத பொழுதும், அவளால் எப்படி தர்மனை அடையாளம் காண முடிந்தது என்பதை அவனால் கொஞ்சம் கூட புரிந்துகொள்ள முடியவில்லை.

‘ஒரு வேளை கனவுகள் மட்டும் அல்லாது, வேறு வழியிலும் அவளுக்கு பூர்வ ஜென்ம ஆட்களை இனம் காண முடிகிறதோ?’ அதை அவனால் தெளிவுபடுத்திக் கொள்ள முடியவில்லை.

அவனுக்குத் தெரியவில்லை, பூர்வ ஜென்ம பந்தத்தில் உள்ள ஆட்கள் அவள் இருக்கும் இடத்துக்கு அருகில் வந்தாலே, அவளை அறியாமல் அவளது புலன்கள் அனைத்தும் அவர்களை நோக்கி குவியும் என்று அவனுக்கு யார் சொல்வது?

தர்மனை அவள் எங்கே எப்படி சந்தித்தாள்? அவள் அவளை கண்காணித்த வரைக்கும், தர்மன் இருக்கும் திசை கூட அவளுக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. தர்மனும் அவளுக்கு சம்பந்தமான இடங்களில் இருக்க வாய்ப்பே இல்லை என்பதால்தான் கொஞ்சம் மெத்தனமாக இருந்தான்.

ஆனால் அவளோ, தர்மனை அரசியின் வீட்டுக்கே அழைத்துச் செல்வாள் என்பதை ஒரு சதவீதம் கூட எதிர்பார்க்கவில்லை. அவள் என்னதான் முயற்சி செய்தாலும், அவர்களுக்கு ஒருவர் மற்றவரைப் பற்றிய எதுவும் நினைவுக்கு வராது என்பது அவனுக்குத் தெரியும்.

ஆனாலும் தன்னை மீறி அவனுக்கு பயம் எழுந்தது மட்டும் உண்மை. அவனது பயத்தை உண்மையாக்குவதுபோல், அந்த சுவாமிஜியின் ஆஷ்ரமத்தில் அவர்களது முதல் சந்திப்பு... அவன் எங்கேயோ தோற்றுக் கொண்டிருப்பதை அவனுக்கு உணர்த்தியது.

ஆனந்தியைப் பொறுத்த வரைக்கும், அவள் இந்த சாமியார், பூஜை இவற்றில் எல்லாம் நம்பிக்கை அற்றவள் என அவன் நினைத்திருக்க, பெற்றவர்களை விடுத்து தனியாக அவள் ஆஷ்ரமத்தில் சென்று நிற்பதை சாதாரணமாக கடந்துவிட முடியவில்லை.

அதுவும் அரசியும், தர்மாவும் நேருக்கு நேர் சந்தித்துக் கொண்ட அந்த நொடி, எங்கே அவர்களுக்கு எதுவும் நினைவுக்கு வந்துவிடுமோ என அவன் பயந்தது அந்த கடவுளுக்கும் அவனுக்கும் மட்டுமே தெரியும். அவன் வாழ்நாளிலேயே அப்படி ஒரு நொடியை தொட்டிருக்க மாட்டான்.

அவர்களுக்குள் சிறு அறிமுக பாவம் கூட இல்லாமல் பிரிந்த பிறகும் கூட, ரமணனால் அமைதியாக இருக்க முடியவில்லை. அதற்கு காரணம், அரசியும், தர்மாவும் இணைய வேண்டும் என்றால், அது ஆனந்தி ஒருத்தியின் துணையால் மட்டுமே முடியும்.

இப்பொழுது அவனுக்கு முன்னால் இருக்கும் மிகப்பெரும் பிரச்சனையாக உருவெடுத்து இருப்பவள் ஆனந்தி மட்டுமே. அவளுக்கு எதுவும் நினைவுக்கு வராமல் இருக்க, கூர்க்கா வரைக்கும் இறங்கி அவன் யோசித்தால், அவளோ அனைத்து தடைகளையும் கடந்து முன்னேறிக் கொண்டிருக்கிறாள்.

‘இல்லை... இதற்கு ஒரு முடிவு கண்டே ஆக வேண்டும். இன்னும் முப்பதே நாள்... அதை கடத்திவிட்டோம் என்றால், முப்பத்தி ஓராம் நாள், அரசி எனக்கு சொந்தமாகி இருப்பாள். தீவிரமாக திட்டமிடத் துவங்கினான்.

அவன் அவ்வளவு தைரியமாக திட்டமிட இன்னொரு காரணமும் இருந்தது. ஆனந்திக்கு இன்னும் முழுதாக எதுவும் தெரியவில்லை. அப்படியே தெரிந்திருந்தால், இந்த நேரத்துக்கு அரசி, தர்மாவை தன் உயிரைக் கொடுத்தாவது திருமண பந்தத்தில் இணைத்திருப்பாள்.

அப்படியான முடிவுக்கு அவள் செல்லும் முன்னர், அவளுக்கு நடந்து முடிந்த உண்மைகள் அனைத்தும் தெரிவதற்கு முன்னர் தான் முந்திக்கொள்ள முயன்றான். என்றைக்கு அரசியும், தர்மாவும் நேரில் சந்தித்தார்களோ, அன்றுமுதல் அவனது தூக்கம் தூரப் போய்விட்டது என்றே சொல்லலாம்.

அதிலும் தினமும் இரவில் அந்த கூர்க்கா அலைபேசியில் அழைத்து, தன் வேலையை சரியாக செய்துவிட்டேன் எனச் சொல்லும் வரைக்கும் அவனால் பொட்டு தூக்கம் தூங்க முடியவில்லை. இன்றும் அதே நிலையில் அமர்ந்திருந்தவன், அலைபேசி அழைக்கவே கலைந்தான்.

“சொல்லு…” அவன் குரல் கொடுக்கவே,

“வேலையை முடிச்சுட்டேன் சார்…” அவன் சொல்ல, அலைபேசியை அணைத்தவன், படுக்கையில் படுத்துக் கொண்டான்.

அவன் எப்படி அவளை கணிக்கிறானோ, அதேபோல் ஆனந்தியும் செய்ய வேண்டியதை திட்டமிட்டவள் நிம்மதியாகத் தூங்கினாள்.

மறுநாள் கல்லூரிக்கு வந்த தோழிகள் இருவரும் மரத்தடியில் அமர்ந்து பேசிக் கொண்டிருக்க, தர்மனின் கார் அவர்கள் கல்லூரிக்குள் நுழைந்தது. அதைப் பார்த்த ஆனந்தி, “அரசி, கொஞ்ச நேரத்துக்கு நான் என்ன செய்தாலும், சொன்னாலும் ஏன் எதுக்குன்னு கேக்காமல் செய்யணும் சரியா?” அவளிடம் கேட்க, அரைமனதாக சம்மதித்தாள்.

தர்மன் தன் காரை பார்கிங்கில் நிறுத்தியவன், ஆனந்தி எங்கே இருக்கிறாள் என பார்வையால் துழாவினான். ‘இங்கேதானே வர்றேன்னு சொன்னா... ஆளையே காணோம். இன்னைக்கு எதுக்கு வரச் சொன்னான்னு தெரியலையே...’ எண்ணியவன் தன் அலைபேசியை எடுத்தான்.

அவன் தனக்கு அழைப்பு விடுக்கப் போகிறான் என்பதை அங்கே இருந்தே கவனித்தவள், வேகமாக தன் அலைபேசியை ஏரோபிளேன் மோடுக்கு மாற்ற, அவன் தொடர்பு கொள்கையில் அலைபேசி அணைத்து வைக்கப் பட்டிருப்பதாகச் சொன்னது.

அதைக் கேட்டவன், ‘இப்போ என்ன செய்ய? வரச் சொல்லிட்டு ஆளையும் காணோம், போனையும் ஆப் பண்ணி வச்சிருக்கா. உள்ளே போய் தேடவா? இல்லன்னா திரும்பி போய்டவா?’ அவன் எண்ணிக் கொண்டிருக்க,

ஆனந்தியின் பார்வை பார்கிங் ஏரியாவில் இருக்கவே, தானும் அந்த திக்கில் பார்த்தவள், அங்கே நின்றிருந்த தர்மாவைப் பார்த்துவிட்டாள். உடனே அவளுக்குத் தெரிந்து போனது, அது ஆனந்தியின் வேலைதான் என்று.

எனவே, “என்னடி... அவரை வரச் சொல்லிட்டு ஒளிஞ்சு விளையாடிகிட்டு இருக்க? இதில் என் ஹெல்ப் வேற கேக்கற? நீ சரியில்லையே...” தோழியை சந்தேகமாகப் பார்த்தாள்.

“அரசி... எனக்கு வேண்டி ஒரே ஒரு ஹெல்ப் பண்ணு, நான் என்ன ஹெல்ப் கேட்டாலும் செய்வேன்னு சொல்லியிருக்க...” அவள் மறுக்கும் முன்னர், தோழிக்கு நினைவு படுத்தினாள்.

“சரி... சரி... செஞ்சு தொலையிறேன். ஒரே ஒரு கண்டிஷன்... அவர்கிட்டே போய் ஐ லவ் யூன்னு மட்டும் சொல்லச் சொல்லிடாதே...” அவளது எச்சரிக்கையைக் கண்டு சிரித்துக் கொண்டாள்.

“அதை நான் சொல்லாமலே நீயே அவர்கிட்டே சொல்லுவ, இது வேற… அவரை கேண்டீன்க்கு கூட்டி போய் ஒரே ஒரு காபி வாங்கிக் கொடுக்கணும். கூடவே, நான் இன்னைக்கு காலேஜுக்கு வரலைன்னு சொல்லி அவரை அனுப்பிடு அவ்வளவுதான்…” அவ்வளவுதான்.

இப்படிச் சொன்ன தோழியை வேற்றுகிரகவாசியைபோல் பார்த்தாள் அரசி. அவள் பார்வையை உணர்ந்தவள், “ம்ச்… எல்லாம் விஷயமாத்தான் செய்யச் சொல்றேன். இதென்ன பெரிய கஷ்டமான வேலையா? போ.. போ…” அவளை அனுப்பினாள்.

வேறு வழியின்றி அவனிடம் சென்ற அரசி, “ஹாய்… என்ன ஆனந்தியை தேடுறீங்களா வாங்க…” அவனை அழைத்துக் கொண்டு சென்றவள், ஆனந்தி சொல்லிக் கொடுத்ததைப் போலவே சொல்ல, காபியை குடித்து முடித்தவன், அவளை வித்தியாசமாகப் பார்த்தான்.

அவன் பார்வையை உணர்ந்தவள், ‘அவகூட சேரும் எல்லாமே லூசாத்தான் இருக்கும் போலன்னு நினைக்கறான் போல…’ அவன் மனதுக்குள் நினைப்பதை சரியாக கணித்தாள்.

“ஏங்க… அவங்க இல்லன்னு அங்கேயே சொல்லியிருக்கலாமே, உங்களுக்கு எதுக்கு வீண் சிரமம்?”.

“நானும் அதையேதான் அந்த லூசுகிட்டே சொன்னேன். இல்ல, என்னை பாக்க வேலைமெனக்கெட்டு வர்றார்… அவருக்கு ஒரு கப் காபி மட்டும் வாங்கிக் கொடுத்து அனுப்புன்னு சொன்னா அதான்…” அவள் சொல்ல, அதற்குமேல் அவளிடம் எதையும் விவாதிக்காமல் கிளம்பிவிட்டான்.

வெகு சாதாரணமான அந்த பேச்சுக்களையும், அவர்கள் தனிமை சந்திப்பையும் தூரத்தில் இருந்து பார்த்த ரமணனுக்கு அடிவயிற்றில் நெருப்பை பற்ற வைத்த தகிப்பு. தர்மனை அந்த நேரமே கொன்று போடும் வேகம்.

‘இவன் இருந்தால் தானே அரசியை திருமணம் செய்வான்... அவனை இல்லாமலே செய்து விடுகிறேன். இதற்குமேல் அவனை விட்டுவைக்க முடியாது’.

எண்ணியவன், தர்மனின் கார் பிரேக் வயரை கட் செய்து விட்டு, ஒன்றும் அறியாதவன்போல் சென்றுவிட்டான். ஆனால், அவனது அந்த செயலே, தர்மனின் கடந்தகால நினைவுகள் வரக் காரணமாக இருக்கப் போகிறது என்பதை அவன் அந்த நிமிடம் அறியவே இல்லை.

***

# நிழல் – 12

சாலையில் பயணித்துக் கொண்டிருந்தான் தர்மன்.

‘ஆனந்தி எதற்காக தன்னை அழைத்தாள்? கல்லூரிக்கு வராதவள், தன்னை கல்லூரிக்கு வரச் சொன்னதன் காரணம் என்ன?

‘என்னைத் தேடி வந்து பேசிய அரசி, எதுவும் பேசாமல் காபி மட்டும் வாங்கிக் கொடுத்து அனுப்பியது ஏன்? அதையும் ஆனந்தி செய்யச் சொன்னதாகத்தானே சொன்னாள்... ஆனந்தியின் அலைபேசி அணைத்து வைக்கப்பட்டிருக்கையில், அவள் எப்பொழுது எப்படி அரசியிடம் பேசினாள்?

‘எனக்கு கால் செய்து பேசிய உடனேயே தோழியிடமும் பேசிவிட்டாளா? அப்படி எதையாவது சொல்லியிருந்தால் அரசி அமைதியாக இருந்ததன் காரணம் என்ன?’ ஹப்பா யோசித்து யோசித்து அவனுக்கு தலையை வலித்தது.

தன் யோசனையிலேயே இருந்தவன் காரை மிதமான வேகத்தில் செலுத்தியதால், பிரேக் பிடிக்கவில்லை என்ற விஷயத்தை அவன் கவனிக்கவே இல்லை. அவர்களது கல்லூரியும் சிட்டியை விட்டு கொஞ்சம் அவுட்டர் என்பதால் பெரிதாக போக்குவரத்து நெரிசலும் இருக்கவில்லை.

சற்று தூரம் வந்த பிறகுதான் முதல் சிக்னல் என்பதால், காரின் பிரேக்கை அப்பொழுதுதான் அழுத்தினான். ஆனால் கார் நிற்காமல் தொடர்ந்து ஓடிக் கொண்டிருக்க, சட்டென ஒரு சிறு கலவரத்துக்கு உள்ளானான்.

‘என்னது பிரேக் பிடிக்கலையா?’ தன்னால் முடிந்தமட்டும் ப்ரேக்கை அழுத்த, அது கொஞ்சம் கூட வேலை செய்யவில்லை. கார் அவனது கட்டுப்பாட்டை மீறி, சிக்னலை நோக்கிப் பாய, வேகமாக கார் ஜன்னலை கீழே இறக்கியவன், வலக்கையை வெளியே நீட்டி வேகமாக

அசைத்து, ப்ரேக் இல்லை என்பதை முடிந்த மட்டும் உரக்க கூவி சொன்னான்.

அவனது செய்கையும் குரலும், குறுக்கே வந்தவர்களை அலட் செய்ய, வேகமாக விலகிக் கொண்டார்கள். காரின் வேகத்தை தன்னால் முடிந்த அளவுக்கு குறைத்தவன், மற்ற வாகனங்களில் தன் கார் மோதிவிடாமல் இருக்க மிகுந்த பிரத்தியனப்பட்டான்.

‘இங்கே வரும்பொழுது சரியாகத்தானே இருந்தது...?’ அந்த சிந்தையை சிந்திக்க கூட நேரம் இருக்கவில்லை. அடுத்த நொடி என்ன ஆகுமோ எனத் தெரியாத ஒரு உச்சகட்ட பரபரப்பு... மெயின் சாலையில் இருந்து பிரிந்து, பக்கச் சாலையில் வண்டியை ஓடித்தான்.

அது சற்று கரடு முரடான ரோடாக... சற்று இறக்கமாக இருக்கவே, கார் வந்த வேகத்திலும், அவன் திருப்பிய வேகத்திலும் அசுர வேகத்தில் பாய்ந்தது. காரை விட்டுவிட்டு வெளியே குதித்து தப்பிவிடலாம் என்றால் கூட, நிச்சயம் உயிருக்கு உத்திரவாதம் இருக்கப் போவதில்லை என்றே தோன்றியது.

கூடவே, கார் தாறுமாறாக ஓடி, எதிரில் வரும் அப்பாவிகள்மேல் ஏறி, விபத்தையோ, உயிர் சேதத்தையோ ஏற்படுத்திவிடக் கூடாது என்ற கவனம் அதிகமிருக்க, தன்னால் முடிந்த அளவுக்கு அதை கட்டுப்படுத்த போராடினான்.

தறிகெட்டு ஓடும் வாகனத்தை உள்ளுக்குள் அமர்ந்துகொண்டு எப்படி தடுத்து நிறுத்த முடியும்? அப்படிச் செய்ய அவன் என்ன சூப்பர் மேனா? இல்லையென்றால் ஸ்பைடர் மேனா? அவன் சாதாரண மனிதன் ஆயிற்றே எனவு ஸ்டியரிங்கை கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டு, என்ன செய்யலாம் என சுற்றிலும் பார்த்தான்.

சற்று இடப்பக்கத்தில் ஒரு பாறையும், அதன் அருகில் வைக்கோல் போரும் இருக்கவே, சட்டென ஒரு முடிவுக்கு

வந்தான். கொஞ்சம் கூட யோசிக்காமல் ஸ்டியரிங்கை ஒடித்து திருப்ப, கார் ரோட்டின் பக்கச் சுவரை உடைத்துக்கொண்டு கார் அந்த நிலத்துக்குள் பாய்ந்தது.

கார் செல்லும் வேகத்தில் அந்த பாறையில் மோதினால், பெட்ரோல் டேன்க் வெடித்து, தீப்பொறி உருவாகி காரே நெருப்பு பற்றிகொள்ளும் என்பதை உணர்ந்து கொண்டான். எனவே, வலப்பக்க கார் டயரை மட்டும் அதில் மோத விட, கார் அப்படியே அந்தரத்தில் கிட்டத்தட்ட பறந்தது என்றே சொல்லலாம்.

மோதிய வேகத்தில் அவன் எவ்வளவு முயன்றும் பெட்ரோல் டேன்க் சேதமாவதை அவனால் தடுக்க முடியவில்லை. அவன் என்ன ஸ்டண்ட் மாஸ்ட்டரா? சரியான ஆங்கிளில் பாறையில் மோத? இருந்த டென்ஷனில் என்ன செய்வது என்றே தெரியாத சூழலில் அவன் இவ்வளவு செய்ததே பெரிதுதான்.

கார் அந்தரத்தில் பறக்கும்பொழுதே பெட்ரோல் வெளியேற, கிட்டத்தட்ட தலைகீழாக கவிழ்ந்த நிலையில் வைக்கோல் போருக்குள் கார் சென்று விழ, அடுத்த நொடியில் காரோடு சேர்ந்து வைக்கோல்போரும் தீப்பிடித்து எரியத் துவங்கியது.

சீட் பெல்ட் அணியாததால், அவனது தலை பலமாக மோத, ரத்தம் குபுக்கென வெளியேறியது. அதே நேரம் காரைச் சுற்றி நெருப்பு பற்றிக்கொள்ள, ‘என் காதல் உண்மையென்றால் எத்தனை ஜென்மம் கடந்தாலும் நான் உங்களை வந்து அடைவேன்... இது சத்தியம்...’ நெருப்புக்குள் நின்று அரசி பேச, அவன் கண்களுக்குள் பெரும் பிரம்மாண்டமே விரிந்தது.

கூடவே... அவனுக்குள் சில பல மாற்றங்கள் நிகழ, “ஊர்மிளா தேவி...” அவன் இதழ்கள் அந்த பெயரை உச்சரித்தது. சுற்றிலும் பற்றிக்கொண்ட நெருப்புக்குள்

சிக்கிக் கொண்டவன், தலையில் அடிபட்டதால் ஆழ்ந்த மயக்கத்துக்குச் சென்றான்.

அங்கே சற்று தூரத்தில் வேலை செய்துகொண்டிருந்தவர்கள் இந்த சம்பவத்தைப் பார்க்கவே, அவனைக் காப்பாற்ற ஓடி வந்தார்கள். கார் மட்டுமாக எரிந்திருந்தால் கூட உடனடியாக அவர்களால் ஏதாவது செய்திருக்க முடியும், ஆனால் வைகோல்போரும் சேர்ந்து எரியவே சில நிமிடங்களுக்கு அவர்களால் எதுவும் செய்ய முடியவில்லை.

அங்கே இருந்த இளைஞர்கள் ஆம்புலன்ஸ், தீயணைப்பு உதவியை நாட, அவர்களும் வரத் துவங்கினார்கள்.

ஆனாலும் அவர்களது முயற்சியை கைவிடாமல் அவர்கள் போராடி, தர்மனை வெளியே எடுக்கையில், கை, கால் முகத்தில் நெருப்பு காயத்தோடு வெளியே வந்தான். உடனடியாக ஆம்புலன்ஸ் அங்கே வரவே, தர்மன் அருகில் இருந்த மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டான்.

அங்கே தீவிர சிகிச்சைப் பிரிவில் அவன் அனுமதிக்கப்பட, நினைவின்றிக் கிடந்தான் தர்மன். புற நினைவுகள் இல்லாமல் போனாலும், அகம் விழித்துக் கிடக்க, ‘ஊர்மிளா தேவி… ஊர்மிளா தேவி…’ அவன் மனம் அரற்றிக்கொண்டு இருந்தது.

‘என்னவளை நான் அடையச் செல்ல வேண்டும்… அவளை ரட்சிக்க வேண்டும்… இந்த ஜென்மம்தான் எங்களுக்கு இருக்கும் இறுதி வாய்ப்பு…’ அவனது உள் மனம் தவிக்க, அது அவனது நாடித்துடிப்பிலும் எதிரொலித்தது.

அவனது எண்ணங்களுக்கு ஏற்ப பல்ஸ் அன் ஸ்டேபிளாக இருக்க, அதை உடனே கட்டுக்குள் கொண்டு வர வேண்டும் என்பது அவர்களுக்குப் புரிந்தது. மருத்துவர் தன் கரத்தை நீட்ட, அவன் எதைக் கேட்கிறான் என்பது புரிய, செவிலி அந்த ஊசி மருந்தை எடுத்துக் கொடுத்தாள்.

தர்மனோ… ‘நான் உடனே ஊர்மிளா தேவியிடம் செல்ல வேண்டும். நான் இங்கே இருக்கக் கூடாது…’ மனத்தால் அங்கிருந்து எழ முயல, அவனது உடல் இங்கே தூக்கிப் போட்டது.

உதிரம் அதிகமாக வெளியேறியிருக்க, அவனுக்கு உடனடியாக ப்ளட் வேண்டும் என்பது புரியவே, ஒரு செவிலி அந்த அறையை விட்டு வெளியே விரைந்தாள்.

வெளியே வந்தவள், மற்றவளிடம், “அந்த பேஷண்டோட டீட்டெயில் ஏதாவது தெரிந்ததா? உடனே ப்ளட் வேணும். ப்ளட் பேன்க்ல எ பாசிடிவ் ப்ளட் இருக்கான்னு பாத்து உடனே வாங்கிட்டு வா…” மற்றவளை அனுப்பியவள் அறைக்குள் நுழைந்தாள்.

அங்கே அவனுக்கு ஃபிக்ஸ் வர… அடுத்த இன்ஜெக்ஷன் ரெடியாக எடுத்துக் கொடுத்தவள், அவனது காயங்களை எல்லாம் சுத்தம் செய்யத் துவங்கினாள்.

அவனது உடலை அவர்கள் பிடித்து வைக்க, அவனது மனம் உள்ளுக்குள் பெரும் போராட்டத்தையே நடத்திக் கொண்டிருந்தது.

‘ஆனந்தி… நீ எவ்வளவு நல்ல தோழி… இத்தனை ஜென்மங்களாக உன் காதலை விட, எங்கள் காதலை சேர்த்து வைக்க போராடிக் கொண்டிருக்கிறாயே. இத்தனை ஜென்மங்களாக உனக்கு உதவ முடியாத துர்பாக்கிய நிலையில் இருந்தேன்.

‘இந்த ஜென்மத்தில் எனக்கு அனைத்தும் நினைவு வந்துவிட்டது. இதோ… இப்பொழுதே வருகிறேன்…’ மனதில் உரைத்தவன், கால்களை பலமாக அசைத்து ஓட முயன்றான்.

அவனது பிபியை முதலில் நார்மலுக்கு கொண்டு வந்தவர்கள், அவனுக்கு மயக்க மருந்து கொடுத்து உறங்க வைத்தார்கள். அவன் அமைதியா இருந்தால் மட்டுமே

மேற்கொண்டு சிகிச்சை செய்ய முடியும் என்பதால் விரைந்து செயல்பட்டார்கள்.

அடுத்த நிமிடத்தில் அவன் உடலுக்குள் செலுத்திய மருந்து அதன் வேலையை மிகச் சரியாக செய்தது.

அவன் இங்கே மயக்கத்தில் இருக்க, காருக்குள் கருகிப் போன அவனது அலைபேசிக்கு முயன்று கொண்டிருந்தாள் ஆனந்தி. அதுவோ இப்பொழுது அணைத்து வைக்கப் பட்டிருப்பதாக உரைக்க, அவளுக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை.

ஸ்பாட்டுக்கு வந்த போலீஸ், அவனது பர்ஸ், போன், உடமைகள் என கைப்பற்றினாலும், அதிலிருந்து அவர்களால் உபயோகமான எந்த தகவலையுமே பெற முடியவில்லை. அவனது கார் நம்பரை வைத்து, அவனது பெயர் முகவரியை கண்டறிந்தவர்கள், அவனது பெற்றோருக்கு தகவல் கொடுத்தார்கள்.

விபத்துக்கான காரணத்தை ஆராய, ப்ரேக் பெயிலியர் என்பதை முதல் கட்டத்திலேயே கண்டுபிடித்து விட்டார்கள். அதுவும் வேண்டும் என்றே யாராலோ கட் பண்ணி விடப் பட்டிருப்பது தெரிய, இதைச் செய்தவர்கள் யாராக இருக்கும் என விசாரிக்க முடிவெடுத்தார்கள்.

ஆனால், அதற்கு தர்மன் கண்விழிக்க வேண்டும் என்பதால் அதற்காக காத்திருக்கத் துவங்கினார்கள்.

ஆனந்திக்கு அன்று இரவில் தூக்கமே வரவில்லை. ஆனந்தி எத்தனையோ முறை அழைத்த பிறகும் அதே பதிலே வர, ரமணனின் மூலமாக அவனுக்கு ஏதோ ஆபத்து நேர்ந்துவிட்டதோ என பயந்து போனாள். இந்த சந்தேகத்தை யாரிடம் சொல்வது என திணறியவள், இறுதியில் தந்தையிடம் சொல்வது என முடிவெடுத்தாள்.

நேரம் நள்ளிரவை கடந்துவிட்டது எனத் தெரிந்தாலும் அதைப்பற்றி கவலைப் படாமல் தந்தையை எழுப்பிவந்து

விஷயத்தைச் சொல்ல, ‘என்னம்மா இந்த நேரத்தில்…’ என்றெல்லாம் அவர் சலித்துக் கொள்ளவே இல்லை.

“உன்கிட்டதான் அவரோட கார்ட் இருக்கு தானே, நாம நாளைக்கு காலையில் அங்கே போய் பார்க்கலாம். இப்போ போய் நிம்மதியா தூங்கு. இந்த நேரத்தில் நம்மால் எதுவுமே செய்ய முடியாதும்மா” அவர் உரைக்க அதில் இருந்த உண்மை புரியவே வேறு வழியின்றி அறைக்குச் சென்றாள்.

மகளது குழப்பம் புரிய, கனத்த மனதோடு தானும் தூங்கச் சென்றார். காலையில் கண் விழித்தவர் வழக்கம்போல் செய்தித்தாளை புரட்ட, அந்த கார் விபத்து அவர் கண்ணில் பட்டது. வழக்கமான செய்தி என கடந்துவிட நினைத்தாலும், மகள் தர்மனுக்கு ஏதாவது ஆபத்து நேர்ந்திருக்குமோ? எனக் கேட்டிருக்கவே, அந்த செய்தியை வாசித்தார்.

தர்மன், வயது 27 என படித்தவுடனேயே பெரும் பரபரப்பு அவரைத் தொற்றிக் கொள்ள, மனைவியின் கவனத்தை கவராதவாறு மகளின் அறைக்குச் சென்றவர், அவளை எழுப்பி அந்த செய்தித்தாளை காட்ட, அதைப் பார்த்தவள் முழுதாக அதிர்ந்து போனாள்.

“அப்பா… உடனே நாம ஹாஸ்பிடல் போகணும்…” அவள் படபடக்க, கல்பனாவை எப்படியோ சம்மாளித்துவிட்டு இருவரும் மருத்துவமனைக்குச் சென்றார்கள்.

அங்கே அவசரசிகிச்சைப் பிரிவுக்குள் தர்மன் இருக்க, அவனுக்கு நினைவு திரும்பவில்லை என பேசிக் கொண்டார்கள். இவர்களைப் பார்த்த தர்மனின் தந்தை, அவர்களை கேள்வியாகப் பார்க்க, “இல்ல… எங்களுக்குத் தெரிஞ்சவங்க மாதிரி இருந்தது அதான்…” ரவி சம்மாளித்தார்.

அவரிடம் சொல்வது என்றால் எதைச் சொல்வது? அந்த நேரம் அங்கே போலீஸ் வேறு வர, இவர்கள் சொல்லும் கதையை அங்கே இருக்கும் யாருமே நம்பப் போவதில்லை

என்பதால், மகளை கண்களால் அடக்கிவிட்டு அழைத்து வந்துவிட்டார்.

“அப்பா... அந்த ரமணன்தான் ஏதோ பண்ணிட்டான்...” மருத்துவமனைக்கு வெளியே வந்தவள் அழ, அவளை தன் தோள் சாய்த்துக் கொண்டார்.

“எனக்கும் அது புரியுதும்மா... ஆனா நாம் சொல்லப்போகும் விஷயத்துக்கு என்ன ஆதாரம்? போலீஸ் கேட்டால் முன் ஜென்மம், பகை, பந்தம்னு நம்மால் காரணம் சொல்லப்பட்டால், அவங்க சிரிக்க மாட்டாங்க? அப்படி சொல்லபோகும் நம்மையே குற்றவாளி ஆக்கிடுவாங்க வேண்டாம்.

“தர்மனுக்கு நினைவு திரும்பும் வரைக்கும் நாம் பொறுமையாக இருந்துதான் ஆகணும். நமக்கு வேற வழி இல்லை...” அவர் சொல்லிக் கொண்டிருக்க, திடுமென அவளுக்குள் ஒரு மாற்றம்... தேகத்தின் முடிகள் அனைத்தும் சிலிர்த்துக் கொள்ள, பார்வையை வேகமாக தன்னைச் சுற்றி திருப்பினாள்.

அங்கே இருந்த சிறு கோவில் படிக்கட்டில் ஒரு பெண்மணி வீழ்ந்து கிடக்க, அவள் கண்களுக்கு அவர் மட்டுமே தெரிய, சுற்றிலும் இருந்தவை அனைத்தும் மங்கலாகத் தெரிந்தது.

“அப்பா... தர்மாவோட அம்மா... ராஜ மாதா...” உரைத்தவள், தந்தையின் பதிலை எதிர்பாராமல் கிட்டத்தட்ட அவரிடம் ஓடினாள்.

ஓடிச் சென்றவள் மூச்சுவாங்க நின்று, “ராஜமாதா... தங்கள் புத்திரனுக்கு எந்த ஆபத்தும் நேராது. அவர் என் அரசிக்கு உடையவர்...” அவள் சொல்ல, அவள் பேசிய தமிழில் சற்று குழம்பினாலும், அவள் சொன்ன செய்தியில் மனம் குளிர்ந்தவர், தன்னை மீறி அவளை கட்டிக் கொண்டார்.

போர் பாசறையில் அவள் அமிழ்தனை சந்திக்கச் சென்றிருந்தபொழுது, தர்மனின் தாயை அவள்

கண்டிருக்கிறாள். எனவே அவரை அவளால் அடையாளம் காண முடிந்தது.

***

# நிழல் – 13

மூன்றாமாண்டு கல்லூரி மாணவிகள் அனைவருமே குதூகலத்தில் திளைத்துக் கொண்டிருந்தார்கள். கல்வி சுற்றுலா என்றால் சும்மாவா? வழக்கமாக ஆறாம் செமஸ்டரில் போகும் கல்வி சுற்றுலா, இந்த வருடம் எலக்ஷன் வரும் காரணத்தால் ஐந்தாம் செமஸ்டருக்கே செல்வதாக முடிவெடுத்திருந்தார்கள்.

சாதாரணமான ஊட்டிதான்… செல்லும் இடத்தை விட, தோழிகளோடு மூன்று நாட்கள் இருக்கலாம் என்பதே சந்தோஷமான விஷயம் ஆயிற்றே. அதுவும் எழுபத்தியிரண்டு மணிநேரங்கள், தோழிகளோடு மட்டுமே… அரட்டை கச்சேரி, சிறகடிக்கும் சுதந்திரம்… அதை யாராவது தவிர்ப்பார்களா என்ன?

அந்த நாளுக்காக மாணவிகள் மட்டுமா? ரமணனும் ஆவலாக எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். அந்த நாளுக்காகத்தான் இந்த ஜென்மம் எடுத்தது முதலே காத்துக் கொண்டிருக்கிறான் என்றே சொல்லலாம்.

அரசியை காணும் பொழுதெல்லாம் அவனுக்குள் கிளர்ந்தெழும் ஒருவித வேகம், அவள் எப்படி தன்னை தவிர்க்கலாம் என்ற குரோதம்… இத்தனை ஜென்மங்கள் கடந்தாலும் அவள்மேல் இருக்கும் மோகமோ, தாபமோ குறையாதது கண்டு அவனுக்கே ஆச்சரியமாக இருந்தது.

இத்தனை ஜென்மங்களில், இருவரின் நட்சத்திரத்துக்கு ஏற்ப, அவனுக்கே அவனுக்கு என கிடைக்கப் போகும் அந்த அரைமணி நேரம்… அந்த நேரத்தில் அரசியின் கழுத்தில் அவன் தாலி கட்டிவிட்டால் போதும், இந்த ஜென்மம் முழுவதும் அவள் தனக்கு மனைவியாக மட்டுமே வாழ்ந்து மடிவாள்.

அந்த நேரத்துக்காக மட்டுமே அவன் காத்திருக்கிறான். அவனுக்கு மற்ற நேரங்களும் சாதகமாக இருந்திருந்தால்,

என்றைக்கோ அரசியை திருமணம் செய்திருப்பான். அது முடியாமல்தானே கொந்தளிக்கிறான். அரசி சுற்றுலாவுக்கு வந்துவிட்டால், எப்படியாவது அவனது திட்டத்தை அவன் நிறைவேற்றிவிடுவான்.

அவளது வருகைக்காக காத்திருந்தான். அரசியின் வீட்டில் பொதுவாகவே சுற்றுலா செல்ல எந்த தடையும் விதிக்க மாட்டார்கள் என்பதால், சற்று நம்பிக்கையாகவே காத்திருந்தான்.

அவன் எதிர்பார்த்தது போலவே, மறுநாள் அரசியின் பெயர் லிஸ்டில் இருக்க, ஆனந்தி அவளுடன் செல்ல வேண்டி வீட்டில் அனுமதி கேட்டுக் கொண்டிருந்தாள்.

அவளும் பெற்றவர்களிடம் போராடிப் பார்த்துவிட்டாள். ஆனால், கல்பனா அவளை அனுப்பவே முடியாது என்கையில், அவரை மீறி அவளால் செல்ல முடியுமா என்ன? ஆனால் அவளுக்கு சுற்றுலா போய்தான் ஆகவேண்டும்.

அவளது கேள்விகளுக்கான விடை, தேடல்களுக்கான பதில் அந்த சுற்றுலாவில் கிடைக்கும் என அவளுக்குத் தோன்றியது. இந்த இரண்டு வாரங்களில் தர்மாவுக்கு நினைவுகள் வருவதும் போவதுமாக இருக்க, அவளால் தெளிவாக எதையும் அறிய முடியவில்லை.

சுற்றுலா செல்ல இன்னும் சரியாக ஒரு வாரமே இருக்க, பெற்றவளிடம் அனுமதி வேண்டுவதற்கே அவளுக்கு நேரம் சரியாக இருந்தது.

ஒருவழியாக அவளது தந்தையின் உதவியால் அனுமதி கிடைக்க, சுற்றுலாவுக்கும் கிளம்பிவிட்டார்கள். சுற்றுலா பேருந்தில் ஒரே ஆட்டம் பாட்டம் கொண்டாட்டமாக இருக்க, ஆனந்திக்கு ஒரு அமைதியற்ற நிலையே இருந்தது.

பேருந்தில் பயணம் சுகமாக இருந்தாலும், இத்தனை வருடங்களில் முதல்முறையாக இப்படியான இன்ப

சுற்றுலாவுக்கு செல்வதாலும் அதை வெகுவாக ரசிக்க அவளது மனம் விரும்பியது. ஆனால், அவளையும் அறியாமல் உள்ளம் படபடக்கையில் அவள் எப்படி அதை ரசிக்க?

“ஏய்… முதல் முறையா டூர் வந்திருக்க, என்ஜாய் பண்ணுவதை விட்டுட்டு மூஞ்சியை எதுக்கு இப்படி வச்சுகிட்டு இருக்க? பாரு எல்லாரும் எப்படி என்ஜாய் பண்றாங்கன்னு… நீயும் இருக்கியே… அவங்களோட சேர்ந்து டேன்ஸ் ஆடு…” ஆனந்தியின் மனநிலையை மாற்ற முயன்றாள்.

ஆனந்தியும் தன் குழப்பங்களை சற்று ஒற்றி வைத்தவள், தோழிகளோடு இணைந்து கொண்டாள். அரசியையும் தன்னுடன் இணைத்துக் கொள்ள, நள்ளிரவை கடக்கும் வரைக்குமே அவர்களது ஆட்டம் தொடர்ந்தது. ஒரு வழியாக களைத்துப்போய் உறங்கத் துவங்கினார்கள்.

மறுநாள் காலையில் அவர்கள் கண் விழிதத்தே ஊட்டியில்தான். நேராக தாங்கள் ரிசர்வ் செய்திருந்த ஹோட்டலுக்குச் சென்றவர்கள், கொஞ்சம் ஃப்ரெஷ் ஆகிவிட்டு, காலை உணவையும் முடித்துவிட்டு சுற்றிப்பார்க்க கிளம்பினார்கள்.

பெண்கள் மட்டுமே சென்ற சுற்றுலா என்பதால், ஆண் லெச்சரர்கள் யாரும் வரவில்லை. ரமணன் வராததாலோ, இல்லையென்றால் அவன் தன் கண் பார்வையில் விழாததாலோ என்னவோ ஆனந்தி அந்த நாளில் அவ்வளவு உற்சாகமாக இருந்தாள்.

இரவில் கேம்ப்ஃபையர்… அந்தாக்ஷரி, டேன்ஸ் என களைகட்ட, ரமணன் என்ற ஒருத்தனை சுத்தமாக மறந்துபோனாள் என்றே சொல்லலாம். அன்றைய இரவிலும் அவள் நிம்மதியாக உறங்க, மறுநாள் இன்னும் சந்தோஷத்தில் மிதந்தாள்.

ரமணன் அவர்களை தொடர்ந்து கொண்டிருக்கிறான் என்பதை அறிந்திருந்தால் என்ன ஆகி இருப்பாளோ?

தொட்டபெட்டா மலைத் தொடரைக் காண, அதன் உச்சியில் இருந்து அதன் அழகை ரசிக்க, தங்களை தீண்டிச் செல்லும் மேகக் கூட்டங்களின் சில்லிப்பை தேகம் உணர, வெளிவிடும் மூச்சுக்காற்றில் கூட புகை வெளியேற, ஹையோ... அதையெல்லாம் ரசிக்கவென்றே பிறப்பெடுத்தாற்போல் இருந்தது.

தொட்டபெட்டா மலை உச்சியில், மேகக் கூட்டங்களுக்கு நடுவில் நின்றவளுக்கு, அப்படியே வானத்தில் பறக்கும் உணர்வு. இமைகளை மூடி அந்த கணங்களை ரசித்தவள், அப்படியே வேறு உலகத்துக்குள் போய்விட்டாற்போல் இருந்தது.

ரோஸ் கார்டன், போட்டிங்... ஷூட்டிங் ஸ்பாட்... பார்க்... தொடர்ந்து பார்த்த இடங்களில் எல்லாம் மனதைத் தொலைத்தாள். அதே நேரம், தன் கடிகாரத்தை பார்த்துக் கொண்டன் ரமணன். அது மாலை ஆறு மணியைக் காட்டவே,

‘இன்னும் ஆறுமணி நேரங்கள் மட்டுமே...’ தனக்குள் சொல்லிக் கொண்டான். ‘இந்த முறை அரசி எனக்கு மட்டுமே உடையவள்...’ இதழ்கள் ஆணவமாக எண்ணிக் கொண்டது.

அதே நாள் காலையில் கண்விழித்த தர்மாவோ, “அம்மா... இன்னைக்கு ஏதாவது விசேஷ நாளா?” தாயிடம் கேட்க,

“இல்லையேப்பா... இன்னைக்கு அமாவாசைன்னு பார்த்த ஞாபகம் அவ்வளவுதான்” அவர் சொல்ல, தாயிடம் தொல்லை செய்து தன் அலைபேசியை வாங்கியவன், கமலக்கண்ணனை அழைத்தான்.

அவனுக்கு உடனடியாக தன் தேவியைக் காண வேண்டி இருந்தது. அவன் நினைவடுக்குகளில் படிப்படியாய் சில

நினைவுகள் ஓட, தனக்கான நேரம் மிகவும் குறைவாக இருப்பதை உணர்ந்து கொண்டான். முதல் வேலையாக கமலக்கண்ணனுக்கு அழைத்து, அரசியை மருத்துவமனைக்கு அழைத்துவரச் சொல்ல முயன்றான்.

ஆனால், அரசி கல்வி சுற்றுலா சென்றிருக்கிறாள் என்பதைக் கேட்ட மறுநொடி, சென்னையில் இருந்து கிளம்பிவிட்டான். தாய் மருந்து வாங்க வெளியே சென்றது அவனுக்கு வசதியாகப் போயிற்று. கால்டேக்சி புக் செய்தவன், முடிந்த அளவுக்கு அவரை வேகமாக போகச் சொன்னான்.

இன்றைய நாளின் முக்கியத்துவம் என்னவென்று அவனுக்குப் புரிய, இந்த நாள், தான் அவள் அருகில் இருந்தே ஆகவேண்டும் என்று முடிவெடுத்தான்.

இரவு நெருங்கவே, அன்று ஆனந்திக்கு மிகுந்த தலைவலியாக இருக்கிறது எனச் சொல்லி சீக்கிரமே படுக்கச் சென்றுவிட்டாள். நேரம் ஓடிக் கொண்டிருக்க, ஆழ்ந்த உறக்கத்தில் அவள் மூழ்க, அவள் கண்களுக்குள் விரிந்தது புது உலகம்.

“ஆனந்தவல்லி… இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறாய்? இளவரசியார் கோவிலுக்குச் செல்ல வேண்டுமாம்… உனக்காகத்தான் காத்துக் கொண்டிருக்கிறார்…” நந்தவனத்தில் பூச்செடியில் பூக்களை பறித்துக் கொண்டிருந்த ஆனந்தவல்லி பூக்கூடையோடு திரும்பினாள்.

பட்டுத்துணியில் நெய்த சீலை, இடைக்கச்சை, அணிகலன்கள் என அவளை அலங்கரித்திருக்க, ஒரு அழகான பெண்ணின் அளவுக்கு ஒத்திருந்தது அவளது தோற்றம்.

“அவர்களுக்காகத்தான் பூக்களை கொய்து கொண்டிருக்கிறேன். இதோ முடிந்துவிட்டது… போகலாம்

வா…” தன்னை அழைத்துச் செல்ல வந்தவளோடு இணைந்து கொண்டாள்.

“அப்படி என்னடி சொக்குப்பொடி போட்டாய்… இளவரசியார் உன்னை மட்டுமே உற்ற தோழியாக பார்க்கிறார்? ஒரு வேளை நீ மந்திரியாரின் மகள் என்பதால் தனிப் பாசம் கொண்டிருக்கிறாரோ?” அவள் குரலில் கொஞ்சம் பொறாமை எட்டிப் பார்த்தது.

“அடி பஞ்சவர்ணம்… நான் அவர்களோடு சேர்ந்தே விளையாடி வளர்ந்தவள், அதனால் என்னைத் தேடுகிறார். மற்றபடி மந்திரியாரின் மகள் என்றாலும், இல்லையென்றாலும் என்மேல் அவர் கொண்டிருக்கும் பாசம் மாறாது…” அவள் சொல்ல, இப்பொழுது வெளிப்படையாகவே பஞ்சவர்ணம் பொசுங்கினாள்.

“காரணம் என்னவோ ஒப்புக்கொள்ளும்படிதான் இருக்கிறது…” அவள் இழுக்க,

“அவர்கள் என்மேல் பாசம் கொண்டிருப்பதற்கு நீ ஏனடி பொறாமையில் பொங்குகிறாய்? நான் வேண்டுமானால் உன்னை தோழியாக்கிக் கொள்ளச் சொல்லி பரிந்துரை செய்யவா?” அவள் தோளில் இடித்தவள், கிண்கிணியாய் சிரித்தாள்.

“போதுமடி உன் குறும்பு… தோழியாக ஏற்க பரிந்துரையா? வேடிக்கை பேச்சுக்கு ஒரு அளவில்லை? வா போகலாம்… தாமதமானால் கோபிப்பார்கள்” இருவரும் அந்தப்புரம் நோக்கி விரைந்தார்கள்.

“பஞ்சவர்ணம்… இளவரசிக்கு வேண்டி பல்லக்கு தயாராக இருக்கிறதா? அனைத்தையும் ஆயத்தமாகச் சொல்… சரியான நேரத்துக்கு செல்ல வேண்டும்” அவளை பாதி வழியிலேயே அனுப்பினாள்.

அவள் செல்லவே, அந்தப்புரம் செல்வதற்கான முதல் கட்டு தாண்டி, அடுத்த கட்டுக்குள் நுழையும் முன்னர், அவள் கை

மணிக்கட்டை யாரோ அழுத்தி பிடித்து, அங்கே இருந்த தூணுக்குப் பின்னர் இழுத்துக் கொண்டார்கள்.

அவள் கத்த எத்தனிக்கையில், அவளது வாயும் அடைக்கப்பட, மையிட்ட கண்களோ பேரதிர்ச்சியை காட்டியது. ஒரு கையில் பூக்கூடை இருக்க, மறு கையால் தன் வாயை அடைத்திருந்த அந்த உருவத்தின் கரத்தை விலக்கியவள் சுடும் விழிகளால் அவனை நோக்கினாள்.

“அந்தப்புரத்தில் புருஷர்கள் நுழைவதே தவறு. இதில் முறை தவறி பெண்ணின் கரத்தை வலுக்கட்டாயமாக பிடித்தால், அரசாங்கத்தில் என்ன தண்டனை தெரியுமா?” சூடாக கேட்கவும் செய்தாள்.

“அந்தப்புரத்துக்குள் நுழைந்தால் தானே... நான் நுழையவே இல்லையே...” குறும்பு சொட்டும் குரலில் உரைத்தவன், அவளை விட்டு விலகி நின்றான்.

“முறை தவறி பெண்ணின் கரத்தை பிடித்தால் தானே தவறு, முறை மாமன் பிடித்தால் தவறில்லையே...” தன் உரிமையை அவளுக்கு விளக்க வேறு செய்தான்.

“முறை மாமன் என்பது இப்பொழுதுதான் தெரிந்ததா? நேற்று மாலையில் தாங்களை ஏதும் மறதி நோய் ஆட்கொண்டுவிட்டதா?” சற்று கோபமாகவே கேட்டாள்.

அவளது மையிட்ட விழிகள் நிஜமாகவே கோபத்தைக் காட்ட, “ஏது... கண்களில் இவ்வளவு சிவப்பு... கண்ணில் வைத்த மை விழிகளுக்குள் இறங்கிவிட்டதா? கவனமாக எதையும் செய்ய மாட்டாயா?” கேலிபேச்சை அவன் கைவிடுவதாக இல்லை.

“ஓஹோ... முறைப்பெண் கோபமாக இருப்பது தெரியாததுபோல் என்ன பாசாங்கு... என்னை விடுங்கள் நான் செல்கிறேன்” முறுக்கிக் கொண்டாள்.

“ஆனந்தவல்லி... இளவரசியோடு கோவிலுக்குச் செல்வதாக கேள்விப்பட்டேன். பாதுகாப்புக்கு வரலாம் என கருதினேன்... நீதான் கோபமாக செல்கிறாயே, நான் அமரனையே வரச் சொல்கிறேன்...” அவளை வழிக்கு கொண்டுவரும் வித்தை அவனுக்குத் தெரியாதா என்ன?

அவன் செல்வதுபோல் போக்குகாட்ட, அவன் கரத்தை பற்றினாள். அதைப் பார்த்தவன், “அந்தப்புரத்தில் புருஷர்கள் கரத்தை பெண்கள் இழுத்தால் என்ன தண்டனை என்று உனக்கு ஏதும் தெரியுமா?” கண்களில் குறும்பு வழிய அவன் கேட்க, பட்டென அவன் கரத்தை விட்டுவிட்டாள்.

“ஓ தெரியுமே...” அவள் சொல்ல,

“என்ன தண்டனை...?” ஆர்வமாக கேட்டான்.

“மாலையில் ஆற்றங்கரைக்கு வந்தால் சொல்கிறேன்... இப்பொழுது என்னை இளவரசியார் தேடுவார்...” வேகமாக இரண்டு எட்டு வைத்தவள், ‘இன்றைக்காவது வருவீர்களா?’ என்பதுபோல் பார்க்க, அவன் இமைகளை அழுத்தமாக மூடித் திறக்கவே ஒரே ஓட்டமாக ஓடினாள்.

அவள் இதழ்கள் தித்திப்பாய் முனகியது... ‘அமிழ்தன்...’

***

# நிழல் – 14

கோவிலுக்குச் செல்ல ஏற்கனவே தாமதமாகிவிட்டது என பஞ்சவர்ணம் தேடி வந்திருக்க, அமிழ்தனை பார்த்த அந்த நொடிமுதல், அவனை விட்டு விலகி வரும் வரைக்கும் ஆனந்தவல்லிக்கு வேறு நினைப்பே இருக்கவில்லை.

‘இளவரசியார் என்ன சொல்வார்களோ?’ என்ற பதைப்பில் அவள் இளவரசியின் அறைக்குள் நுழைய, கோவிலுக்கு தயாராகி நின்றிருந்தாள். ஆனந்தவல்லியைப் பார்த்த இளவரசியின் கண்களில் போலி கோபம் தெரிய, வேகமாக அவளை நெருங்கினாள்.

“மன்னிக்க வேண்டும் இளவரசி… பூக்களை கொய்துவர சற்று தாமதமாகிவிட்டது” பூக்கூடையை அங்கே அருகில் வைத்தாள்.

“பூக்களை கொய்து வரவா? இல்லையென்றால் மாமன் மகனின் மனதை கொய்து வரவா? பஞ்சவர்ணம்… எங்கே நீ சொல்…” தோழியை சுவாரசியமாய் நோக்கியவள், இமைகளை உயர்த்த, ஆனந்தவல்லியின் முகத்தில் சட்டென வெட்கம் கவிழ்ந்தது.

“இளவரசியாரே…” கொஞ்சமாய் சிணுங்கியவள், இளவரசியின் பட்டுச் சீலையை சரியாக வைக்கும் பாவனையில் அவள் முதுகின் பின்னால் பதுங்கிக் கொண்டாள்.

“இப்பொழுது மேலாக்கை ஏன் உருவி விடப் பார்க்கிறாய்? அதை ஏற்கனவே பஞ்சவர்ணம் சரியாக வைத்துவிட்டாள். நீ சரி செய்கிறேன் என பாசாங்கு செய்யாதே…” இளவரசியின் கேலிக்கு அங்கே இருந்த சேடிப் பெண்கள் அனைவருமே நகைத்தார்கள்.

அதே நேரம், “இளவரசி… பல்லக்கு தயாராக இருக்கிறதாம்…” ஒருத்தி வந்து உரைக்க, மற்றவர்களின்

பேச்சு தடைபட்டது.

இளவரசியும், ஆனந்தவல்லியும் மேலும் இரு பெண்களும் கிளம்பி அந்தப்புரத்தை விட்டு வெளியே வந்தார்கள். “இளவரசியாரே... மன்னரை பார்க்கச் செல்ல வேண்டுமா?” ஆனந்தவல்லி கேட்க,

“தந்தையே கோவிலுக்கு வருவதாகச் சொல்லிவிட்டார்... நாம் முன்னால் செல்லலாம்” அவர்கள் பல்லக்கை நெருங்கவே, குதிரையில் கம்பீரமாக அமர்ந்திருந்தான் அமிழ்தன்.

அவனது அகன்ற தோள்களும், திறந்திருந்த உரமேறிய நெஞ்சில் தெரிந்த காயம் ஆறிய வடுக்களும், முறுக்கேறிய அவன் கைகளும் அவன் எவ்வளவு பெரிய மாவீரன் என்பதை எடுத்துக் காட்டியது. இடையில் இருந்த உடைவாள்... அதில் இருந்த முத்திரை அனைத்தும் அவனது பதவியை உரக்கச் சொல்ல, ஆனந்தவல்லியின் கண்கள் ஓரவிழிப் பார்வையாக அவனை தழுவி மீண்டது.

“ஆனந்தவல்லி... என்னை கோவிலுக்கு அழைத்துச் செல்வதாகத்தானே ஏற்பாடு? வழிமறித்து ஆற்றங்கரைக்கு இட்டுச் சென்றுவிட மாட்டாயே” அவளிடம் கேட்க, உடன் வந்த பெண்கள் கழுக்கென சிரித்து வைத்தார்கள்.

“இளவரசியாரே... போதும் தங்கள் விளையாட்டு...” அவளது கேலிக்கு அதற்குமேல் என்ன பதிலடி கொடுக்க முடியுமாம்?

அவள் முகம் சிவக்க, தன்னவனைப் பார்க்க, அவனோ நேர்கொண்ட பார்வையாக அமர்ந்திருந்தானே தவிர, கண்ணின் கருமணிகளைக் கூட அவர்கள் பக்கம் திருப்பவில்லை. அதைப் பார்த்த இளவரசி, “ஆனந்தவல்லி, படைத்தளபதியார் கடமையில் கண்ணாக இருக்கிறார்...” உன்னை கண்டுகொள்ளவில்லையே எனச் சீண்ட,

“இளவரசியாரே... நாம் கோவிலுக்குச் செல்கிறோம்...” நினைவுபடுத்தினாள்.

“அது உனக்கு நினைவிருந்தால் சரிதான்…” பல்லக்கில் இளவரசியும், ஆனந்தவல்லியும் ஏறிக் கொண்டார்கள்.

“ஆனந்தவல்லியின் பார்வை பல்லக்கின் அருகில் இருந்த அமிழ்தனின் மீதே இருக்கவே, “நீ வேண்டுமானால் குதிரையில் வருகிறாயா?” அவள் பார்வையை கவனித்த இளவரசி கேட்க, பட்டென பல்லக்கின் திரையை இழுத்து மூடிக் கொண்டாள்.

இளவரசி அருகில் இருக்கும்பொழுதே அவனை பார்த்த தன் முட்டாள்த்தனத்தை எண்ணி நாணினாள். கூடவே, “தங்களது மணாளன் தங்களைத் தேடி வருகையில் என்ன செய்வீர்கள் என்று நானும் பார்க்கிறேன்” அவள் சொல்ல, இளவரசியின் முகத்தில் பெரும் இருள் சூழ்ந்தது.

தனது மணாளன் என அவள் குறிப்பிட்ட ராமணாதித்யனைப் பற்றி எண்ணினாலே இளவரசியின் அடிவயிறு வரைக்கும் கசந்து வழிந்தது. அவன் அண்டை நாட்டு இளவரசன் என்றாலும், அவனைப் பற்றி அவள் கேள்விப்படும் விஷயங்கள் எதுவும் அவ்வளவு ரசிக்கும்படியாக இல்லை.

குடியும், பெண்கள் சகவாசமும்… அப்பப்பா… அவன் முறை தவறி நடக்கும் செயல்கள் மட்டுமே அவள் காதுக்கு வந்தவண்ணம் இருந்தன. அவனது அரியணையை அலங்கரிக்க வேண்டி, ஒரு பதுமை அரசியாக மட்டுமே தான் இருப்போம் என்பது புரிய அவள் கண்கள் வெந்நீரை வடித்தது.

“நான் மட்டும் என்ன வரம் வாங்கிப் பிறந்தேனடி? எனக்கு மட்டும் ஏன் இப்படி ஒரு சாபக் கேடு? குடிசையில் பிறந்திருந்தால் கூட, கொண்டவனின் மனதில் ராணியாக வீற்றிருப்பேனே… இது…” கேட்டவள் கலங்கிவிட, ஆனந்தவல்லியால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

“இளவரசி… தாங்கள் கலங்குவதா? தாங்கள் அவரை மணம் முடித்தால் அவர் மாறிவிடுவார் என மகாராஜா

உரைத்தாரே...” அப்படியாவது அவளது கலக்கம் போய்விடாதா என்று இருந்தது.

“இப்படி கெட்டு சீரழியும் புருஷர்களை திருத்துவதற்காகவா பெண்ணாக நான் பிறந்தேன்? தந்தைதான் புரியாமல் பேசுகிறார் என்றால், நீயும் என் மனதை புரிந்துகொள்ள மறுக்கிறாயே...”.

“தங்கள் மனம் எனக்குப் புரியாமல் இல்லை. ஆனால்... மகாராஜாவின் முடிவை நாம் எப்படி மாற்ற முடியும்? அப்படிச் செய்தால் அது ராஜ துரோகம் ஆயிற்றே” ஆனந்தவல்லி வேகமாக இடையிட்டாள்.

“அதற்குத்தான் சொன்னேன்... நான் குடிசையிலாவது பிறந்திருக்கலாம் என்று” மனம் கலங்கி உரைத்தாள்.

அவள் அவ்வாறு சொல்லவே, குடிசை வீட்டுக்குள் இருக்கும் பிரச்சனைகளை இளவரசியான அவளுக்கு சொல்லிப் புரிய வைக்க முடியாது என்பதால், ஆனந்தவல்லி அமைதியாக இருந்தாள்.

“மனதிற்கு இனியவர் என்றால் குடிசையில் கூட வாழலாமடி. மகாராணியாக அந்தப்புரத்தை அலங்கரிக்கும் ஒரு பதுமைக்கு, மஞ்சத்தில் மட்டும் இடம் கொடுக்கும் மன்னவனை பதி என்று கொண்டாட வேண்டும்.

“அவருக்கு வீதிக்கு ஒரு மணவாட்டியும், சோலைக்கு ஒரு பெண்ணும் வைத்துக் கொண்டாலும், இளவரசி மட்டும் மாற்றானை ஏறிட்டும் பார்க்காத பத்தினிப் பெண்ணாக இருக்க வேண்டுமாம். என்னே ஒரு புருஷ நியதி...” சொல்லிக் கொண்டிருக்கையிலேயே இளவரசியின் முகத்தில் வெறுப்பு வழிந்தது.

இளவரசிக்கு அவன் சிறிதும் பொருத்தமில்லை என்றாலும், ராஜகுருவின் கட்டளை, அண்டை மன்னனின் வெறுப்பை சம்பாதித்துக் கொள்ளாமல் இருக்க வேண்டி, அவனிடம்

சமரசம் செய்துகொள்ள வேண்டி, போரில் அவனது உதவி தேவை என்பதற்காக ஒரு உடன்படிக்கை திருமணம்.

அதைக் கேட்டாலே கோபம் கொப்பளித்தது. மன்னனுக்கு தன் மகளது வாழ்க்கையின்மேல் கொஞ்சம் அக்கறை இருக்கவே அவர் சற்று தயங்கினார். ஆனால் ராஜகுரு... மன்னனின் தயக்கம் உணர்ந்தும், அதை கிஞ்சித்தும் கண்டுகொள்ளாமல், மன்னனுக்குப் பதிலாக வாக்கு கொடுத்துவிட்டு வந்துவிட்டார்.

அவர்களது சாம்ராஜ்யத்தில், ராஜகுருவின் ஆலோசனை இன்றியோ, உத்தரவின்றியோ எதுவும் நடக்காது. அப்படி இருக்கையில், ராஜகுருவே வாக்கு கொடுத்துவிட்டார் என்றால், அதை யாரால் மீற முடியும்? மகாராஜாவே அமைதியாக இருக்கையில், இளவரசியால் மட்டும் என்ன செய்துவிட முடியும்?

தோழியின் விதியை நினைத்து, அவளது எதிர்கால வாழ்க்கையை நினைத்து மனம் கலங்கிப் போனாள் ஆனந்தவல்லி. அவள் சாதாரண சேடிப் பெண்ணாக இருந்திருந்தால், இளவரசி திருமணம் முடித்து செல்கையில் அவளோடு தானும் சென்றிருப்பாள். ஆனால், அவளோ மந்திரியாரின் மகள், அப்படி இருக்கையில் அவளால் செல்ல முடியாதே.

இளவரசியின் கண்களில் கண்ணீரைக் கண்ட ஆனந்தி, “கலங்காதீர்கள் இளவரசியாரே. இறைவன் நமக்கு துணை இருப்பார். இந்த இக்கட்டில் இருந்து உங்களைக் காக்க எனக்கு ஒரு சந்தர்பம் கிடைத்தால், என் உயிரையும் நான் கொடுக்கத் தயங்க மாட்டேன். இது சத்தியம்...” உணர்ச்சிப் பெருக்கில் அவள் கரத்தில் அடித்தாள்.

ராஜ வம்சத்தவர்கள் எப்பொழுதும் வெறும் வாக்கு உரைப்பது இல்லை. ஒரு சத்தியத்தை காப்பாற்ற வேண்டி, தன் மகனையே பதினான்கு வருடங்கள் காட்டுக்கு அனுப்ப கூட தயங்காத வம்சாவழியினர் ஆயிற்றே.

“அது எனக்குத் தெரியாதா…? சரி விடு, அனைத்தும் என் விதிப்படிதான் நடக்கும். வா உள்ளே போகலாம்…” பல்லக்கு கீழே இறக்கப்படவே இருவரும் வெளியே வந்தார்கள்.

அவர்கள் கோவிலுக்குள் அடியெடுத்து வைக்க, உள்ளே மகாராஜாவும், ராணியாரும், ராஜகுருவும் இருக்கக் கண்டார்கள்.

“ராஜகுருவும் இங்கே வருவதாக சேதி வந்ததா ஆனந்தவல்லி…?” கேட்ட இளவரசி தன் வளையில் மாட்டிய பட்டு மேலாக்கை விடுவிக்க முயன்றவாறே அவளிடம் கேட்டாள்.

“இல்லையே இளவரசியாரே… தந்தை மட்டும்தான் வருவதாக சேதி. இப்பொழுது ராஜகுருவும் இங்கே இருக்கிறார் என்றால்…” இழுத்தவள் பார்வையை சற்று எட்ட செலுத்தவே, அங்கே பரிவாரங்களுக்கு மத்தியில் ரமணன் நிற்பதைக் கண்டாள்.

“இளவரசியாரே… தங்களின்…” இழுத்தவள், அந்த வாக்கியத்தை முடிக்காமல் நிறுத்தினாள். இளவரசியின் கண்களில் சிறு கவனம் ஏற, ரமணனை பார்ப்பதை தவிர்த்தாள்.

ஆனால் ரமணனோ… அவளைப் பார்த்தவுடன் கண்களில் பெரும் மயக்கத்தை வெளிப்படுத்தியவன், நாவால் இதழ்களை ஈரமாக்கிக் கொண்டான்.

‘இந்த அழகி எனக்கே எனக்கா…?’ கரங்கள் தன் மீசையை அழுத்தமாக வருடிக் கொண்டது. அதைப் பார்த்த ஆனந்தவல்லி,

“இளவரசியாரே… ராஜகுரு ஏதோ சேதியோடுதான் காத்திருக்கிறார் போலும். உச்சி பூஜையில் கலந்துகொள்ளும் சாக்கில், வேறு ராஜ விஷயங்களும் பரிமாறப்படலாம்… வாருங்கள் அவரை வணங்குவோம்” உரைத்தவள் இளவரசியை பின்தொடர்ந்தாள்.

ராஜகுரு... சாணக்கியரின் உருவத்தில், காவி உடையில் கழுத்தில் ருத்ராட்ச மாலையோடு கண்களில் வழியும் தீச்சண்யத்தோடு காட்சியளித்தார். ‘எதையும் நான் செய்து முடிப்பேன்...’ கண்களில் சிறு கர்வம் கூட வழிந்தது.

ராஜகுருவை பெண்கள் வணங்கவே, அவளை நெருங்கிய மகாராஜா, “ஊர்மிளா... நீ வருவதற்காகத்தான் காத்திருந்தோம். வா மகளே உள்ளே செல்லலாம். குருவே... அனைத்து ஏற்பாடுகளும் தயாராக இருக்கிறதுதானே” முன்னால் நடந்தார்.

தந்தையின் கரத்தை பற்றிக் கொண்டவள், அவரை கெஞ்சும் பாவனையில் பார்க்க, அவளது பார்வைக்கான அர்த்தம் புரியவே, அவள் கரத்தை மெதுவாக தட்டினார்.

“நம் நாட்டைக் காக்க சில தியாகங்கள் தேவைப்படுகின்றன மகளே...” இதை அவளிடம் சொல்கையில் அவர் குரலில் அவ்வளவு துயரம் மண்டிக் கிடந்தது.

‘தியாகத்தை எதிர்பார்க்கும் தந்தை, தன்னிடம் வீரத்தை எதிர்பார்த்தால் பரவாயில்லை என்று இருந்தது. ஆனால், அவரிடம் எதையும் பேசாமல் அமைதியானாள்.

உச்சிகால பூஜைகள் உடனே துவங்க, கைகூப்பி தொழுது இறைவனை மன்றாடினாள். ‘இறைவா... என் வாழ்க்கையை உன் காலடியில் கொடுக்கின்றேன். என்னை நீயே பார்த்துக்கொள்...’ மனமுருக வேண்டினாள்.

“மாமா... தேவதை என்ன வெளியில் உலாவுகிறது?” இளவரசியின் அழகை ரமணன் புகழ, அவளது பெற்றவர்கள் அதை சற்று ரசித்தார்கள் என்றால், அவளுக்கு எரிச்சலாக வந்தது.

“மருமகனே... இன்றைக்கு என்ன சோமபானம் சற்று தூக்கலோ?” அவனால் மாமா என அழைக்கப்பட்ட மனிதர் அவன் காதைக் கடித்தான்.

“கோவிலுக்கு வருகையில் சுத்தம் ரொம்ப முக்கியம் மாமா...” கோவிலில் வைத்து, அத்தனைபேர் முன்னிலையில் அவனது பேச்சு அவளை கோபம் கொள்ளச் செய்ய, விழி மலர்த்தி அவனை சுட்டாள்.

அதைப் பார்த்தவன், “ஏன் மாமா... பெண்களுக்கு கணவன் தானே கண்கண்ட தெய்வம்?” திடுமென கேட்ட குரலில், பட்டென விழி திறந்து தன் எதிரில் நின்றவனை நேருக்கு நேராகவே பார்த்தாள்.

அங்கே... முந்தின தினம் அருந்திய சோமபானத்தின் போதை ஏறிய விழிகளோடு, கண்கள் சிவக்க, மயக்கம் கொப்பளிக்க அவளையே வெறிக்க பார்த்துக் கொண்டிருந்தான் ரமணன்.

அவனை அப்படிப் பார்க்கவே பிடிக்காமல் இளவரசி முகத்தை திருப்பிக் கொள்ள, “மருமகனே... கேள்வியை ஏன் சந்தேகமாகக் கேட்கின்றாய்? அழுத்திக் கேள்... அதுதான் உண்மையும் கூட. பெண்களுக்கு கணவனே கண் கண்ட தெய்வம்...” ஒரு நக்கல் குரல் பின்பாட்டு இசைக்க, ஒரு கோணல் சிரிப்போடு அவளைப் பார்த்தான்.

“ரமணா... பூஜை வேளையில்தான் உன் சந்தேகங்களை தீர்த்துக் கொள்ள வேண்டுமா? முதலில் இறைவனை வணங்கு. மற்றவை அதன் போக்கில் சரியாகவே நடக்கும்...” ராஜகுருவின் குரல் இடையிட, பட்டென அங்கே ஒருவித அமைதி சூழ்ந்தது.

அனைவரின் கவனமும் கர்ப்பகிரகத்தில் இருக்கும் தெய்வத்திடம் நிலைக்க, ரமணனின் பார்வை மட்டும் இளவரசியிடமே நிலைத்திருந்தது. அதை உணர்ந்தவளுக்கு கடவுளிடம் கூட மனம் நிலைக்கவில்லை.

‘இறைவா... இதுவா உன் திட்டம்? அன்றாடம் நான் உன்னை வழிபடுவதற்கு நீ செய்யும் பிரதிபலன் இதுவா?’ மனதுக்குள் அவள் குமுற, இறைவன் அமைதியாக அவளைப் பார்த்திருந்தான்.

***

# நிழல் – 15

இளவரசியின் வேண்டுதல் இறைவனுக்கு கேட்டதோ என்னவோ, கோயிலின் பக்கவாட்டு வாயில் வழியாக கோயிலுக்குள் வந்து கொண்டிருந்தான் அவன். கோயிலின் உச்சிகால பூஜை உச்சத்தில் இருக்க, பரிவாரங்களையும், அங்கே இருந்த பாதுகாப்பு கெடுபிடிகளையும் பார்த்தவாறே வந்தான்.

அவனுடன், அவனது மெய்க்காப்பாளன், தோழன் மிதுனனும் உடன் இருந்தான்.

“மிதுனா… போட்டிகளுக்கான நாள் நெருங்கிவிட்டதா என்ன? இன்னும் நாட்கள் இருப்பதாக கேள்விப்பட்டேனே? இங்கே என்னவென்றால்…” பேசியவனின் பார்வை கோயிலுக்குள் பாய்ந்து, அங்கிருந்தவர்களை அலசியது.

“தர்மா… இது போட்டிகளுக்கான ஆயத்தம் இல்லை… இளவரசிக்கான சிறப்பு பூஜை என்று கருதுகிறேன். ராஜகுடும்பத்தவர்கள் அனைவரும் ஒருங்கே இணைந்து இருக்கிறார்களே…” தர்மனுடன் இருந்த மிதுனன் உரைக்க, அப்பொழுதுதான் கூட்டத்தில் இருந்த மனிதர்களையும் கவனித்தான்.

“இந்த மகாராஜாவுக்கு புத்தி எதுவும் பிசகிற்றா என்ன? ரமணனைப் பற்றி தெரிந்த யாருமே இதைச் செய்ய முன்வர மாட்டார்களே…” தன் அருகே நெருங்கி வந்தவனிடம் சின்னக் குரலில் உரைத்தான்.

“இளவரசே கவனம்… அவர்கள் ராஜாங்கத்துக்குள் நிற்கிறோம். சுவருக்கும் செவிகள் இருக்கலாம்…” எச்சரித்தான்.

“உன்னை நீயே சுவர் என்று சொல்லிக் கொள்கிறாயா? நானாக எதையும் சொல்லவில்லை…” தர்மன் தன்

நகைச்சுவையை எடுத்துவிட, மிதுனன் அதை கொஞ்சம் கூட ரசிக்கவில்லை.

அதை கணக்கிலேயே கொள்ளாமல், “இளவரசி அழகுதான் இல்லையா?” அவனிடம் கேட்க, மிதுனன் வேகமாக தன் பார்வையைச் சுழற்றினான்.

“தர்மா... நீ விளையாட்டுப் பிள்ளைபோல் நடந்து கொள்ளாதே. இந்த கோவிலை எதற்காக நாடி வந்தோமோ, அந்த வேலையை மட்டும் பார்க்கலாம். வீண் விவாதங்கள் எதுவும் வேண்டாம்...” அண்டைநாட்டு இளவரசனான தர்மனும், அவனது மெய்காப்பாளன், நண்பன் மிதுனனும் அப்பொழுது மாறு வேடத்தில் இருந்தார்கள்.

அந்த நேரம் அவர்களைப் பார்க்கும் யாருமே... கோயிலுக்கு வழிபாடு செலுத்த வந்த பக்தர்களாகவே கண்ணுக்குத் தெரிவார்கள். அவர்களது இடையில் எப்பொழுதும் இருக்கும் உடைவாளுக்கு ஓய்வு அளிக்கப்பட்டு, அவர்கள் வைத்திருந்த பைக்குள் மெல்லிய உடைவாள் இடம் பிடித்திருந்தது.

பார்க்க சிறுவர்கள்போல் காட்சியளித்தாலும், சட்டென பத்துபேர் அவர்களைச் சூழ்ந்து கொண்டாலும், நொடியில் அவர்களை சம்மாளிக்கும் திறன் அவர்கள் இருவருக்குமே இருந்தது.

“பூஜைகள் முடியும் முன்னர் நம்மை உள்ளே அனுமதிக்க மாட்டார்களே, இப்பொழுது என்ன செய்யலாம்?” தர்மனிடம் கேட்டான்.

“வரும் வழியிலேயே ஊருக்குள் சற்று சுற்றி வரலாம் எனச் சொன்னேன்... நீ தான் வேண்டுதலை நிறைவேற்றிவிட்டு செல்லலாம் எனச் சொன்னாய். இப்பொழுது என்ன செய்யலாம் என என்னைக் கேட்டால்? நான் என்ன செய்வது?”.

“வேண்டுமானால் கோட்டைக்குள் செல்லலாம் என யோசனை சொல்வேன். ஆனால் அதையும் நீ ரசிக்க மாட்டாய்…” தங்களது நடையை ஒரே சீராக வைத்தவாறு அந்த கோயிலை கொஞ்சமாக சுற்றி வந்தார்கள்.

எந்த பக்கம் போனாலும், நான்குவழியின் வழியாகவும் கற்பகிரகத்துக்குள் நிற்கும் அவர்களை தர்மனால் நன்றாகவே பார்க்க முடிந்தது. தன்னை மீறி, கை கூப்பி, இமை மூடி, சில பல நிமிடங்களாக தனக்குள் மூழ்கி நின்றிருந்த ஊர்மிளாவின் மீதே அவனது கவனம் இருந்தது.

மற்றவர் பார்வைக்கு அவன் சாதாரணமாக பார்ப்பதுபோல் இருந்தாலும், உடன் வந்த மிதுனனுக்கு அது சாதாரணப் பார்வையாகத் தெரியவில்லை. எவ்வளவு சீக்கிரம் முடியுமோ, அவ்வளவு சீக்கிரம் அந்த நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என நினைத்தான்.

“தர்மா… நீ செய்வது தர்மம் இல்லை… அவள் மற்றவனுக்கு மணம் செய்ய நிச்சயிக்கப்பட்டவள்” அவனுக்கு எடுத்துரைக்க முயன்றான்.

“மகாராஜா ஒப்புதல் அளித்ததாக சேதி இன்னும் வரவில்லையே…” சொன்னவன் தன் பார்வையை விலக்கிக் கொள்ளவில்லை.

“ராஜகுருவை மீறிய உறுதி ஒன்று வேண்டும் என நினைக்கின்றாயா?” அவனிடம் நேரடியாகவே கேட்டான்.

“சுய புத்தியுள்ள ஒரு பெண் அவனை திருமணம் செய்ய சம்மதிக்க மாட்டாள். இந்த ராஜாங்க சிக்கல்களுக்குள், சூழல்களுக்குள் ஒரு பெண்ணின் வாழ்வை பணையம் வைப்பது முறையா? ஒரு பெண் பித்தனுக்கு போய்…”.

“தர்மா… போதும் உன் பிதற்றலை நிறுத்து. நீ பேசுவதைப் பார்த்தால், வேண்டுதலை மட்டும் நிறைவேற்ற

வந்ததைப்போல தெரியவில்லை” மிதுனன் அவனையே கூர்மையாகப் பார்த்தான்.

“ஒரு மண்டலம் பயணம் செய்து வந்தது வேண்டுதலை மட்டும் நிறைவேற்றவென்றா நினைத்தாய்? போட்டிகளிலும் கலந்துகொண்டு, வெற்றிக்கனியை பறித்துவிட்டே செல்லலாமே... நாம் அவசரமாகச் சென்று முடிக்க வேண்டிய அரசியல் பணி எதுவும் இருக்கிறதா என்ன?” அவன் நிதானமாக கேட்கவே, மிதுனன் அசந்தே போனான்.

வேண்டுதலை நிறைவேற்றச்சொல்லி கடந்த ஒரு வருட காலமாகச் சொல்லியும் வராத தர்மன், திடுமென அவனாகவே தாயிடம் சொல்லிவிட்டு கிளம்ப முயன்றபொழுது அவனது தாய் அடைந்த மகிழ்வுக்கு அளவே கிடையாது.

ஆனால், தர்மனின் தந்தைக்கு சிறு தயக்கமும், சந்தேகமும் எழவே மிதுனனையும் அவனுடன் சேர்ந்து செல்ல பணித்தார். சொல்லப்போனால் ஊர்மிளாவின் சித்திரம் முதலில் காட்டப்பட்டது தர்மனிடம்தான்.

அவன், அவளை சித்திரமாகக் கண்டே அவள்மேல் காதல் கொண்டான். தன் விருப்பத்தை தந்தையிடம் தெரிவிக்கவும் செய்தான். ஆனால், திடுமென தங்களது எதிரி நாட்டு ரமணனுடன் அவளுக்கு திருமணம் நடக்கப் போவதாக சேதி வரவே, அதை மகனிடமும் தெரிவித்துவிட்டார்.

பெரியவர்களுக்கு அரசாங்க சூழல்கள் எப்பொழுது வேண்டுமானாலும், எப்படி வேண்டுமானாலும் மாறும் என்பது புரிந்ததால், அந்த சேதியை சாதாரணமாகவே கடந்துவிட்டார்கள். ஆனால், பார்த்த நொடிமுதல் அவளது சித்திரத்தோடு வாசம் செய்யும் அவனுக்கு அதை ஏற்க முடியவில்லை.

அவனது மனதுக்குள் இருக்கும் விஷயம் யாருக்கும் தெரியாமல் போனாலும், ஒரு நாட்டையே கட்டி ஆளும் மகாராஜாவுக்கு தெரியாமல் போகுமா? எனவேதான் மிதுனனையும் அவனுடன் அனுப்பினார். ஊர்மிளாவின் நாட்டு எல்லைக்குள் கால் வைக்கும் வரைக்குமே தர்மன் எதைப்பற்றியும் வாயே திறக்கவில்லை.

ஆனால் இப்பொழுது இப்படி அதிரடியாக பேச மிதுனன் சற்று பயந்து போனான் என்றே சொல்லலாம். இப்பொழுது ஊர்மிளாவை கவர்ந்து சென்று அவன் திருமணம் செய்துகொண்டால் கூட அவன் அஞ்ச மாட்டான்.

ஆனால், அவன் அஞ்சுவது எல்லாம், ஊர்மிளாவின் நாட்டவரோடு, ரமணனின் படைபலமும் சேர்ந்தால், அழிவுகள் எந்தப்பக்கம் என்று அவனால் கணிக்க முடியவில்லை.

அரசரையும், அரசியையும் கூடவே ஊர்மிளாவையும் பார்த்தவனின் கண்களில் மெல்லிய கதிர்வீச்சு. இளவரசியின் எழிலும், அழகும் ஆண்மகனான அவனை சற்று அசைத்துப் பார்த்தது என்றே சொல்லலாம். இளவரசர்களும், இளவரசிகளும் இருக்கும் சாம்ராஜ்யத்தில், அவர்களைப் பற்றிய செய்திகள் மற்றவர் காதுக்கு செல்வது இயல்புதானே.

அவளை சில நொடிகள் பார்த்தவன், அவளுக்கு எதிரில் ரமணன் நிற்பதையும் பார்க்க, சட்டென இவன் கண்களில் ஒரு சிறு கோபமும், அனுதாபமும் ஒருங்கே எழுந்தது.

அதே நேரம்... கோயிலுக்குள் நுழைந்த அமிழ்தன், அங்கே இருந்த மக்களை அலச, சற்று தூரத்தில் இளவரசியை பார்த்தவாறு இருந்த தர்மனைப் பார்த்தவனின் கண்கள் ஒரு நொடி நம்ப முடியாமல் திகைத்து, பின்னர் புருவம் நெரித்தான்.

அமிழ்தனைக் கவனித்துவிட்ட தர்மனும், மிதுனனிடம், “மிதுனா... படைத்தளபதியின் கண்கள் நம்மை

வட்டமிடுகின்றன. போய் அறிமுகம் செய்து கொள்ளலாமா?” ஏற்கனவே கலக்கத்திலும், குழப்பத்திலும் இருந்த மிதுனன் சற்று திகைப்பாகவே தர்மனை நோக்கினான்.

இப்பொழுது இருக்கும் அரசியல் சூழல்களில், அண்டைநாட்டு இளவரசர் மாறுவேடத்தில் அவர்கள் நாட்டுக்கு வந்திருப்பது, இறைவனை வணங்க மட்டுமே எனச் சொன்னால், வாயில் விரல் வைத்திருக்கும் பச்சைப் பிள்ளை கூட நம்பாது.

அப்படி இருக்கையில் படைத்தளபதியின் சந்தேகக் கண்களில் விழாமல் ஒதுங்கி இருப்பதே சாலச் சிறந்தது. அதை விடுத்து, அவனிடம் தானாகச் சென்று அறிமுகம் செய்துகொள்வோமா? எனக் கேட்பது புத்தியுள்ள எவனும் செய்யும் செயலா என்ன?

“இளவரசே...” கண்டனக்குரல் எழுப்பியவன், அடுத்த நொடி கூட்டத்துக்குள் கலந்து, தர்மனையும் இழுத்துச் சென்று மறைந்தான். அவனிடமிருந்து தன் கரத்தை விலக்கிக்கொள்ள முடியும் என்றாலும் அதை தர்மன் செய்யவில்லை.

கூட்டத்துக்குள் கலந்துவிட்ட அவர்களை, வேகமாக தேடினான் அமிழ்தன். தான் தேடியவர்கள் இல்லாமல் போகவே, தன் கண்கள் சொன்ன சேதி தவறோ? தன்னையே கேட்டுக் கொண்டான். அதே நேரம், பூஜை முடியும் மணி ஓசை ஒலிக்கவே, தான் அங்கே பாதுகாப்புக்கு செல்லவேண்டும் என்பதால் அங்கிருந்து அகன்றான்.

சற்று சோர்ந்த மனநிலையில் ஊர்மிளா தேவி அரண்மனைக்குத் திரும்பவே, ஏதும் செய்ய இயலாத மனநிலையில் அவளுடன் சென்றாள் ஆனந்தவல்லி. தன் மனம் கவர்ந்தவன், தன்னுடனே இருந்த அந்த இதம் எங்கோ தொலைந்து போயிருந்தது.

அவர்கள் பாதுகாப்புக்கு உடன் வந்தவன், பல்லக்கில் இருந்து இறங்கிய ஆனந்தவல்லி, தன்னிடம் ஒற்றை தலையசைப்போடு விடைபெற்றுச் சென்றது பெரும் குறையாகவே இருந்தது.

அவனுக்குமே இளவரசியை ரமணனுக்கு திருமணம் செய்து கொடுப்பதில் சிறிதும் விருப்பம் இருக்கவில்லை. அதைப்பற்றி, அந்த அரசாங்கத்தின் மந்திரி, ஆனந்தவல்லியின் தந்தையிடம் அவன் கேட்டான். ஆனால், அரசாங்க சூழலுக்கு தக்க முடிவை மட்டுமே எடுக்கும் சூழலில் நாம் இருக்கிறோம் என உனக்குத் தெரியாதா?’ என அவனிடம் திருப்பிக் கேட்டிருக்க, அதற்குமேல் அதைப்பற்றி அவன் பேசவில்லை.

சாதாரண ப்ரஜை முதல், அரசாங்க அலுவலர்கள் துவங்கி, மகாராஜா வரைக்கும் அந்த திருமணத்தில் விருப்பம் இல்லைதான். ஆனால், தன் நாட்டு மக்களின் நலனுக்காக, அவர்கள் பாதுகாப்புக்காக, ரமணனின் பேருதவி அவர்களுக்குத் தேவையாக இருக்கையில் அவர்களால் என்ன செய்ய முடியும்?

அன்று மாலையில் ஆற்றங்கரைக்கு வந்து அவன் காத்திருக்கவே, சற்று தாமதமாகவே வந்தாள் ஆனந்தவல்லி. அவள் முகத்தில் இருந்த கவலையும், சோர்வும் அவனையும் தாக்க, ஆற்றங்கரையோரம் அமர்ந்து அவளையும் உடன் அமர்த்திக் கொண்டான்.

“ஏன் வல்லி இவ்வளவு சோகம்...?” அவள் முகம் நோக்க,

“இளவரசியின் துயர் உங்களுக்குத் தெரியாததா? அவர்களுக்கு ஏதும் நல்லது நடந்தால் பரவாயில்லை. அந்த ரமணனைப் பார்த்தாலே அவர்களின் வதனம் களை இழந்து போய்விடுகிறது. ஆகாரம் கூட எடுத்துக் கொள்ளாமல் சோர்ந்து போய் கிடக்கிறார்...” தன் கவலையை அவனிடம் பகிந்து கொண்டாள்.

“பட்டினி கிடந்தால் இந்த சூழல் மாறிவிடும் என்று யார் அவருக்கு உரைத்ததாம்?” அவளிடம் கேட்க, அவனுக்கு பதில் சொல்லவில்லை.

“தங்களால் எதுவும் செய்ய இயலாதா?” தோழியின் துயர் காண சகிக்காமல் அவனிடம் கேட்டாள்.

“மகாராஜாவாலேயே எதுவும் செய்ய இயலாத சூழலில் என்னிடம் இப்படி ஒரு வினாவைத் தொடுத்தால் நான் என்ன பதில் உரைக்கட்டும்?” அவளிடமே திருப்பிக் கேட்டான்.

“இளவரசியாரை இதில் இருந்து விடுவிக்கும் மார்கம் ஒன்று கிடைத்தால் போதும், அதை செயலாற்ற என் உயிரையும் கொடுப்பேன்” உணர்ச்சிப் பெருக்கில் அவள் பேச,

“ஆனந்தவல்லி... இது தவறு... இறைவனுக்கு நிகரான அரசை எதிர்ப்பதா? வேண்டாம்... நீ அவ்வாறு செய்தால், உன்னை நானே எதிர்க்க வேண்டி இருக்கும்” ராஜ விசுவாசம் அவனை இவ்வாறு பேசத் தூண்டியது.

“அதை விடு... திருமணத்தை முடித்துவிடலாம் என்ற உன் தந்தையின் கேள்விக்கு, நீ பதில் சொல்ல மறுத்துவிட்டாயாமே... ஏன்... இந்த படைத்தளபதியை திருமணம் செய்ய விருப்பம் இல்லையா?” அவள் மனம் புரிந்தும், அவளைச் சீண்டவே கேட்டான்.

அவன் கண்களை பரிதவிப்பாய் எறிட்டவள், “என் மனம் தங்களுக்குத் தெரியாததா? இளவரசியின் திருமணம் முடிந்தவுடன் நம்...” சொல்லத் துவங்கியவள், நாணத்தால் அடுத்த வார்த்தைகளை சொல்ல முடியாமல் நிறுத்திவிட்டாள்.

அவள் முகத்தை பார்த்தவாறே... அவள் இடக்கரத்தை மென்மையாக பற்றியவன், பார்வையை நாலாப்பக்கமும் சுழற்றினான்.

“ஏது... ஏற்பாடெல்லாம் பலமாக இருக்கிறது?” பார்வையை சுழற்றியவன் அங்கே யாரும் இல்லாத காரணத்தால், அவளை நெருங்கி அமரவே சிறிது கண்டிக்கும் குரலில் கேட்டாள். ஆனாலும் அதில் பலம் சற்று குறைவாகவே இருந்தது.

அவனோ, “சத்ரியர்களுக்கு காந்தர்வ திருமணம் நியாயம்தான்வல்லி...” அவனது முறுக்கிய மீசை அவளது பட்டுக் கன்னத்தில் மெதுவாக ஊர்ந்தது.

கடந்த இரண்டு வருடங்களாக தனக்காக மட்டுமே காத்திருப்பவன், திருமண உறுதி எல்லாம் கொடுத்தாகிவிட்டது. நாடறிய அவள் கழுத்தில் மங்கல நாண் பூட்ட வேண்டியது மட்டுமே பாக்கி. அப்படி இருக்கையில், அவனது கோரிக்கையை அவளால் சட்டென மறுத்துவிட முடியவில்லை.

அவன் வெற்று நெஞ்சில் மென்மையாக சாய்ந்து கொண்டவள், “தங்களுக்கு மறுப்பதால் என்மேல் கோபம் கொள்ள வேண்டாம்... இன்னும் ஒரு மண்டலம் தானே... பிறகு நான் உங்களது உடைமை” தன் கரத்தை அவன் நெஞ்சில் பதித்தாள்.

அவளது பேச்சைக் கேட்டு அவன் கோபம் எல்லாம் கொள்ளவில்லை. மாறாக, “வல்லி... நாளைமுதல் போட்டிகளுக்கான ஆயத்த வேலைகள் அனைத்தையும் மேற்ப்பார்வை பார்க்கும் கடமை எனக்கு இருக்கிறது. வீணாக ஆற்றங்கரைக்கு வந்து எனக்காக காத்திருக்காதே. நேரத்தோடு வீட்டுக்குச் செல்...” அவளிடம் சொல்ல, இமை மூடி அமர்ந்து கொண்டாள்.

அவள் மனம் புரிந்தவன், தானும் அவளை அணைத்துக் கொண்டான். மறு நாள்முதல், அவன் தன் கடமையில் மூழ்க, ஒரு வாரத்தில் போட்டி நடக்கும் களங்கள் அனைத்தும் தயாரானது. அரண்மனையே விழாக்கோலம் பூண்டிருக்க, ஊர்மிளாவின் மனதில் மட்டும் இருள் படர்ந்திருந்தது.

அன்று போட்டிகள் துவங்கும் நாள்... ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விதமான போட்டிகள். அண்டை நாட்டு இளவரசர்கள், வீரர்கள் என அனைவருக்கும் அழைப்பு விடுக்கப் பட்டிருக்க, வாள் சண்டை, ஈட்டி எறிதல், குதிரையேற்றம், மல்யுத்தம் என ரகம் வாரியாக போட்டிகள் நடத்தப்பட்டன.

ஒவ்வொரு போட்டியிலும் வெற்றிபெறும் வீரர்களுக்கு பரிசுகளும், பொற்கிளிகளும் வழங்கப்பட்டன. தர்மன் போட்டிகளுக்காகவே அந்த நாட்டில் ஒரு வாரம் தங்குவதாகச் சொன்னவன், எந்த போட்டியிலும் கலந்துகொள்ளவே இல்லை.

அதைப் பார்த்த மிதுனன், “தர்மா... போட்டியில் கலந்துகொண்டே தீர்வது எனச் சாதித்துவிட்டு, இப்பொழுது ஒதுங்கியிருந்தால் அதற்கு என்ன அர்த்தம்?” புரியாமல் கேட்டான்.

“பொற்கிளி வேண்டுமென்றால் அதையெல்லாம் அடைவது எனக்கு வெகு சுலபம்... எனக்கு வேண்டியது உயிருள்ள கிளி... நாளை போட்டியில் பாரும்...” சொன்னவனது கண்களில் ஒளிர்ந்த அந்த பிரகாசத்துக்கான காரணம் அவனுக்கு அப்பொழுது புரியவே இல்லை.

ஆனால், மறுநாள்...

சறுக்குமரம் ஏறும் போட்டி... அதில் வெற்றிபெறும் மாவீரனுக்கு இளவரசியின் கரத்தால் சன்மானம் வழங்கப்படும் என அறிவிக்கப்படவே, தர்மன் ஏன் இத்தனைநாள் காத்திருந்தான் என்பது அவனுக்கு புரிந்து போனது.

‘என்ன நடக்குமோ?’ என ஒரு பக்கம் பதைப்பாக இருந்தாலும், ‘என்ன நடக்கும் பார்க்கலாம்...’ என்ற ஆர்வமும் ஒருபக்கம் இல்லாமல் இல்லை. நண்பனின் காதலுக்கு உறுதுணையாக இருப்பது நல்ல நட்புக்கு அழகாயிற்றே.

அனைத்து நாட்டு வீரர்களும், இளவரசர்களும் முயன்றும் ஒருவராலும் அதில் ஏறி, வெற்றிக் கனியை தொடக்கூட முடியவில்லை. இத்தனை நாட்கள் போட்டிகளைக் காண வந்தாலும், சிறிதும் ஆர்வமின்றி இருந்த ஊர்மிளா தேவி, இறுதியாக சறுக்குமரம் ஏற வந்த வீரன், சில நொடிகள் தன்னை நேருக்கு நேர் பார்த்திருக்க, சற்று திடுக்கிட்டாள்.

பல்லாயிரக்கணக்கானவர்கள் கூடியிருக்கும் அந்த அரங்கில், கொஞ்சம் கூட பயமின்றி, தயக்கமின்றி அந்த நாட்டு இளவரசையையே நேருக்கு நேர் பார்க்கவேண்டுமென்றால், அவனுக்கு எவ்வளவு தைரியம் இருக்க வேண்டும்?

அதே நேரம் ஆனந்தவல்லி... “இளவரசி, இவர் பக்கத்து கொற்கை நாட்டு இளவரசராம்” அவள் காதைக் கடிக்கவே, தானுமே சற்று பரபரப்பானாள். சில மாதங்களுக்கு முன்னர், தனி ஒருவனாக படைகளை நடத்திச் சென்று, போரில் வெற்றி வாகை சூடி வந்தான் என அவனைப் பற்றி பெருமையாக பேசிக் கொண்டிருந்தது அவளுக்கும் தெரியுமே.

அந்த சறுக்குமரம் ஏறுவது ஒன்றும் அவ்வளவு சுலபம் இல்லை என்பது அவளுக்குத் தெரியும். ஒரு வாரம் எண்ணையில் ஊற வைத்த மரத்தடி, முழுவதும் மீண்டுமாக எண்ணையில் குளிக்க வைக்கப் பட்டிருக்க, அதை அழுத்தமாக பிடிக்கக் கூட முடியாது.

அப்படி இருக்கையில், அதில் ஏறி, உச்சியைத் தொடுவது என்றால், அதற்கு அசாத்தியமான உடல் வலிமையும், மனோ பலமும் வேண்டும். அருகே இருந்த வெள்ளைப் பொடியை தன் கரத்தில் சிறிது தடவிக் கொண்டவன், அந்த சறுக்குமரத்தின் அருகே சென்றான்.

அதை முழுதாக கரம், கால் கொண்டு இறுக்க, வழுக்கிக் கொண்டு சென்றான். ஒரு காலை முன்பும், பின்புமாக

கிடுக்கிப்பிடி போட்டு, ஒவ்வொரு இன்ச்சாக நகர, அந்த இடமே ஆரவாரித்தது.

“தர்மன்... தர்மன்...” அவன் பாதி ஏறியிருக்கையில் அவனது பெயர் அந்த அரங்கம் முழுவதும் ஒலிக்கவே, பார்த்துக் கொண்டிருந்த ஊர்மிளா தேவிக்கு இதயம் படபடத்தது.

அவன் உச்சியை நெருங்கிவிட்ட அந்த நொடி, மீண்டும் பாதி தூரம் இறங்கிவிட, அனைவருமே தங்கள் இருக்கையை விட்டு எழுந்துவிட்டார்கள். தன்னை மீறி எழ முயன்ற ஊர்மிளாதேவி, இறுதி நொடியில் சுதாரித்து அமர்ந்தாள்.

“இளவரசி... அவர் மா வீரர்தான்...” தர்மனின் அசாத்திய பலம் அங்கிருந்த அனைவரையும் கட்டிப் போட்டது. ஒரு வழியாக அவன் வெற்றி இலக்கை எட்டி, அங்கே கட்டியிருந்த மஞ்சள் துணியை அவிழ்க்க, அதில் இருந்த பொன் முடிப்பு அவன் கையில் இருந்தது.

அதே நேரம்... வெற்றி பெற்ற மாவீரனுக்கு, இளவரசி ஊர்மிளாவின் கரத்தால் கேடயம் வழங்கப்படும் என உரைக்கவே, அவளையே பார்த்தவாறு படிகளில் ஏறி வந்தான். அவனது அசையாத பார்வை அவளை என்னவோ செய்ய, பார்வையை சற்று விலக்கிக் கொண்டாள்.

அவனோ... அவளை நெருங்கியவன், அவள் கரத்தில் இருந்து கேடயத்தை பெற்றுக்கொள்ள முயன்ற அந்த நொடி, தன் கரத்தில் இருந்த ஒரு மோதிரத்தை, மற்றவர் அறியாதவாறு அவளது இடக்கையில் வைத்து மூடினான்.

“நன்றி என் தேவி...” அவன் உரைக்க, அவன் உரைத்தது ஆரவாரங்களுக்கு மத்தியில் மற்றவர்களுக்கு கேட்கவில்லை என்றாலும், அவள் காதில் விழுந்து உறையச் செய்தது.

***

# நிழல் – 16

பஞ்சணையில் படுத்திருந்த ஊர்மிளா தேவிக்கு நினைவுகள் முழுவதும் தர்மனிடமே நிலைத்து இருந்தது. சறுக்குமரத்தில் ஏறிய அவனது திறமை, துணிச்சல்… அத்தனை இளவரசர்கள் முடியாமல் மண்ணை கவ்விய ஒரு விஷயம், அவன் முயன்று முடித்த விதம், நினைக்கையிலேயே வியந்து போனாள்.

கூடவே, அத்தனை மனிதர்கள் முன்னிலையில், அவனது செய்கை… தன் இடக் கையில் இருந்த அந்த மோதிரத்தைப் பார்த்தவளுக்கு, பெரும் படபடப்பாய் இருந்தது. அதைவிட அவனது பேச்சு… ‘என் தேவி…’ அந்த பதம் ஏற்படுத்திய தாக்கம் இன்னும் அவளிடம் சற்றும் குறையவில்லை.

படுக்கையில் படுத்திருக்க முடியாமல், உறக்கமும் வராமல், அங்கிருந்து எழுந்தவள், சாளரத்தின் அருகே சென்று நின்றாள். அன்று முழு நிலவு நாளாக இருக்கவே, வானத்தில் நிலவு சிரித்துக் கொண்டிருந்தது. அவள் அதன் அழகை ரசித்துக் கொண்டிருக்க, அதே நேரம் தனக்கு ஒதுக்கியிருந்த அறையில் படுத்திருந்த தர்மாவும் நிலாவைத்தான் பார்த்துக் கொண்டிருந்தான்.

நிலவில் ஊர்மிளாவின் முகம் தெரிய, இடக்கரத்தை தலைக்கு அடியில் வைத்து அசையாமல் பார்த்திருந்தான். தான் அவளிடம் பேசிய அந்த நொடி, அவள் கண்களில் தெரிந்த அதிர்ச்சி, அவளது கண்கள் சுழன்று அருகே பதிந்த விதம், இமை மூடி தனக்குள் ஓட்டிப் பார்த்துக் கொண்டான்.

அதில் தெரிந்த நம்ப முடியாத தன்மை… ‘நீதான் சொன்னாயா?’ அவள் கண்களில் தெரிந்த கேள்வி, நிச்சயம் அவளுக்கு தன்னைத் தெரிந்திருக்கிறது என்பதில் அப்படி ஒரு நிம்மதி கொண்டான். அது சரிதானா என தெரிந்துகொள்ளும் வேகம்.

அந்த நிமிடமே அவளைச் சென்று பார்க்க மனம் தவித்தது. நினைத்த விஷயத்தை செய்து முடிக்கவில்லை என்றால் அவன் என்ன வீரன்? படுக்கையில் இருந்து சட்டென எழுந்து அமர்ந்தான். எழுந்தவன் தன் பக்கத்து படுக்கையில் அங்கே ஒருக்களித்து படுத்து உறங்கிக் கொண்டிருந்த மிதுனனை ஒரு பார்வை பார்த்துக் கொண்டான்.

அவன் உறங்குவதுபோல் பாசாங்கு செய்தாலும் நிச்சயமாக உறங்கிக் கொண்டிருப்பான் என்றெல்லாம் அவன் நம்பவில்லை. ஆனாலும் அதை சோதித்து அறிய விரும்பாமல், அமைதியாக எழுந்தவன், தன் உடைவாளை எடுத்து இடுப்பில் செருகிக் கொண்டான்.

அன்றைய இரவில் இளவரசர்களுக்கென ஒதுக்கியிருந்த கட்டில் தங்கியிருந்ததால், கோட்டைக்குள் எப்படி நுழைவது என்ற பிரச்சனை அவனுக்கு இருக்கவில்லை. கதவும் அழுத்தி சாற்றியிருக்காத காரணத்தால், ஓசை எழாமல் அதைத் திறந்தவன் அங்கிருந்து வெளியேறினான்.

அப்பொழுது அவன் மேனியை அந்த அரசாங்க வீரர்களுக்கான உடை தழுவியிருக்க, பந்தம் ஒன்றை கரத்தில் ஏந்தியவன், அதன் ஒளி தன் முகத்தில் அதிகம் விழாதவாறு சற்று தூரமாக பிடித்துக் கொண்டான்.

அவன் வந்த நேரம், காவலர்கள் பணி மாறும் நேரமாகையால் அவன் வெளியேறி நடந்ததை அங்கே இருந்த மற்றவர்கள் பெரிதாக கவனித்ததாகத் தெரியவில்லை. தன் இருந்த இடத்தில் இருந்து பிரிந்து, வராண்டாவை கடந்து, தோட்டத்தில் இறங்கினான்.

சற்று தூரத்தில் இளவரசிக்கான அந்தப்புரம் தெரிய, சற்று நிதானமாக முன்னேறியவன், அவள் இருந்த இடம் நெருங்கவே, தீப்பந்தத்தை அணைத்தவன், இருளுக்குள் மறைந்து மெதுவாக நகர்ந்தவன், நந்தவனத்தில் இருந்த பெரிய மரத்தில் தாவி ஏறினான்.

அதன் கிளைகளில் நகர்ந்து... அந்தப்புரத்தின் சாளரம் வழியாக உள்ளே நுழைந்தான். நடுச்சாமம் ஆகையால் தீப்பந்தங்கள் அனைத்தும் அரை ஒளியில் ஒளிர, அங்கொன்றும் இங்கொன்றுமாக இருந்த பந்தங்களும் சோபையான ஒளியையே வழங்கியது.

தர்மன் கொஞ்சம் கூட தடுமாறவே இல்லை. இளவரசியின் அறையை நோக்கி திடனாக முன்னேறியவன், இரண்டு கட்டுக்களை தாண்டி, சுவரின் வழியாக கடந்து, சாளரம் வழியாக அவள் அறைக்குள் நுழைந்தான்.

நுழைந்தவனது கண்கள் ரத்தமென சிவந்து போனது. அங்கே... முழு போதையில் ஊர்மிளாவிடம் தவறாக நடக்க முயன்றுகொண்டிருந்தான் ரமணன்.

ரமணன் அங்கே வருகையிலேயே இளவரசியின் பணிப் பெண்கள், “அந்நிய ஆடவர்கள் இங்கே வர அனுமதி இல்லை” அவனைத் தடுத்திருக்க, அவர்களை ஒற்றை கரத்தால் விலக்கித் தள்ளியவன் பிடிவாதமாக அங்கே வந்திருந்தான்.

இளவரசியின் காவலுக்கு இருந்த காவலர்கள் அவனைத் தடுக்க, “மூடர்களே, நீங்கள் தடுப்பது யாரை எனத் தெரிகிறதா?” அவர்களிடம் எகிற, சற்று தடுமாறினாலும் அவனை உள்ளே அனுமதிக்க மறுத்தார்கள்.

ஆனால் அவனோ, தன் காவலர்களைப் பார்த்தவன், “இவர்களின் சிரங்களை வெட்டி வீழ்த்துங்கள்... இல்லையில்லை... நாளை காலையில் ராஜகுருவிடம் இவர்களின் அயராத கடமை உணர்வைப் பற்றி சொல்லிவிடலாம். அவர் பார்த்துக் கொள்வார்...” அவன் சொல்ல, ராஜகுருவின் பெயரைக் கேட்ட மற்றவர்கள் சற்று தயங்கினார்கள்.

ஆனாலும் முழுதாக விலகாமல், அவர்கள் நிற்கவே, அவன் தன் விரல் நகங்களை நொடிக்க, அந்த வீரர்களுக்குப்

பின்னால் இருந்து வந்த அவனது வீரர்கள், அவர்களை பின்னந்தலையில் அடித்து மயக்கமுறச் செய்தார்கள்.

அவர்களை அப்புறப்படுத்திவிட்டே அவளது அறைக்குள் நுழைந்திருந்தான். தன் அறைக்குள் அத்துமீறி நுழைந்த அவனைப் பார்த்து அதிர்ந்தவள், “யாரங்கே…” அவளது குரலுக்கு எதிர்வினை எதுவும் இல்லாமல் போகவே, வெளியே ஏதோ நாசவேலை நடந்திருக்கிறது என்பதை புரிந்து கொண்டாள்.

தனது தந்தையார் என்றைக்கு அந்த ராஜகுருவின் பேச்சை கேட்கத் துவங்கினாரோ, அன்றுமுதல் தங்கள் அதிகாரம் ஒவ்வொன்றும் தங்கள் கையை விட்டுப் போகும் உணர்வு. தன் கரத்தை பிடிக்க முயன்ற அவனை, தன் இடையில் சீலைக்குள் மறைத்து வைத்திருந்த குறுவாளால் தாக்கும் முனைப்போடு நின்றாள்.

ஆனால் அதே நேரம், அவளது அறைக்குள் நுழைந்த தர்மன், சற்றும் யோசிக்காமல், தன் உடைவாளை கண்ணிமைக்கும் நேரத்தில் கரத்தில் எடுத்தவன், இடக்கரத்தால் அவன் கழுத்தை வளைத்து, வாளின் முனையை அவன் கழுத்தில் வைத்து அழுத்தினான்.

கூடவே, “சற்று அசைந்தாலும் உன் உயிர் விண்ணைப் பார்த்து பயணம் செய்ய நான் உதவி செய்ய வேண்டி இருக்கும்” அவனை எச்சரித்தவன், அழுத்தமாக பிடித்து இழுத்து வந்தான்.

“யாரடா நீ…? பெண்ணின் அந்தப்புரத்தில் நுழைய உனக்கு எவ்வளவு தைரியம்? நான் ஒரு நொடி நொடித்தால், உன் உயிர் சிட்டுக்குருவியாக பறந்துவிடும்” கர்ஜித்தான் ரமணன். அவனது போதை இருந்த இடம் தெரியாமல் போனது.

“நொடித்தால் தானே…” கேட்ட தர்மன், மெல்லியதாக நகைக்க, அப்பொழுதுதான் தன் கரங்களை அசைக்க முடியாதவாறு வந்தவன் தன்னை பற்றியிருப்பதையே

உணர்ந்தான். அதே நேரம் வந்தவன் சாதாரணமானவன் இல்லை என்பதும், தன்னைப் பற்றி அறிந்தவன் என்பதையும் உணர்ந்து கொண்டான்.

“இளவரசியாரே… ஒரு கயிறு கிடைத்தால் நலமாக இருக்கும்…” தர்மன் கேட்க, அப்பொழுதுதான் சற்று கலைந்தாள். வேகமாக சென்று அவன் கேட்டதை கொண்டுவந்து கொடுக்கவே,

“உன் எதிர்கால கணவனை கைது செய்ய கயறு கொண்டுவந்து கொடுக்கின்றாயா? இதுதான் முறையா? தர்மமா?” அவளிடம் சீறினான்.

“தாங்கள் பேசாமல் இருப்பதும் நலம்… இல்லையென்றால்…” கேட்டவன், சட்டென அவன் பின்தலையில் வாளின் கைப்பிடி கொண்டு ஓங்கி அடிக்கவே, வேரறுந்த மரமாக கீழே விழுந்தான்.

அவன் விழவே, “இன்னும் இரண்டு நாழிகைக்கு எழுந்துகொள்ள மாட்டான். அந்த கையிற்றை இப்படிக் கொடுங்கள்…” வாங்கியவன் அதைக் கொண்டு, ரமணனை சுற்றிக் கட்டி, ஓரமாக தூக்கிப் போட்டான்.

அவனை ஒதுக்கிய பிறகுதான் புதியவன் ஒருவன் தன் அறைக்குள் நிற்கிறான் என்ற உணர்வே அவளுக்கு வந்தது. கூடவே அவன் யார் என்பதும் புரிய, மெல்லியதாக படபடத்துப் போனாள். தனக்கு மணாளனாக உறுதி அளிக்கப் பட்டிருப்பவன் வில்லனாக தெரிவதும்,

யாரென்றே தெரியாத புதியவன், மனதுக்கு நெருக்கமாகத் தோன்றும் விந்தை. அவனுடன் இருப்பதற்கு பயமோ, தயக்கமோ எதுவும் தோன்றவில்லை. மாறாக, ஒருவித நிறைவு, ‘இப்படி ஒரு வீரனைத்தான் நான் மனதில் வரித்திருந்தேன்’ என்னும் நினைவு.

அவள் அமைதியாக நிற்கவே, “இளவரசிக்கு என் வந்தனங்கள்…” அவன் உரைக்க, அவளது கண்களில்

மெல்லிய கோபம் துளிர்த்தது.

‘மாலையில் என் தேவி’ என உரிமையாக உரைத்தவருக்கு, சில நாழிகைக்குள் இளவரசியாகிப் போனேனா?’ மனதுக்குள் எண்ணிக் கொண்டாள்.

அவள் கண்களில் கோபத்தைக் கண்டவன், “தங்கள் அறைக்குள் அத்துமீறி நுழைந்துவிட்டேன் என்ற கோபமா?” அவளை சீண்டும் குரலில் கேட்க, இப்பொழுது மெய்யான கோபம் அவளிடம்.

“இப்பொழுதும் எதுவும் தாமதமாகிவிடவில்லை, விரல் நொடித்தால் தங்களது உற்றவரின் படை வீரர்கள் வந்து என்னை சிறை பிடிக்கலாம். விரல்நொடிக்க உதவி தேவையென்றால்…” கேட்டவன், தன் பெருவிரலையும், நடு விரலையும் இணைத்து ஒலிஎழுப்ப முயல, சட்டென அதைப் பாய்ந்து வந்து தடுத்திருந்தாள்.

அந்த நொடி, அவள் மனதுக்குள் தான் இருப்பதை உணர்ந்து கொண்டவன், “இந்த கரிசனைக்கு பொருள் என்னவென்று உரைத்தால் உதவியாக இருக்கும்…” அவளை தூண்டினான்.

தன் இடக்கரத்தை அவனுக்கு முன்னால் நீட்டியவள், அவன் கொடுத்த மோதிரத்தை சுட்டிக்காட்ட, அவ்வளவு நேரத்தில், அவன் முகத்தில் மெல்லியதாக ஒரு இளக்கம் கண்டாள். அந்த அறைக்குள் இருந்த ஒற்றை தீபத்தின் மெல்லிய ஒளியில் அவள் முகத்தை ஊன்றி கவனித்தான்.

“தேவி…” அழைத்தவன் அவளை நெருங்கி நிற்க, அவளது பட்டு சீலை அவன் வெற்று நெஞ்சில் உரசியது. அவளது இதயம் அதன் தாளத்தை அதிகரிக்க, அவள் மார்பு ஏறி இறங்கியது. அவனது பார்வை மெல்லியதாக இடம் மாற, அப்பொழுதுதான் இரவுக்கென உடுத்திய சற்று மெல்லிய பட்டு சீலையில் தான் இருப்பதையே அவள் உணர்ந்தாள்.

அந்த அரை இருளில் அவன் பார்வைக்கு எதுவும் விருந்தாகப் போவதில்லை என்றாலும், பெண்ணாக சட்டென ஒரு நாணம் தாக்க, வேகமாக சாளரத்தின் பக்கம் நகர்ந்தாள். அவள் அப்படி நகர்ந்தது அவனுக்கு இன்னும் வசதியாகப் போயிற்று.

அவள் பக்கம் அவன் நகர, அவன் தன்னை நெருங்குவது புரிய, திரைச்சீலையை கெட்டியாக பற்றிக் கொண்டாள். அவள் முதுகில் பட்டும் படாமல் உரசியவாறு நின்றவன், திரைச்சீலையில் இருந்த அவள் கரத்தின் அருகில் தன் கரத்தை வைத்தான்.

கரத்தை விலக்கிக் கொள்ளவா? வேண்டாமா? என்ற விவாதத்தில் அவளது மனம் ஈடுபட, “தேவி...” அழைத்தவன், தன் வலக்கரத்தால் அவளது வலக்கரத்தை பற்றிக் கொண்டான்.

“ம்... ம்ஹும்...” மெல்லிய மறுப்பை அவள் வெளியிட, சட்டென கரத்தை விலக்கிக் கொண்டவன் பட்டென விலகி நிற்க, எங்கே கோபம் கொண்டுவிட்டானோ என்ற பதைப்பில் வேகமாக திரும்பி அவன் முகம் பார்த்தாள்.

நெருங்கி வருகையில் விலகிச் செல்வதும், விலகிச் செல்கையில் நெருங்கச் சொல்வதுமாக பெண்ணின் மனதின் விந்தை. அதை அவனும் சரியாக உணர்ந்துகொண்டான். அதேபோல், நேரம் கடந்துகொண்டிருக்க, அதற்குமேல் அவளது அறையில் இருப்பது சரியென அவனுக்குத் தோன்றவில்லை.

எப்பொழுது வேண்டுமானாலும் ரமணனின் படைவீரர்கள் அவனைத் தேடலாம்... எனவே அவனை அங்கிருந்து அப்புறப்படுத்த முயன்றான். “தேவி... காலம் அதிக நேரமில்லை... வெளியே நிற்பவர்கள் எந்த நேரமும் இவனைத் தேடலாம்...” சூழல்களின் தன்மையை உணராமல் போவது வீரர்களுக்கு அழகல்லவே.

“இவரது மயக்கம் தெளிந்தால்…” அவள் வினா தொடுக்கவே,

“இளவரசியாருக்கு ரகசிய வழிகள் தெரியாது எனச் சொன்னால் நம்பும்படியாக இல்லையே…” உரைத்தவன், அந்த அறையை அங்குலம் அங்குலமாக அலசினான். எதையோ கண்டுபிடித்து, அந்த விசையை அழுத்தவே, இடப்பக்கம் இருந்த சுவர் மெதுவாக அசைந்து இடைவெளி விட்டது.

‘இவையெல்லாம் இவருக்கு எப்படித் தெரியும்…?’ எண்ணியவள் அவனையே பார்த்திருந்தாள்.

மயங்கிக் கிடந்தவனை தன் தோளில் ஏற்றியவன், அந்த இடைவெளி வழியாக உள்ளே நுழைந்தான். அவன் பின்னால் அவளும் செல்லவே, அதைத் தடுத்தவன், “தாங்கள் அறையில் இல்லையென்றால் மற்றவர்களின் பெரும் சந்தேகத்துக்கு ஆளாக வேண்டி இருக்கும்.

“இவனை நான் அங்கே வீசிவிட்டு செல்கிறேன். போதை தெளிந்த பிறகு நடந்தவை உண்மையா, கனவா என அவன் அறிந்துகொள்ளவே ஒரு மண்டலம் ஆகும்…” அவன் சொல்லிவிட்டு திரும்பி நடக்க முயல,

“தாங்கள் கவனமாக…” சொல்லத் துவங்கியவள், அவனுக்குத் தெரியாத எதையும் தான் சொல்லிவிடப் போவதில்லை என்பதால் அமைதியானாள். அதே நேரம், வாயில் கதவு விசையோடு தட்டப்படவே, அவளது கரத்தில் மெல்லிய பட்டுத்துணியை திணித்தவன், அந்த வழியே விரைந்தான்.

அவன் சென்று மறைந்த சில நொடிகளில் சுவர் பழைய நிலைக்குத் திரும்பவே, அந்த பட்டுத்துணியை தன் இடையில் மறைத்தவள், கதவைத் திறக்கச் சென்றாள்.

முகத்தை உறக்கம் கலைந்த களைப்பிலும், கோபத்துக்குமாக மாற்றியவள், சற்று இடைவெளி விட்டு,

சில நிமிடங்கள் கடந்த பிறகே கதவைத் திறந்தாள்.

“இந்த அகால நேரத்தில் இளவரசியின் அறை வாயிலை முட்ட உங்களுக்கு என்ன திணக்கம்...?” தன் கோபத்தை காட்ட, வீரர்கள் விழித்தார்கள்.

“இளவரசியாரே... எம்பெருமான்... இங்கே... தங்கள் அறைக்கு...” சொல்லத் துவங்கியவன், தன் வார்த்தைகளில் இருக்கும் பெரும் அபத்தம் புரியவே அப்படியே நிறுத்திக் கொண்டான். ஆனாலும், திரும்பிச் செல்ல மனமற்று,

“தாங்கள் அனுமதியளித்தாள்... தங்கள் அறைக்குள் பார்த்துவிட்டு சென்று விடுகிறோம்” எங்கே அவளால் ரமணனுக்கு ஆபத்து நேர்ந்திருக்குமோ என எண்ணினான்.

“முட்டாளே... உனக்கு மூளை பிசகி விட்டதா? யாரங்கே...” உரக்க அழைக்கவே, வந்தவர்கள் சற்று பின்வாங்கினார்கள்.

‘போதையில் வழி தெரியாமல் சென்றுவிட்டாரோ?’ என எண்ணிக் கொண்டார்கள். அதே நேரம், தர்மனின் சமயோசிதத்தை எண்ணியவள், அறைக்கதவை இழுத்து தாளிட்டாள்.

***

# நிழல் – 17

மறுநாள் அரண்மனையே அல்லோகலப்பட்டுக் கொண்டிருந்தது. அங்கே நடுநாயகமாக நின்றவன் ரமணனைத் தவிர வேறு யார்? நேற்று இரவில் அவனுக்கு நடந்த நிகழ்வுகள், அதை அவனால் ஏற்க முடியவில்லை. இரவில் இளவரசியின் அறைக்குச் சென்றது அவனுக்கு தெளிவாக நினைவு இருக்கிறது.

ஆனால் கண் விழிக்கையில் கோயில் பிரகாரத்தில் கண் விழித்தால் அவனுக்கு கோபம் வராதா என்ன? அங்கிருந்து வந்தவன், தன் வீரர்களை ஒருவழி செய்துவிட்டான்.

“தீவட்டித் தடியர்களே… வெளியே பந்தத்தை பிடித்துகொண்டு தூங்கிக் கொண்டிருந்தீர்களா?” அவர்களிடம் சாடினான்.

ஆனாலும், தன்னை எவனோ ஒருவன் அடித்ததையோ, கட்டிப் போட்டதையோ மறந்தும் உரைக்கவில்லை. அப்படிச் சொன்னால், உடன் இருப்பவர்களே அவனை மதிக்க மாட்டார்களே.

ஊர்மிளா தேவிக்கு எவனோ ஒருவன் உதவுகிறான் என்பதையோ, அந்த நேரத்தில் அவளது அறைக்கு வரும் அளவுக்கு அவனுக்கு எப்படி தைரியம் வந்தது? அதிலும் அவனை எதுவும் சொல்லாத தேவியின் செய்கை, தன்னைக் கட்டிபோட கையிற்றை எடுத்துக் கொடுத்த அவளது கோபம்… அவனுக்கு மனம் தீயாய் எரிந்தது.

இங்கே வந்ததுமுதல் அவளை அடைய பல வழிகளில் அவனும் முயன்று கொண்டுதான் இருக்கிறான். பெண்ணின் சுவை ஒன்றும் அவனுக்குப் புதிதில்லை. ஆனால்… ஊர்மிளா தேவியின் அந்த அழகு, அவளால் கிடைக்கப் போகும் ராஜாங்கம்… அவனுக்கு வெறியேற்றியது.

அவன் கோபமாக இருக்கவே, அவனை நெருங்கிய ராஜகுரு, “ரமணா, கிணற்றுத் தண்ணியை ஆற்று வெள்ளமா அடித்துச் சென்றுவிடும்? இன்னும் சில மாதங்களே… நம் தேசத்து நடராஜர் கோயில் திருவிழா முடிந்தவுடன் உங்கள் திருமணம்தான்…

“அது வரைக்கும் உன் திருவிளையாடல்களை சற்று நிறுத்தி வை. மகாராஜாவின் கோபத்துக்கு ஆளாகும் எந்த செய்கையையும் செய்யாமல் இருப்பது நலம். நேற்று இரவில் நடந்தவை…” பேச்சை நிறுத்தியவர், அவனை சற்று ஊன்றிப் பார்த்தார்.

தான் இளவரசியின் அறைக்குச் சென்றது அவரது பகுதியில் இருந்தவருக்கு எப்படித் தெரியும்? என சிந்தித்தான். ‘ஒரு வேளை காவலுக்கு இருந்த வீரர்கள் உரைத்திருப்பார்களோ?’ தனக்குள் கேட்டுக் கொண்டான்.

“இளவரசரின் கரத்தை நான் எல்லா நேரமும் கட்டிப்போட முடியாது. அதே நேரம்… தர்மன் கொடுத்துச் சென்ற பட்டுத் துணியில் குறிப்பிட்டிருந்த இடத்துக்கு, தனியாக பயணப்பட்டுக் கொண்டிருந்தாள் ஊர்மிளா தேவி.

அதுவும் அவளது உற்ற தோழியான ஆனந்தவல்லியின் உடையில், அவளது தோற்றத்தில் கிட்டத்தட்ட மாற்றியவள் சென்று கொண்டிருந்தாள்.

இங்கே… இளவரசியின் இடத்தில், அவளுக்கு பதிலாக இருந்தாள் ஆனந்தவல்லி. ஆனந்தவல்லி அவ்வளவு சுலபமாக இந்த திட்டத்துக்கு ஒத்துக் கொள்ள வெகுவாக தயங்கினாள். ஆனால், அவள் கொடுத்த வாக்கை வைத்தே அவளை மடக்க, ஆனந்தவல்லிக்கு வேறு வழி இருக்கவில்லை.

அவளும் எவ்வளவோ சொல்லிப் பார்த்துவிட்டாள். இப்பொழுது இருக்கும் அரசியல் சூழல்களைச் சொல்லி, இது எதிரிகளின் சூழ்ச்சியாக இருந்தால்… என்ற சந்தேகத்தைக் கூட சொல்லிவிட்டாள். ஆனால், ஊர்மிளா

தேவி எதையும் காதுகொடுத்து கேட்கும் நிலையில் இல்லையே.

அத்தோடு... தர்மன் அவளை வரச் சொல்லியிருந்த இடமும் அவர்கள் ராஜ்யத்தில், சற்று தொலைவில் இருந்த அவர்களுக்குச் சொந்தமான ஓய்வு எடுக்கும் பழைய அரண்மனைப் பகுதியாக இருக்கவே, அங்கும் அவர்களது வீரர்களின் நடமாட்டம் இருக்கும் என்பதால், சற்று தைரியமானாள்.

முதல்நாள் அவள் அங்கு சென்று திரும்பவே, அவள் வரும் வரைக்கும் அந்தப்புரத்தில் இருந்த இளவரசியின் அறையை விட்டு வெளியே வராமல் அடைந்து கிடந்தாள் ஆனந்தவல்லி.

அவள் வந்தவுடன் தன் உற்றவனை சந்திக்க அவள் ஆற்றங்கரைக்குச் செல்லவே, அவளை சற்று கோபமாக எதிர்கொண்டான் அமிழ்தன்.

அவளைப் பார்த்தவுடனே, “தவறு செய்கிறாய் ஆனந்தவல்லி... இது தவறு...” அவன் சுட்டிக் காட்டவே, பெரும் அதிர்ச்சிக்கு உள்ளானாள்.

“தங்களுக்கு எப்படி...?” அவள் திணற,

“என்னவளை இனம் கண்டுகொள்ள முடியாத அளவுக்கு நான் மூடன் இல்லை. மாட்டு வண்டியில் பயணம் செய்வதால், இளவரசியை அடையாளம் தெரியாமல் போகும் அளவுக்கு நான் சோமபானத்திலும் மிதப்பதில்லை.

“இந்த நாட்டின் ஒவ்வொரு மூலையிலும் என் பார்வை இருக்கின்றது. உங்களது ஒவ்வொரு அசைவும் எனக்குத் தெரியும். மகாராஜாவுக்கு இவையெல்லாம் தெரிந்தால் என்ன நடக்கும் என்று நான் சொல்ல வேண்டியது இல்லை.

“ராஜகுருவின் எச்சரிக்கையை மீறி செயல்படுவது தவறு…” அவளுக்குப் புரிய வைக்க முயன்றான்.

“சத்ரியர்கள் கொடுத்த வாக்கை மீறுவது இல்லையே… நானும் என் தோழிக்கு அவளது காதலை சேர்த்து வைப்பதாக உறுதி அளித்திருக்கிறேன்” அவனுக்கு நேராக உரைத்தாள்.

“என்ன… இதனால் என் நேசத்தை நீ இழக்கும் நிலை வந்தால்?” சற்று கோபமாக இரைந்தான்.

“என் நேசத்தை விடுத்து தங்களால் இருக்க முடியுமா?” சற்று கர்வமாகவே கேட்டாள்.

“அடிக்கள்ளி… இந்த ஆணவம்தான், என்னை உன் பின்னால் பித்துக் கொண்டு அலைய செய்கிறது…” காதலில் கசிந்து உருகினான்.

தொடர்ந்து வந்த நாட்களிலும் ஆனந்தவல்லி உதவ, இளவரசி மாறுவேடத்தில் தர்மனுடன் சேர்ந்து தன் காதலை வளர்த்தாள். அவர்களுக்கு பாதுகாப்பாக மிதுனன் இருக்க, மறைமுகமாகவேனும் இளவரசியின் பயணத்தில் அவளைத் தடுக்காதவாறு பார்த்துக் கொள்ள வேண்டி இருந்தது அமிழ்தனுக்கு.

அமிழ்தன் எவ்வளவு தடுத்தாலும் விஷயம் ராஜகுருவுக்கு தெரியவர, கடும் கோபம் கொண்டார். தர்மனை பார்க்கும் இடத்திலேயே கொன்றுபோட ஆணை பிறப்பித்தவர், இளவரசியை கூட கைது செய்ய உத்தரவிட்டார். அவரது ஆலோசனைப்படி நடக்கும் மகாராஜாவுக்கு அவரை மீறி எதையும் செய்ய இயலாத நிலை.

அந்த அவரது உத்தரவு ஊர்மிளா தேவிக்குத் தெரியவர, அன்றைய நள்ளிரவில் ஆனந்தவல்லியின் துணையோடு தர்மனைக் காணச் சென்றாள். அவனை கண்டவுடன் கொல்ல உத்தரவிடப்பட்டிருப்பதைச் சொல்லி, அவனை தப்பிச் செல்ல பணித்தாள்.

அவனோ... அவளை தன்னோடு கூட்டிச் செல்ல முயல, அவனது பிடிவாதம் உணர்ந்தவள், தன் காதலை அவனுக்கு நிரூபிக்க வேண்டி, அவனுக்கு மாலையிட்டவள், அவனைத் தன் கணவனாக வரிக்க, அவளுடன் சென்றிருந்த ஆனந்தவல்லி சற்று ஒதுங்கிக் கொண்டாள்.

தன் விரலில் இருந்த தன் நாட்டின் முத்திரை மோதிரத்தை கழட்டியவன், அவளுக்கு அணிவித்து, காட்டு மலர்களால் மாலை தொடுத்து, நிலவை சாட்சியாக்கி அவளை தன் சரிபாதியாக ஏற்றுக் கொண்டான்.

முதல் ஜாமம் கடந்து, இரண்டாம் ஜாமம் துவங்கவே, அந்த வனாந்திரம் பெரும் இருளுக்குள் மூழ்கி இருந்தது. பந்தங்களை கொளுத்தலாம் என்றால், அந்த வெளிச்சம் எவ்வளவு தூரத்திலும் இருக்கும் ஆட்களை கவரும் என்பதால், அந்த முயற்சியை கைவிட்டிருந்தார்கள்.

தன்னை கணவனாக வரித்துக் கொண்ட ஊர்மிளா தேவியை, தன் கைகளில் அள்ளிக் கொண்டவன், மரங்கள் அடர்ந்த புதருக்குள் தூக்கிச் செல்ல, அவன் கரங்களில் மயங்கிக் கிடந்தாள்.

பஞ்சணையில் கிடைத்த வேண்டிய அவளது பூவுடலை, மணல் தரையில், காட்டுக்கு மத்தியில் கிடைத்த வேண்டி இருக்கிறதே என துயரம் கொண்டவன், அவளை கிடத்திவிட்டு, சில நொடிகள் அமைதியாக அவளைப் பார்த்திருந்தான்.

‘என்ன இது...? ஆர்வமாக தூக்கி வந்தவர் செயலற்று பார்த்திருக்கிறார்?’ மனதுக்குள் எண்ணியவள், தன் விழிகளை கொஞ்சம் நகர்த்தி அவனைப் பார்க்க, அவன் முகத்தில் இருந்த கவலை அவளை வாட்டியது.

அவனை போகச் சொல்வதால் இப்படி சோகமாக இருக்கிறான் எனக் கருதியவள், “இங்கே சூழ்நிலை கொஞ்சம் சரியானால், நான் சேதி அனுப்புகிறேன்” அவள்

சொல்ல, தன் சிந்தையை கைவிட்டவன், விஷமமாக அவளைப் பார்த்தான்.

“அரசியல் பற்றி சிந்திக்கும் வேளையா இது?’ அதை அவளிடம் கேட்கவும் செய்தான்.

“வேறு...” அவனிடம் மெல்லிய குரலில் கேட்க, அவள் இதழ்களை தன் முரட்டு இதழ்களால் தீண்டினான்.

சற்று அழுத்தம் கூட்டியவன், பற்களால் அவளது இதழ்களை கவ்வி சுவைக்க, தானும் அவனுக்கு வாகாக இசைந்தாள்.

அவனது முரட்டு முத்தத்தில் சற்று திணற, அவன் கரங்கள் தன் மேனியில் பயணித்த விதத்தில் கிளர்ந்தெழுந்தாள். அந்த வனாந்திரமும், காரிருளும் அவர்கள் தனிமைக்கும் கூடலுக்கும் சாட்சியாக அவனது உடைவாள் அவர்களுக்கு அருகில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தது.

அவனோடு கூடிக் கலந்தவள், அருகில் இருந்த ஓடையில் குளிக்க இறங்க, தானும் அவளுடன் இணைந்து கொண்டான். அவள் மீனாக துள்ளி நீந்த, அவளுக்கு போட்டியாக தானும் இணைந்தான். அந்த நேரத்தில் தங்களைச் சுற்றி இருக்கும் ஆபத்து, பிரிவு எதுவும் அவர்களைத் தீண்டவில்லை.

குளித்து உடை மாற்றும் நேரம் கூட அவளை விட்டுப் பிரியாமல் அவன் இருக்க, தன் தேவைகளை மீண்டுமாக அவளிடம் நிறைவேற்றிக் கொண்டவன், அவளை விட்டு பிரிந்து செல்ல முடியாமல் திணறினான்.

ஆனால், தன்னுடன் அழைத்தாலும் வர மறுப்பவள், கவர்ந்து செல்கிறேன் எனச் சொன்னாலும் ஒத்துக்கொள்ள மறுப்பவளை, அவனும் என்ன சொல்லி வழிக்கு கொண்டுவர?

அவன் அவளை கவர்ந்து சென்றால், நிச்சயம் அவர்களது ராஜ்யங்களுக்கு இடையில் போர் மூளும், தங்களால் ஒரு

போர் வேண்டாம் என அவள் நினைக்க, தன்னவளுக்காக எதையும் செய்ய அவன் தயாராகவே இருந்தான்.

ஆனால்... அவன் படைபலமற்று வந்திருக்கும் இந்த நேரத்தில், அவனை தன்பொருட்டு சிறையில் அடைப்பதையோ, கைது செய்வதையோ அவள் விரும்பவில்லை. எனவே பிடிவாதமாக அவனை அவள் நாட்டில் இருந்து போகச் சொன்னாள்.

இந்த பரபரப்பான சூழல்கள் கொஞ்சம் குறைந்த பிறகு, அவனது திட்டத்துக்கு உடன்படுவதாகச் சொல்லவே, அவனும் சற்று சமாதானமாகி அங்கிருந்து செல்ல முடிவெடுத்தான். மிதுனனும் அதுவே சரியென உரைக்கவே, அரை மனதாக சம்மதித்தான்.

அதுவே அவர்களது இறுதி சந்திப்பாக இருக்குமென்று அவனுக்குத் தெரிந்திருந்தால், நிச்சயம் அங்கிருந்து செல்ல அவன் முடிவு செய்திருக்க மாட்டானோ?

***

# நிழல் – 18

மன்னனை சந்திக்க வேண்டி, முன்கூட்டியே அனுமதி வாங்கும் அவசியம் ராஜகுருவுக்கு இல்லை என்றாலும், அந்த அகால வேளையில் தன் அறைக்கு தன்னைத் தேடி வந்த ராஜகுருவைப் பார்த்து திகைத்துப் போனார்.

“குருவே… என்னை அழைத்திருந்தால் நானே வந்து தங்கள் இல்லத்தில் சந்தித்திருப்பேனே” சற்று தயங்கினார்.

“சேதி சொல்லி அனுப்பும் அவகாசம் இல்லை மன்னா… உன் ஆட்சிக்கு ஒரு பங்கம் என்கையில், சேதி சொல்ல ஏது காலம்?” கர்ஜித்தார்.

அவரிடம் இவ்வளவு கோபத்தை எப்பொழுதுமே கண்டது இல்லை என்பதால் திகைத்தார். “என் ஆட்சிக்கு பங்கமா? யார் இழைத்தது?” வெகுண்டார்.

“என்னுடன் வா…” அரசனை அழைத்துக் கொண்டு இளவரசியின் இடம் செல்லவே, அரசனின் வியப்பும், குழப்பமும் பல மடங்காய் பெருகியது.

“குருநாதா… இந்த வேளையில் இங்கே… இளவரசி நித்திரையில் இருப்பாள்” அவளது உறக்கத்தை கலைக்க அவருக்கு மனமில்லை. எனவே சற்று தயங்கினார்.

“இளவரசி இங்கே இருந்தால் தானே நித்திரை கலைய?” வெறுப்பாய் உரைக்க, அங்கே இருந்த தோழிப் பெண்களை ஒரு பார்வை பார்த்தார். மகாராஜாவின் பார்வை தங்கள் பக்கம் திரும்பவே, நடுநடுங்கிப் போனார்கள்.

இளவரசி சிறிது காலமாகவே இரவில் தன் அறையில் நித்திரை கொள்வதில்லை என்பதை அவரிடம் சொல்லும் தைரியம் அங்கே யாருக்குமே இருக்கவில்லை.

அருகில் நின்ற பணிப்பெண்ணைப் பார்த்து, “சென்று இளவரசியை அழைத்துவா...?” கட்டளையிட்டார்.

“அரசே...” அவள் தயங்க,

“ம்... ஆகட்டும்...” அவளை விரட்டினார்.

“வனாந்தரத்தில் இருக்கும் ஆளை அறையில் அழைத்துவரச் சொன்னால், அவளும் எப்படி அழைத்து வருவாள்?” ராஜகுருவின் வெறுப்பில் நிலைகுலைந்து போனார்.

“கயவனை கைது செய்து இழுத்துவரச் சொன்னால்... அவனை தப்புவிக்க உதவி செய்யப் போயிருக்கிறாள். என்னே ஒரு ராஜ விசுவாசம்” எள்ளி நகையாடினார்.

மகாராஜாவுக்கு என்ன சொல்வது என்றே தெரியாத குழப்பம். அந்த ரமணன் வந்தால் என்ன ஆகுமோ என்ற தடுமாற்றம். தன் மகளா அப்படி என்ற அதிர்ச்சி, அனைத்துமாக சேர வாயடைத்துப்போய் நின்றிருந்தார்.

தன்னை சம்மாளித்தவர், “இதோ... இப்பொழுதே அவளை அழைத்துவர ஆள் அனுப்புகிறேன். எங்கே வீரர்கள்...” அவர் குரல் கொடுக்கவே,

“அதற்கு அவசியமே இல்லை... இதோ இங்கே இருக்கிறாள்...” படைவீரர்கள் புடைசூழ, இளவரசியையும், ஆனந்தவல்லியையும் கைதிகளைபோல் அழைத்து வந்தான் ரமணன்.

“தந்தையே...” தன்னைப் பெற்றவரைப் பார்த்தவுடன் அவர் அருகில் ஓடினாள்.

“இங்கே என்ன நடக்கிறது? மகளே... என்ன நேர்ந்தது? ரமணா... இவளை கைதிபோல் அழைத்துவருவதன் காரணம் என்ன?” மகளை கைதிபோல் அழைத்து வந்தால் அவரால் எப்படி தாங்கிக்கொள்ள முடியும்.

“தவறு செய்துவிட்டேன்... அழைத்து வந்திருக்கக் கூடாது, இழுத்து வந்திருக்க வேண்டும்...” அவன் சொல்ல,

“என்ன...?” வெகுண்டார்.

“இவளை எனக்கு மணமுடித்துக் கொடுப்பதாகத்தானே ஏற்பாடு...?” அவன் ஆத்திரமாக கேட்க, அவனை சற்று கோபமாகவே ஏறிட்டார்.

“ரமணா... வீண் பேச்சு வேண்டாம்... அந்த தர்மனின் தலையைக் கொய்தாயா இல்லையா?” ராஜகுரு இடை புகுந்தார்.

“அதற்கான சந்தர்ப்பம் வாய்க்கவில்லை...”.

“அப்படியென்றால் அவனை கோட்டை விட்டுவிட்டாய் எனச் சொல்” வெறுப்பை காட்டினார்.

ரமணன் அமைதியாகிவிட, “மன்னா... நாளைக்கே ஒரு பூஜைக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அதில் இளவரசியும் கலந்து கொள்ளட்டும்...” அந்த பூஜையில் என்ன செய்ய வேண்டும் என்பதை தனக்குள் முடிவெடுத்துக் கொண்டார்.

அதை உணர்ந்த ஊர்மிளா தேவி, “என் புருஷர் அல்லாத வேறு புருஷரின் அருகில் நான் அமர மாட்டேன்...” அவ்வளவு நேரமாக தந்தையின் தோளில் முகம் புதைத்து அழுதுகொண்டிருந்தவள், வேகமாக நிமிர்ந்து உரைக்க, அங்கே யார் அதிகம் அதிர்ந்தது என்றே தெரியவில்லை.

“மகளே...” அரசர் அதிர்வில் குரல் கொடுக்க,

“தேவி... வார்த்தைகளில் கவனம் தேவை...” ராஜகுரு கண்கள் சிவக்க, நரம்பு புடைக்க கத்தினார்.

“தங்களின் திட்டம் ஒருபொழுதும் நிறைவேறாது...” ராஜகுருவை எதிர்த்து தைரியமாக குரல் எழுப்பினாள்.

“என்ன... என் திட்டமா? நேசம் உன் கண்களை மறைக்கிறது. அது முறை இல்லை”.

“கூடாத பந்தம் ஏற்படுவதை விட, நேசம் ஒன்றும் தவறில்லை”

“ஒருவனுக்கு மண ஒப்பந்தம் செய்த பிறகு வரும் நேசம் முறையா?”

“என் தந்தை வாக்கு கொடுத்ததாக எனக்கு நினைவில்லை...” அவள் சொல்ல,

அவ்வளவுதான்... “இந்த நேசம் நிரந்தரமில்லை...”

“இந்த ஜென்மத்தில் அவரே என் நாதன்...”

“இந்த ஜென்மம் மட்டுமல்ல... ஏழு ஜென்மங்கள் கடந்தாலும் உன் காதல் ஈடேராது. இது இந்த சாம்ராஜ்யத்தின் குருவின் சாபம்...” அவர் சொல்ல, அவரது காலில் சென்று விழுந்திருந்தாள் ஆனந்தவல்லி.

“குருநாதா... வேண்டாம் இந்த விபரீத முடிவு... இளவரசியாரை மன்னித்தருள வேண்டும்...” கெஞ்சினாள்.

அவரோ, அவளைக் கண்டுகொள்ளாமல், “குருவின் வாக்கை விட, உன் நேசம் பெரிதா? சூழ்ந்திருக்கும் ஆபத்துக்கள் கண்ணுக்குத் தெரியவில்லை. அரசே... உன் ராஜ்யத்தின் அழிவு இங்கே ஆரம்பம். என்னால் இயன்ற உதவிகளை நான் செய்ய முயன்றேன்... ஆனால்...” அவர் அங்கிருந்து அகலத் துவங்கவே, மகாராஜா அப்பொழுதுதான் கலைந்தார்.

“குருநாதா...” அவர் அழைக்கவே... அதைக் கண்டுகொள்ளாமல் அகன்றுவிட்டார்.

“என்ன மகளே இது? இப்படி ஒரு செயலைச் செய்ய எங்கனம் துணிந்தாய்?” தந்தையின் கேள்விக்கு அவள்

என்ன பதிலைச் சொல்வதாம்?

ரமணனோ, தன் கரத்தில் இருந்த அந்த மோதிரத்தைப் பார்த்தவன், தான் அடுத்து செய்ய வேண்டிய செயல் என்னவென்று திட்டமிட்டான். அதற்கு முன்னர், ராஜகுருவை சென்று சந்தித்தவன், தன் திருமணத்தைப் பற்றிக் கேட்க, அவனை அற்பனைபோல் பார்த்தான்.

“இளவரசியின் மனதைக் கவரச் சொன்னால், அவளது வெறுப்பை சம்பாதித்துவிட்டு, திருமணம் பற்றியா கேட்கிறாய்? வேண்டாம்... மாற்றானின் மனைவியை கவர நினைப்பது பாவம்...” அவனுக்கு புரிய வைக்க முயன்றார்.

ராஜகுருவுக்கு தன் அரசனின் ஆட்சியை காப்பாற்றிக் கொடுக்க வேண்டிய பொறுப்பு இருந்தது. அதற்காகவே ஒப்பந்த அடிப்படையில், ரமணனுக்கு ஊர்மிளா தேவியை திருமணம் செய்து கொடுப்பதாகச் சொன்னார். அப்படிச் செய்தால், ரமணனின் படைபலம் அவர்களுக்கு கிடைக்குமே என்று இருந்தது.

ஆனால்... தர்மனை அவர் ஏற்க மறுப்பதன் பெரிய காரணமே, இவர்களோடு போர் தொடுக்க விரும்பும் அரசாங்கத்துக்கு, அவர்கள் உறவு நாடு. அப்படி இருக்கையில், போர் என வருகையில் எந்த உதவியையும் அவர்களால் இவர்களுக்குச் செய்ய முடியாது.

அப்படி இருக்கையில், அவர் எப்படி தர்மனுக்கு ஆதரவு தெரிவிப்பார்? இப்போதைய அவரது மித மிஞ்சிய கோபம், சாபத்துக்கு காரணம் கூட, ஊர்மிளா தேவியின்மேல் இருந்த கோபம் ஒரு காரணம் என்றால், ராஜகுரு வாக்கு தவறிவிட்டார் என்ற பாவத்துக்கு தன்னை ஆளாக்கிவிட்டாளே என்ற கோபம்தான் காரணம்.

அவளது அந்த காதல்தானே அவளை அப்படி ஒரு துரோகத்தை செய்யத் தூண்டியது என்ற வேகம். அந்த நேசத்தை அடியோடு வெறுத்தார். தன் கண் முன்பே அந்த

சாம்ராஜ்யத்தின் அழிவை காண வைக்கப் போகிறாளே என்ற கோபம்.

அவர்களது அரசாங்கம் சிறியது. அண்டை நாட்டு அரசன் அவர்களை கப்பம் கட்டச் சொல்லவே, முடியாது என இவர்கள் மறுக்கவே, போருக்கு அறைகூவல் விடுத்துவிட்டான். அதை தடுக்கத்தான் இப்படியான ஏற்பாடுகளையே செய்து கொண்டிருக்கிறார்கள்.

ரமணனின் அரசும் சற்று பெரியதே... அந்த அண்டை நாட்டு அரசனோடு ஏற்கனவே போரிட்டு வெற்றியும் கண்டிருந்தார்கள். ஊர்மிளாவின் அரசாங்கத்தில், இங்கே இளவரசர்கள் இல்லை என்பதால், இந்த சிறு ராஜாங்கம் அவர்களுக்குக் கிடைத்தால் படைபலம், இட பலம்... ராஜாங்க பலம் அதிகரிக்கும் என்பதால், அவர்கள் சம்மதம் சொன்னார்கள்.

“குருவே... என் மனதில் ஆசையை விதைத்துவிட்டு... தாங்கள் இவ்வாறு சொல்வது முறையா?” அவரிடம் கேட்டான்.

“காதலிக்கும் மனைவிக்கும் வித்தியாசம் இருக்கிறது ரமணா. உன் தந்தையை நானே நேரில் வந்து சந்தித்து விளக்கம் கொடுக்கிறேன். நீ இப்பொழுதே உன் நாட்டுக்குச் செல்லலாம்...” அவர் சொல்ல, அவ்வளவு சுலபமாக அவனால் தன் தோல்வியை ஒத்துக்கொள்ள முடியவில்லை.

அந்த மோதிரத்தை வைத்து, தர்மனை தீர்த்துக் கட்ட திட்டமிடத் துவங்கினான். அதே போல்... மன்னனுக்கு தன் மகளது செய்கையில் கொஞ்சம் கூட உடன்பாடு இல்லை என்பதால், அவளை நாடுகடத்த உத்தரவிட்டார்.

இளவரசி கண்ணீருக்குப் மகளாக உருமாற, ஆனந்தவல்லி தோழியின் நிலை கண்டு துடித்துப் போனாள். தன்னால் எதையாவது செய்ய முடியுமா எனப் பார்க்க வேண்டி, தன்னவனைத் தேடிச் சென்றாள். அந்த இரவில் தன்னைத்

தேடி வந்த ஆனந்தவல்லியைப் பார்த்தவனுக்கு விஷயம் இன்னதென உடனே புரிந்தது.

அந்த நாட்டின் படைத்தளபதிக்கு நாட்டு நிலை தெரியாதா என்ன?

“தவறு செய்துவிட்டாய் ஆனந்தவல்லி… நீ இளவரசியின் செய்கைக்கு துணை போயிருக்கக் கூடாது” அவளிடம் சொன்னான்.

“ஒரு செயலை செய்யும் முன்பு ஆராயலாம்… செய்த பிறகு ஆராய்வது பிசகு. எனக்கு தங்களால் உதவ முடியுமா முடியாதா?”.

“என் நெஞ்சில் தரித்திருக்கும் வீரமும், கையில் இருக்கும் உடை வாளும் என் ராஜ்யத்துக்கு மட்டுமே அர்ப்பணம் செய்திருக்கிறேன். அதை மீறி என்னால் எதையும் செய்ய இயலாது…” அவன் சொல்லிவிட, தோல்வியியுற்று திரும்பினாள்.

அவனுக்கு நன்றாகவே தெரியும், இன்னும் சிறிது காலத்தில் அவர்கள் நாட்டுக்கு பெரும் போர் சூழப் போகிறது என்று… அந்த நேரத்தில் அவனது வீரம் அவர்களுக்குத் தேவை. அதை விடுத்து, இளவரசியின் பாதுகாப்புக்குச் சென்றால், அவனது நாட்டுக்கு யார் காவல்? எனவே இதயத்தை இரும்பாக்கிக் கொண்டான்.

மறுநாள் காலையே இளவரசியின் பயணம் துவங்கவே, ஒற்றர்களை தர்மனிடம் விரைந்து அனுப்பி வைத்தாள். அதே நேரம், அவள் அனுப்பிய ஒற்றனை மடக்கிய ரமணன், அவனை வீழ்த்தி கட்டிப் போட்டுவிட்டு, முத்திரை மோதிரத்தை கொடுத்து அனுப்பி, தர்மனை வேறு வழியில் வரச் செய்தான்.

இளவரசியின் பயணம் சில மாதங்கள் ஆகும் என்பதால், ரமணன் அனுப்பிய ஆள், அதற்குள்ளாகவே தர்மனை சந்தித்துவிட்டு, அவனிடமிருந்து பதில் பெற்று

திரும்பினான். அவளை அந்த இடத்தில் சந்திப்பதாக அவன் பதில் அனுப்பி இருக்கவே, இளவரசியின் பயணமும் அங்கே செல்ல துவங்கியது.

அங்கே இருவரையும் வரவேற்க வன்மத்தோடு காத்திருந்தான் ரமணன்.

***

# நிழல் – 19

ரமணன் எப்பொழுது இளவரசியின் அறையில் மற்றொரு புருஷனைப் பார்த்தானோ அப்பொழுதே அது யார் என அறிந்துகொள்ள வேண்டி செயல்படத் துவங்கிவிட்டான். அவனது ஒற்றர் படையினர் அதற்கான வேலையில் இறங்கிவிட்டார்கள்.

அவர்கள் மூலம் அறிந்த விஷயங்கள் எதுவும் அவன் ரசிக்கும்படி இருக்கவில்லை. எத்தனையோ வழிகளில் அவர்களை கையும் மெய்யுமாக பிடிக்க முயல, தர்மனின் மேய்க்காப்பாளனின் அயராத உழைப்பாலும், தர்மனின் புத்தி சாதுர்யத்தாலும் அவர்களை நெருங்கவே முடியவில்லை.

சில நேரங்களில் ஒற்றர்களின் கண்ணில் கூட மண்ணைத் தூவிவிட்டு, மாறு வேடத்தில் இளவரசியை அழைத்துச் செல்லும் தர்மனின் செய்கை, எதிரியாக இருந்தாலும் அதை அவனால் வியக்காமல் இருக்க முடியவில்லை.

இறுதியாக அவனை நெருங்கவே முடியாதோ என்னும் நேரத்தில்தான், ராஜகுருவின் உதவியால் அவனை வெட்டி வீழ்த்தும் வாய்ப்பு கிடைக்கவே, தன்னை அடித்து மயக்கமுறச் செய்த அவனை பழிவாங்க கிடைத்த சந்தர்ப்பத்தை சரியாக பயன்படுத்த நினைத்தான்.

அத்தோடு தன்னை விடுத்து, அவன்மேல் மையல் கொள்ளும் ஊர்மிளா தேவியின் செய்கை, அவனை கோபம் கொள்ளச் செய்தது. அன்று இரவில் அவர்கள் இருக்கும் இடத்தை அறிந்த ரமணன், தன் படை வீரர்களோடு அங்கே செல்ல, அதற்குள்ளாகவே தர்மன் அங்கிருந்து கிளம்பி விட்டிருந்தான்.

ஊர்மிளா தனியாக மாட்டுவண்டியில் மாறுவேடத்தில் பயணம் செய்வதை அறிந்தவன், தன் வீரர்களை கொள்ளைக்காரர்களைப்போல் வேடம் புனைய வைத்து,

அவர்கள் வண்டியை மடக்கி, அவளிடமிருந்த ஆபரணங்களை கொள்ளையிடச் சொன்னவன், அந்த மோதிரத்தை பிரத்தியேகமாக சொல்லி அனுப்பினான்.

அப்படி அவனது குறுக்குப் புத்தியால் பெற்ற அந்த மோதிரம், அவனுக்கு செய்யும் பேருதவியை எண்ணிக் கொண்டு அமர்ந்திருந்தான். அவன் காத்திருக்கவே, தர்மன் வருவதற்கு முன்பாகவே அந்த இடம் வந்து சேர்ந்தாள் ஊர்மிளா தேவி.

நேரம் ஜாமத்தை தொட்டிருக்கவே, அங்கே கூடாரங்கள் அமைத்து ஊர்மிளா தேவி தங்க, ‘எப்பொழுது தன் மன்னவன் வருவான்? என காத்துக் கொண்டிருந்தாள்.

தான் அனுப்பிய சேதியை நம்பி, தனக்கு பதில் அளித்த அவனது செய்கையை அவளால் அப்பொழுதும் நம்ப முடியவில்லை. அவனுக்கு சேதி அனுப்புகையில், அவனது மோதிரம் இல்லாமல் தன் செய்தியை அவன் நம்புவானா என்பதே அவளுக்கு பெரும் கேள்வியாக இருந்தது.

ஆனால்... அவனது கையெழுத்தில் இருந்த அந்த பட்டுத் துணியை தன் நெஞ்சோடு அணைத்துக் கொண்டாள். அவள் நாட்டை விட்டுச் செல்வதால், பெரிதாக பாதுகாப்பு வீரர்கள் யாரும் இருக்கவில்லை. சொல்லப்போனால், நாடு கடத்தும் கைதியை ஊருக்கு வெளியே விட்டுச் செல்வதைப்போல, அவளையும் விட்டுச் சென்றார்கள்.

ஆனாலும், அவளது தோழியும், மந்திரியின் மகளுமான, ஆனந்தவல்லியின் உதவியாலும், அவளது உற்றவன் படைத்தளபதியின் பேருதவியாலும் மட்டுமே இப்பொழுது அவளுக்கு கிடைத்திருக்கும் இந்த வசதிகள் சாத்தியமானது.

ஆனந்தவல்லியால் அவளுடன் வர முடியாமல் போனாலும், அவளுக்காக இறைவனிடம் அயராது வேண்டிக் கொண்டிருந்தாள். ஆனந்தவல்லியை அரண்மனைக் காவலில் வைத்தார்கள். அரண்மனையை விட்டு அவளால்

வேறு எங்கும் செல்ல முடியவில்லை. சாபங்கள் என்பது அவ்வளவு சுலபமாக போய்விடக் கூடியது என அவள் நம்பவில்லை.

தன்னவனைத் தேடிச் செல்லும் ஊர்மிளாவின் பயணம், நல்லபடியாக முடிய வேண்டும் என்பது மட்டுமே அவளது வேண்டுதலாக இருந்தது. அவள் அங்கே சேர்ந்து, அவள் கரத்தால் ஓலை வரும் வரைக்கும், தன்னால் நிம்மதியாக இருக்க முடியாது என்பது அவளுக்கு தெரிந்து போனது.

அங்கிருந்து செல்லும் முன்னர், தன் கரத்தை பற்றிக்கொண்டு நின்ற ஊர்மிளாவின் செய்கை, இதழ்கள் பேசிக்கொள்ளவில்லை என்றாலும், தோழிகளின் மனங்கள் பேசிக்கொண்டன.

இளவரசியின் தனிமையை உணர்ந்த ரமணன், இரவில் அவளது கூடாரத்துக்குள் செல்லவே, அதிர்ந்து போனாள்.

“நீயா…?” அவனிடம் கேட்க,

“வேறு யாரை எதிர்பார்த்தாய் இளவரசி? தர்மனையா?” அவன் கோணல் சிரிப்பில் கேட்க, அவனை நிதானமாக ஏறிட்டாள்.

தன் இடைக்கச்சைக்குள் கை நுழைத்து, தன் குறுவாளை பற்றிக் கொண்டாள். தன்னை அவன் நெருங்கும் நேரம், அதை அவன் நெஞ்சில் இறக்க தயாராய் இருந்தாள்.

அதைப் பார்த்தவன், வெறிச்சிரிப்பு சிரித்தான். “இங்கே சுற்றிலும் இருப்பவர்கள் எனது வீரர்கள். உன் காவலுக்கு வந்தவர்களை எப்பொழுதோ பதம் பார்த்துவிட்டோம். இப்பொழுது நீ எனக்கு அடிபணிவதைத் தவிர வேறு வழி இல்லை…” கொக்கரித்தான்.

“என் உடலில் உயிர் இருக்கும் வரைக்கும், என் நுனி விரலைக் கூட உன்னைத் தீண்ட நான் அனுமதிக்க

மாட்டேன்…” அவள் உரைக்க, அவனோ அதைக் கண்டுகொள்ளாமல் அவளை நெருங்கினான்.

“அதையும் பார்த்துவிடலாம்… உன் அழகு என்னை பித்தம் கொள்ளச் செய்கிறது. இன்று இரவு நீ எனக்குச் சொந்தமாவாய்” அவளை நெருங்க முயன்றான்.

“இந்த ஜென்மம் மட்டுமல்ல… எத்தனை ஜென்மங்கள் எடுத்தாலும் அது நடந்தேறாது”

“அதையும் பார்த்து விடுவோம்…” முழு போதையில் அவளை நெருங்கினான். அவள் தன் குறுவாளை கரத்தில் ஏந்தி, அதை அவனை நோக்கி பாய்ச்ச முயன்றாள். அதை அநாயசமாகத் தடுத்தவன், அவளை கட்டாயப்படுத்த முயல,

அதே நேரம், “இளவரசே… அபாயம்…” ஒற்றன் குரல்கொடுக்கவே, பெரும் கோபத்தோடு வெளியே வந்தான்.

“என்ன அபாயம்?” அவன் கேட்கவே,

“தர்மனின் வரவு இன்னும் ஒரு நாழிகைக்குள் இருக்கும்… தன் புரவியில் விரைந்து வருகிறான்…” அவன் சொல்ல, இளவரசி ஊர்மிளா தேவியின் நகைப்பொலி அவனது முதுகுக்குப் பின்னால் கேட்டது.

அதைக் கேட்டவனின் கோபம் பலமடங்காக, “அனைத்துக் கூடாரங்களையும் நெருப்புக்கிரையாக்குங்கள். இளவரசியை உள்ளே கட்டி தூக்கிப் போடுங்கள். எனக்கு கிடைக்காத இவள், அவனுக்கும் கிடைக்கக் கூடாது…” வேகமாக உத்தரவு பிறப்பிக்க, அடுத்த நொடியில் அனைத்தும் நடந்தேறத் துவங்கியது.

இளவரசியை எங்கே கவர்ந்து சென்றாலும், தர்மன் அவளைக் காக்க அங்கே வந்து சேர்வான் என்று ரமணனுக்குத் தெரியும். எனவே, அவளை அவனுக்கும்

விட்டுக் கொடுக்க மனமின்றி அழிக்கவே முடிவு செய்துவிட்டான்.

இளவரசியும் அவனது முடிவைக் கேட்டு கொஞ்சம் கூட கலங்கவில்லை. அவன் கரங்களால் கலங்கப்படுவதற்கு, மரணம் எவ்வளவோ மேலானது என்று அவளுக்குத் தோன்றியது.

இப்பொழுது தர்மனுடன் அவனது நாட்டுக்கே சென்றாலும், நாடுகடத்தப்பட்ட ஒரு இளவரசியை அவர்கள் எப்படி பார்ப்பார்கள் என அவளுக்குத் தெரியாதா? தன்னை தர்மன் மணந்து கொண்டாலும், அவனால் அரியணை ஏற முடியாது.

தன்னால், தன்னவனுக்கு இப்படி ஒரு அவமானம் வர வேண்டுமா என எண்ணினாள். சொல்லப்போனால் இறுதி முறையாக அவன் முகம் காண வேண்டியே அவள் விரும்பினாள். எனவே மரணத்தை மனமுவந்து ஏற்றுக் கொண்டாள்.

நெருப்பின் நாக்குகள் அவளைத் தீண்டியபோழுது, “என் காதல் உண்மையென்றால், எத்தனை ஜென்மம் கடந்தாலும், நான் உங்களை வந்து அடைவேன். இது சத்தியம்...” அவளது சபதம் காற்றில் கலந்து, அங்கே வந்த தர்மனை வந்தடைந்தது.

இளவரசியை தீக்கிரையாக்கிய ரமணன், தன் நாட்டுக்கு வந்து சேர, அவனைப் பார்த்த ராஜகுரு, “பெரும் பிழை செய்துவிட்டாய் ரமணா... சாபம் பெற்றிருப்பவர்களை துன்புறுத்தினால், அந்த பாவம் உன்னையும் சேரும் என்பதை ஏன் உணராமல் போனாய்?

“அன்றே நான் உரைத்தேனே... மாற்றான் மனைவியை கவர நினைப்பது பெரும் பாவம் என்று சொல்லியும், அதை செவிமடுக்காமல் போனாயே...” அவனது அழிவுகள் அவர் கண்ணில் நிழலாட, அவனிடம் நேருக்குநேர் உரைக்க, சற்று திடுக்கிட்டுப் போனான்.

ரமணனின் நாட்டில், ஊர்மிளாவின் விஷயமாக பேச வந்த ராஜகுரு, அங்குதான் அவனிடம் அதை உரைத்தார். அவரது முகத்தில் பெரும் கவலை அப்பிக் கிடந்தது. அந்த அமாவாசை இரவை சில நொடிகள் இமைக்காமல் பாத்திருந்தார்.

ஒரு அமாவாசையில் துவங்கிய அந்த நிகழ்வுகள், மறு அமாவாசையில் உச்சத்தை எட்டிய விதம், துயரமாக மூச்சு விட்டார்.

“குருவே... இதற்கு ஏதும் பிராயச்சித்தம் இல்லையா?” அவரிடம் கேட்டான்.

“நீ செய்த தவறால், அவர்கள் எடுக்கும் அத்தனை பிறவியும் நீயும் எடுப்பாய். அந்த பிறவிகளில், நீ அவர்களை துன்புறுத்தாமல் போனால் உனக்கு நல்லது... இல்லையேல்...” அவர் நிறுத்த, அவன் முகத்தில் பெரும் கலவரம்.

“தங்களது சாபம் அவர்களை சேர விடாதே குருவே...” அவன் கேட்க,

“இளவரசி, சபதம் ஏற்றுவிட்டு மறைந்திருக்கிறாள்... அவளுக்கு எந்த விதத்திலாவது உதவிகள் கிடைத்தே தீரும்...” உரைத்தவர் அங்கிருந்து செல்ல, திகைத்து நின்றுவிட்டான்.

அதே நேரம், தோழியின் நிலையை கேள்விப்பட்ட ஆனந்தவல்லி, ராஜகுருவை தேடிச் சென்றாள். அவரது சாபமே, தோழியின் இந்த நிலைக்கு காரணம் எனச் சொல்லி அவரிடம் சண்டை போட்டவள், அந்த சாபத்துக்கு விமோச்சனம் வேண்டி அவர் காலடியில் விழுந்தாள்.

சில நொடிகள் விழி மூடி, தியானித்தவர், “சில வினைப் பயன்களை அவர்கள் அனுபவித்தே தீர வேண்டும். என் சாபம் என்பது அதில் ஒரு அங்கமே. ஏழு பிறப்புக்குள்

அவர்கள் இருவரும் இணையும் வாய்ப்பு இல்லை என்றாலும்,

“ஏழாவது பிறப்பில் அவர்கள் இணைய வாய்ப்பு உண்டு. ஆனால், எந்த பிறவியிலும் அவர்களுக்கு ஒருவர் மற்றவரைத் தெரியாது. ஆனால், தர்மன் தேவியின் கழுத்தில் மாலை சூட்டும் நேரம், அவர்களுக்கு முன்ஜென்ம பந்தம் நினைவுக்கு வரும்…” அவர் சொல்ல, கண்ணீரோடு கேட்டிருந்தாள்.

“ஏழாவது பிறவியில் அவர்கள் சேரவில்லை என்றால்?” அவளது அந்த கேள்விக்கு அவர் பதில் சொல்ல தயாராக இருக்கவில்லை. அத்தனை பிறவியிலும் சேரமுடியவில்லை என்றால், துர் ஆத்மாவாக அலைய வேண்டி இருக்கும் என்பதை அவளிடம் சொல்ல அவர் விரும்பவில்லை.

அதை விடுத்தவள், “அவர்கள் ஒருவருக்கு ஒருவர் அறிந்துகொள்ளவில்லை என்றால், அது எங்கனம் நேரும்?” அவளது கேள்விக்கு, அவளது பக்கம் தன் கரத்தை சுட்டிக் காட்டி, “அவர்கள் காதலை உயிரைக் கொடுத்தாவது சேர்த்து வைப்பதாக நீதானே வாக்கு கொடுத்தாய்” அவளிடம் உரைக்க, வாயடைத்துப் போனாள்.

கூடவே, “அந்த ரமணனின் தொல்லை இராது தானே…” அவரிடம் கேட்க,

“இடையில் ரமணனின் குறுக்கீடு இல்லையென்றால் எப்படி? தேவியை அடைய வேண்டும் என்ற வெறியில், பெரும் பிளை செய்து, அவனது வினைப்பயனை அவனே எழுதிக் கொண்டான். அவனது கோபமே அவனுக்கு சத்ரு…” அவர் சொல்ல, அது அவளுக்குப் புரியவில்லை.

“இரண்டு மூன்று சாம்ராஜ்யங்களின் பேரழிவுக்கு காரணமாகப் போகும் தேவியின் நேசம், அவளுக்கு உதவிய உன்னையும் விட்டுவைக்கப் போவதில்லை. அவளுக்கு உதவி செய்த நீ, இனி வரும் ஜென்மங்களில்

உன் பெற்றவர்களின் ஆதரவு இன்றிப்போவாய்…” அவர் சொல்ல, அழுகை மட்டுமே அவளுக்குத் துணை ஆனது.

கூடவே, “ஒரு அமாவாசை இரவில் இந்த உண்மைகள் அனைத்தும் உனக்குத் தெரியவந்தால், அன்றே இறுதி நாள்… உங்கள் அனைவரின் ஏழாவது ஜென்மம் பூர்த்தியாகும் நாள் எனக் கொள்க. அதன் பிறகு, நடந்தேற வேண்டியவை அனைத்தும் சில நாழிகைக்குள் முடிந்தாக வேண்டும்.

“பிறகு எதிரி வென்றுவிட்டால்…” உரைத்தவர், அவளுக்கு ஆசி கூறி அனுப்பிவிட்டார்.

தொடர்ந்த நாட்களில் தர்மன், ரமணன், ஊர்மிளாவின் தேசம் என அனைத்திற்கும் எதிராக போர் மூள, அதில் ஈடுபட்ட அமிழ்தனும் கூட வீர மரணத்தை தழுவ வேண்டி வந்தது.

போர் அனைத்திற்கும் ஒரு முடிவாக… ஜென்மங்கள் ஒவ்வொன்றும் கடக்கத் துவங்கியது. இன்றைய நினைவுக்கு வந்த ஆனந்தியின் நினைவுகள் மெதுவாக மீள, பட்டென கண் திறந்தாள்.

***

# நிழல் – 20

படுக்கையில் எழுந்து அமர்ந்த ஆனந்திக்கு நடந்து முடிந்த நிகழ்வுகள் அனைத்தும் நினைவுக்கு வர, படுக்கையில் எழுந்து அமர்ந்தவள், மொத்தமாக வியர்த்துப் போயிருந்த தன் முகத்தை கைகளால் அழுத்தமாக துடைத்துக் கொண்டாள்.

பட்டென தன் படுக்கையைப் பார்க்க, தன் அருகே இருந்திருக்க வேண்டிய அரசி இன்னுமே வரவில்லை என்பது புரிந்து போனது. அவளுக்கு அனைத்தும் நினைவுக்கு வந்த பிறகு, சில நாழிகைகள் மட்டுமே அவளுக்கு நேரம் கிடைக்கும் என்பது புரிய, தான் இப்பொழுது என்ன செய்வது என்று அவளுக்குப் புரியவே இல்லை.

வேகமாக நேரம் பார்க்க, நள்ளிரவைத் தாண்டி சில மணி நேரங்கள் கடந்திருந்தது.

‘இவ்வளவு நேரமா வராமல் இருக்கிறாள்?’ முதலில் அரசி எங்கே இருக்கிறாள் என்பது தெரிய வேண்டும் என்பதால், தன் இரவு உடையை வேகமாக மாற்றியவள், மூன்றாம் மாடியில் இருந்து இறங்கி, கீழே கேம்ப் ஃபயர் நடக்கும் இடத்துக்கு தடதடவென ஓடினாள்.

அவள் அங்கே சென்று பார்க்கையில் கேம்ப் ஃபயர் கூட மொத்தமாக அணைந்து போயிருக்க, அங்கே மாணவிகள் யாரும் இருக்கும் அறிகுறியே இருக்கவில்லை. அவ்வளவுதான்... மொத்தமாக பதறிப் போனாள்.

‘ஒரு வேளை, நான் உறங்கிவிட்டேன் என்பதால், என்னை தொல்லை செய்ய விரும்பாமல் வேறு தோழிகளின் அறையில் படுத்துவிட்டாளோ?’ எண்ணியவள், தன் அறைக்குச் சென்று தன் அலைபேசியை எடுத்துப் பார்த்தாள்.

அப்படி அவள் எதையாவது செய்வதாக இருந்தால், கண்டிப்பாக தனக்கு செய்தி அனுப்பியிருப்பாள் என எண்ணினாள். அவள் அந்த நள்ளிரவில் ஹோட்டல் அறையில் இருந்து வெளியேறி, பரபரப்பாக காரிடாரில் உலாவுவதை அந்த ஹோட்டலின் உரிமையாளர் அமுதன் தனது அலைபேசியில் பார்த்துக் கொண்டிருந்தான்.

வழக்கமாக இரவில் வீட்டுக்குச் சென்று விடும் அவன், அன்று அவனது உள்ளுணர்வு அங்கே இருக்க உந்தவே, தனக்கான அறையில் தங்கிவிட்டான்.

எப்பொழுதுமே அவன் இரவில் தண்ணீர் குடிக்க எழுந்தால் கூட, தன் அலைபேசியின் வழியாக ஹோட்டல் நிகழ்வுகளை கண்காணிப்பது வழக்கம் என்பதால், அன்றும் எதேச்சையாக பார்க்க, நள்ளிரவில் ஒரு அறையில் இருந்து வெளியேறிய இளம்பெண், காரிடாரில் விரைவதைக் கண்டான்.

அவள் மின்தூக்கியில் நுழைந்து, கீழே வந்து, கேம்ப் ஃபயர் நடந்த இடத்தை பார்த்ததையும், பெரும் அதிர்ச்சியை முகத்தில் தாங்கியவாறு மீண்டுமாக தன் அறைக்கு திரும்புவதையும் பார்த்தவன், அங்கே எதுவோ சரியில்லை என்பதை உணர்ந்து கொண்டான்.

ஹோட்டல் காரிடார்களில் மெல்லிய இரவு விளக்கு மட்டுமே ஒளிர்ந்த காரணத்தால், அவளது முகத்தை அவனால் தெளிவாக காண முடியவில்லை. அவளது வேகம் அசாத்தியமாக இருக்கவே, தன்னால் அவளுக்கு உதவ முடிந்தால் நன்றாக இருக்கும் என்பதால், தன் அறையில் இருந்து வேகமாக வெளியே வந்தான்.

ஆனந்தியோ, தன் அலைபேசியில் தகவல் இல்லை என்பதை அறிந்த உடனேயே, வேகமாக தன் அறையில் இருந்து வெளியே வந்தவள், அடுத்த அறையில் தங்கியிருந்த தங்கள் பேராசிரியர்களிடம் தகவல் சொல்ல முயன்றாள்.

ஒரு வேளை அரசி மற்ற எந்த அறையிலாவது இருந்துவிட்டால், வீணாக அவர்களை கலவரம் செய்ததுபோல் ஆகிவிடுமே என்பதால், தான் மட்டுமாக முதலில் விசாரிப்பது என முடிவெடுத்தாள்.

அவள் அறையை விட்டு வெளியே வந்து சிந்தித்துக் கொண்டிருந்த வேளையில், தன் அறையிலிருந்து வந்த அமுதன் அவளை நெருங்கினான். அவளை நெருங்கியவனது பார்வையில் பெரும் திகைப்பு வெளிப்பட்டது. அதே நேரம், அந்த நேரத்தில் தன்னை ஒரு ஆடவன் நெருங்கவே அவளது கவனமும் அதிகரித்தது.

வேகமாக அவனை நிமிர்ந்து பார்த்தவளின் கண்களில் அவனுக்கு குறையாத அதிர்ச்சியும், திகைப்பும் இருக்க, இதழ்களோ, “அமிழ்தன்...” நம்பமுடியாத தன்மையில் வார்த்தைகள் வெளிப்பட்டது.

அவள் தன்னை அமிழ்தன் என அழைத்தது அவனுக்கு அமுதன் என காதில் விழ, தன்பெயர் அவளுக்கு எப்படித் தெரியும் என குழம்பினான். அதே நேரம், அவளோ, வட இந்தியாவுக்கு சுற்றுலா சென்று, விபத்தில் சிக்கி காணாமல் போன தனது அத்தையின் உருவத்தை ஒத்திருக்கவே அசையாமல் அவளைப் பார்த்திருந்தான்.

அவளோ, “அமிழ்தன்... அரசியைக் காணோம்... எனக்கு என்னவோ ரொம்ப பயமா இருக்கு. உடனே அவ எங்கே இருக்கான்னு கண்டுபிடிச்சாகணும். இல்லன்னா பெரிய பிரச்சனை ஆயிடும்...” அவன் கரத்தை கெட்டியாக பற்றிக் கொண்டாள்.

தன் அதிர்வில் இருந்தே முழுதாக மீள முடியாதவனுக்கு, அவளது அழைப்பும், செய்கையும் சிறு குழப்பத்தை அளித்தாலும், சிறு வயதில் காணாமல் போன தன் அத்தை மகள் கிடைத்துவிட்டாள் என்ற சந்தோஷத்தில் அவையெல்லாம் பெரிதாகத் தெரியவே இல்லை.

அதைவிட, சிறு வயதில் காணாமல் போய்விட்ட அவளிடம், தன்னைப்பற்றி சொல்லி, அவள் காணாமல் போய்விட்ட கதையைச் சொல்லி, தன்னை எப்படி அறிமுகம் செய்வது என்ற கவலைக்கெல்லாம் வழியே இல்லாமல், அவளாகவே தன்னை நெருங்கி பேச சந்தோஷமும் நிம்மதியும் ஒருங்கே அடைந்தான்.

“ஆதி… பேனிக் ஆகாதே… உன் ப்ரண்ட் இங்கே எங்கேயாவதுதான் இருப்பா” அவளை அவன் ஆதி என அழைக்கக் காரணமே, காணாமல் போன அவனது அத்தை மகளின் பெயர் ஆதிசங்கரி. எனவேதான் அவ்வாறு அழைத்தான்.

“இல்ல… எனக்கு ரொம்ப பயமா இருக்கு… வாங்க தேடலாம்…” அவன் கரம் பற்றி இழுத்தாள்.

இந்த நள்ளிரவில், ஒவ்வொரு அறையாக அவள் கதவைத் தட்டி விசாரிக்கையில், அவளுடன் அவன் இருந்தால், மற்றவர்களின் சந்தேகத்துக்கு ஆளாகவேண்டும் என்ற விஷயம் ஒரு பக்கம் இருந்தாலும், தன் அத்தை மகளை அப்படியெல்லாம் தனியாக அவனால் விட்டுவிட முடியுமா என்ன?

எனவே அவளுக்கு உதவ முடிவு செய்தவன், “ஆதி… இப்படி முகத்தை வச்சுகிட்டு கேட்டால் அவங்களே பயந்துடுவாங்க. அது இப்போதைக்கு நல்லது இல்லை. சோ… கொஞ்சம் நிதானமா… அவ இங்கே வந்தாளான்னு மட்டும் கேள்… நான் இங்கேயே நிக்கறேன்” அந்த மூன்றாம் தளத்தில் இருந்த பதினைந்து அறைகளும் அவர்களது கல்லூரிக்காக ஒதுக்கப்பட்டிருந்ததால் சற்று ஒதுங்கி நின்றான்.

“சரி… நீங்க எங்கேயும் போகக் கூடாது… போக மாட்டீங்க தானே?” தோழியின் காதலுக்காக, அவள் நிலைக்காக கலங்கினாலும், தன்னவனை பிரிந்துவிடுவோமோ என்ற கலக்கம் அவளுக்கு இருக்கவே செய்தது.

“உன்னை விட்டு நான் போவதா? நீயே போக நினைத்தாலும் அது உன்னால் முடியாது” அவன் அழுத்திச் சொல்லவே, அங்கிருந்து அருகில் இருந்த அறைக்குச் சென்றாள்.

அதென்னவோ அவன் வந்துவிட்டான் என்ற தைரியத்தில்… கொஞ்சம் படபடப்பு குறைந்திருந்தது. முடிந்த அளவுக்கு தன் பதட்டத்தை மறைத்துக் கொண்டு, சற்று நிதானமாகவே அனைத்து அறைகளிலும் இருந்த தோழிகளிடம் விசாரிக்க, அங்கே எல்லாம் எதிர்மறையான பதிலே கிடைத்தது.

மொத்தமாக தளர்ந்து போனவள், “அமிழ்தன்… அரசிக்கு ஏதோ ஆபத்து. இதற்கு ரமணன் மட்டுமே காரணமாக இருக்க முடியும். வாங்க… அவளைத் தேடுவோம்…” அவன் கரத்தை கெட்டியாக பற்றிக்கொண்டு விரைந்தாள்.

அவர்கள் கீழே வந்த அந்த நேரம், ஒரு கார் வந்து நிற்க, அதில் இருந்து இறங்கினான் தர்மன். அவளை அங்கே பார்த்த அவன், “அரசி எங்கே…?” அவளிடம் கேட்க,

“அவளைக் காணோம்…?” அவள் சொல்லவே, ஒரு நொடி சோர்ந்தவன், சட்டென தெளிந்தான்.

“அவள் எங்கேயும் போயிருக்க மாட்டாள்… அவளுக்கு எதுவும் ஆகாது. எனக்கு நம்பிக்கை இருக்கு…” அவன் சொல்ல, இரு ஆண்களையும் அறிமுகம் செய்து வைத்தாள். தர்மனுக்கு இன்னுமே அடிபட்ட கட்டுக்களும், தீக் காயங்களும் கொஞ்சம் அப்படியே இருக்க, அவன் எந்த நிலையில் வந்திருக்கிறான் என்பதை அமுதன்(அமிழ்தன்) உணர்ந்து கொண்டான்.

“உங்களுக்கு எல்லாம் ஞாபகம் வந்துடுச்சா?” அவள் தர்மனிடம் கேட்க, வேகமாக தலை அசைத்தான். கூடவே அவன் கண்கள் வெகுவாக கலங்க, “அவ கடைசியா எங்கே இருந்தாள்?” அவளிடம் கேட்டான்.

அமுதனுக்கு (அமிழ்தன்) எதுவும் புரியவில்லை என்றாலும், அரசியை காணவில்லை, அவளைத் தேடி இந்த நிலையில் அவன் வந்திருக்கிறான் என்பது வரைக்கும் புரிகிறது தானே, எனவே உடனடியாக அவர்களுக்கு உதவ முடிவெடுத்தான்.

கேம்ப் ஃபயர் நடந்த இடத்துக்குச் சென்றவர்கள், அந்த புல்வெளிக்கு அருகே காவலுக்கு உலாவிக் கொண்டிருந்த செக்கியூரிட்டியை நோக்கிச் சென்று, “அண்ணே… இங்கே இருந்தவங்க எல்லாம் எப்போ போனாங்க?” படபடப்பாய் கேட்டாள்.

அவள் முகத்தில் இருந்த கலவரமும், அவள் கேட்ட விதமும், அதைவிட அமுதனே அங்கே இருக்கவே, அதுவே அவரைசற்று பரபரப்புக்குள்ளாக்க, “அவங்க போய் ஒருமணி நேரத்துக்கும் மேலே ஆகுதே” அவர் சொல்ல, ஆனந்தியின் கண்களில் கண்ணீர் நிறைந்துவிட்டது.

ஊட்டியின் குளிரையும் மீறி, மெல்லிய வியர்வை அரும்ப, “அமிழ்தன்… ஏதாவது செய்ங்க…” அவனை உலுக்கினாள்.

அதே நேரம்… அங்கே வந்த மற்றுமொரு செக்கியூரிட்டி, “என்னம்மா…? யாரைத் தேடுற? உங்க கூட வந்த ஒரு பொண்ணு, நான் எவ்வளவு சொல்லியும் கேக்காமல், அந்தப் பக்கமா காட்டுக்குள் போச்சு… அது மட்டும் இல்லை… அங்கே ஒரு ஆளும் நிக்கவே…” அவர் சொல்ல, அவள் அடிமுதல் நுனிவரை பதறியது.

“ஹையோ… அவன் ரமணன்…” அவள் கதற, தர்மனும் வெறியானான்.

அமுதனின் (அமிழ்தனின்) கரத்தை கெட்டியாக பற்றிக் கொண்டவள், அவன் காட்டிய திசையில் ஓடத் துவங்கி இருந்தாள்.

அவள் அவ்வாறு செய்யவே, “தர்மா… நீங்க என் அறையில் ரெஸ்ட் எடுங்க… நாங்க அவளைத் தேடி கண்டு பிடிச்சுட்டு

வர்றோம்” அவன் சொல்ல, தர்மனும், ஆனந்தவல்லியும் ஒருங்கே மறுத்தார்கள்.

“இல்ல... அவர் இப்போ அங்கே இருந்தே ஆகணும்...” ஆனந்தி வேகமாக உரைக்க, அதற்குமேல் அமுதன் மறுக்கவில்லை.

செக்கியூரிட்டி ஆட்களையும் உடன் அழைத்துக் கொண்டு, கையில் இருந்த செல்போன் டார்ச், செக்கியூரிட்டி ஆட்களின் டார்ச் உதவியால், அரசி சென்றதாகச் சொன்ன காட்டுப் பகுதிக்குள் இறங்கினார்கள்.

“அரசி... அரசி...” சற்று தூரம் சென்ற உடனேயே ஆனந்தி குரல் கொடுக்கவே, அனைவரும் அரசியைத் தேடி உள்ளே பயணப்பட்டார்கள்.

“சார்... இந்த காட்டுக்குள் புதைகுழி கூட இருக்குன்னு கேள்விப் பட்டிருக்கிறேன்... பாரஸ்ட் ஆபீசர்ஸ் எல்லாம் உள்ளேயே போகக் கூடாதுன்னு சொல்லியிருக்காங்க” ஒரு செக்கியூரிட்டி சொல்ல, அதையெல்லாம் ஆனந்தி கணக்கிலேயே கொள்ளவில்லை.

ஆனந்தவல்லியின் குரல் அரசியைத் தீண்டவே, “ஆதி... ஆதி...” ஏதோ ஒரு திக்கில் இருந்து அவளது குரல் மட்டும் வர, கூடவே, “ஆ... அம்மா...” அவளது தீனமான அலறலும் அவர்களைத் தீண்டியது.

“அரசி... எங்கே இருக்க... நான் வந்துட்டேன்...” இருட்டுக்குள் எதையும் உணர முடியாமல், குரல் வந்த திசையை கணக்கிட்டு செக்கியூரிட்டி ஆட்கள் பாய்ந்தோடினார்கள்.

தர்மனுக்கு அடிபட்டிருந்ததால் அவனால் அந்த அளவுக்கு வேகம் காட்ட முடியவில்லை. அமுதனுக்கோ, ஆனந்தியை அந்த இருட்டுக்குள் தனியாக விட்டுச் செல்ல மனமில்லை.

“அரசி... அரசி...” மீண்டுமாக ஆனந்தி அழைக்க,

இப்பொழுது அரசியின் வாயை வலுக்கட்டாயமாக தன் கரத்தால் அடைத்திருந்தான் ரமணன். “இந்த முறை நான் ஏமாற மாட்டேன்” அவன் அடிக்குரலில் அவளிடம் உரைக்க, குரல் கொடுக்க முடியாமல் அவன் கரத்தில் திணறிப் போனாள்.

சற்று நேரத்துக்கு முன்னர் அவளுக்கு என்ன நேர்ந்தது... எப்படி அவள் இங்கே வந்தாள் என்பது எல்லாம் அவள் நினைவிலேயே இல்லை. கேம்ப் ஃபயர் முடிந்து அனைவரும் கலைந்து சென்ற அந்த நேரத்தில், அவளும் தன் அறைக்குச் செல்லவே முயன்றாள்.

ஆனால்... திடுமென ஒரு விரல் சொடுக்கும் ஓசையை அவளது செவிகள் உணர, அவள் சுய உணர்வுக்கு வருகையில் ரமணனின் முன்னால் நின்றிருந்தாள்.

அதைப் பார்த்தவள், “நான் எப்படி இங்கே வந்தேன்? நீதான் என்னை ஏதோ பண்ணிட்ட. நான் போகிறேன்...” அவள் அங்கிருந்து அகல முயல, அவன் அதற்கு அனுமதிக்கவில்லை.

“உன் கழுத்தில் என் கையால் தாலி ஏறாமல் நீ இங்கிருந்து அசையவே முடியாது” அவன் சொல்ல, திடுக்கிட்டாள்.

அவளை கட்டாயப்படுத்தி தாலி கட்ட அவன் முயல, அவன் கரத்தில் இருந்து தாலியைப் பறித்தவள், இருட்டுக்குள் விசிறியடித்தாள். அவள் அப்படிச் செய்வாள் என்பதை எதிர்பாராத ரமணன், அவள் கன்னத்தில் ஓங்கி அறைய, அவளுக்கு பொறி கலங்கியது.

தன் கன்னம் பற்றிக்கொண்டு அவள் தள்ளாட, அவளை ஒரு கரத்தில் பிடித்துக் கொண்டு, மறு கரத்தால் டார்ச் அடித்து தாலியைத் தேடிக் கொண்டிருந்தான். அந்த நேரத்தில்தான் ஆனந்தவல்லியின் குரல் கேட்கவே, அவனது தேடலின் வேகம் அதிகரித்தது.

அவளது குரலுக்கு அரசி எதிர் குரல் கொடுக்கவே, தனது தேடலை விட்டுவிட்டு, அவளது வாயை அடைக்க முயன்றான். அவர்கள் நெருங்கி வந்துவிட்டதை உணர்ந்தவன், திடுமென தான் மறைத்து வைத்திருந்த துப்பாக்கியை எடுத்து அரசியின் நெற்றியில் வைக்கவே, அவர்களை நெருங்கி வந்து கண்டுபிடித்தவர்கள், செயலற்று நின்று விட்டார்கள்.

“சார்… இங்கே இருக்காங்க… கண்டு புடிச்சுட்டோம். அவன் கையில் துப்பாக்கி இருக்கு” செக்கியூரிட்டி ஆட்கள் சொல்ல, அவனை எப்படி நெருங்குவது என யோசித்தார்கள்.

ஆண்கள் அனைவரும் அவன் அருகே செல்ல முடியாமல் சற்று தூரத்திலே நின்றுவிட, நடக்கையில் காலில் இடறிய கையிற்றை அசட்டை செய்து அடியெடுத்து வைக்க முயன்ற ஆனந்தவல்லி, டார்ச் வெளிச்சத்தில் அது ஒரு தாலி எனக் கண்டவள், சட்டென நொடியில் குனிந்து அதை கரத்தில் எடுத்துக் கொண்டாள்.

எடுத்த வேகத்தில் அதை தர்மனின் கரத்தில் கொடுத்தவள், “தர்மா, எவ்வளவு சீக்கிரம் முடியுமோ, அவ்வளவு சீக்கிரம் இந்த தாலியை அவ கழுத்தில் கட்டிடுங்க…” அவனிடம் சொல்ல, தன் அத்தை மகளை அதிர்வாகப் பார்த்தான் அமுதன்.

“இல்லை… அதற்கு முன்னர் நான் செய்து முடிக்க வேண்டிய ஒரு செயல் பாக்கி இருக்கு. அவனை என் கரத்தால் கொல்ல வேண்டும்” அவன் சொல்ல,

“தர்மா… அவனை கொல்வது இரண்டாவது. முதலில் மூணு மணி ஆக முன்னாடி, அவ கழுத்தில் நீங்க தாலியைக் கட்டுங்க. நீங்க தாலி கட்டினால்தான் அவளுக்கு பழைய நினைவுகள் வரும்…” படபடத்தாள்.

கூடவே, அமுதனின் பக்கம் திரும்பியவள், “அமிழ்தன்… நீங்க அவனை விடாதீங்க. இதற்கெல்லாம் அவன்தான்

காரணம்… அவனைக் கொல்லுங்க” அவனிடம் உரைக்க, அவனுக்கு சுத்தமாக எதுவும் புரியவில்லை.

ஆனாலும், ஆபத்தில் இருக்கும் அரசியை காப்பாற்றுவது மட்டுமே முதல் வேலை என்பது புரிய, அவனை எப்படி நெருங்குவது என வேகமாக சிந்தித்தான். அவன் கையில் இருக்கும் துப்பாக்கி நிச்சயமாக மிரட்டியது எனச் சொன்னால் மிகையில்லை.

கத்தி, அருவாள் என்றால் கூட அவன் தங்களை நெருங்கி வந்துதான் எதையாவது செய்ய முடியும். ஆனால், இந்த துப்பாக்கி, எதிர்பாராத விதமாக வெடித்தாலே உயிருக்கு உத்திரவாதம் இல்லை என்கையில், அவனோ வெறி பிடித்த மனநிலையில் நின்றுகொண்டிருந்தான்.

அவன் கோபப்பட்டு எதையாவது செய்து வைத்தால், என்ன ஆவது என்று இருந்தது. ரமணன் சுற்றிலும் இருந்தவர்களைப் பார்த்தவன், “யாராவது கிட்டே வந்தால், எல்லாரையும் சுட்டுப் பொசுக்கிடுவேன். இங்கே ஒரு தாலி கீழே விழுந்துடுச்சு… முதல்ல அதை தேடித் தாங்க… ம்… ஆகட்டும்” அரசியின் நெற்றியில் துப்பாக்கியை வைத்து அழுத்தினான்.

“ஏய்… வேண்டாம்…” தர்மன் அலற,

அவனுக்கு அருகில் நின்ற அமுதனைப் பார்த்தவன், “இத்தனை ஜென்மங்களில் முதல் முறையாக உன்னை நேருக்கு நேராக சந்திக்கிறேன் அமிழ்தா…” ரமணன் சொல்ல, ஆனந்தவல்லியும் சரி, அவனும் சரி தன்னை அமிழ்தன் என அழைப்பதை கவனித்தவன் புருவம் நெரித்தான்.

அதே நேரம்… ஆனந்தி இருளுக்குள் சற்று மறைந்து, பதுங்கி செல்ல, அவன் பின்னால் அவள் வருகையில், சருகுகளின் ஓசையில், தனக்குப் பின்னால் யாரோ வருகிறார்கள் என்பதை உணர்ந்த அவனது கவனம்

பின்னால் போக, அந்த நொடியை அமுதன் சரியாக பயன்படுத்திக் கொண்டான்.

அவன்மேல் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்தவன், அவன் கரத்தில் இருந்த துப்பாக்கியைப் பறிக்க முயன்றான். அவனது செக்கியூரிட்டி ஆட்களும் அவர்களை நெருங்க, அவன் துப்பாக்கியின் விசையை அழுத்தவே, அதில் இருந்து பாய்ந்த தோட்டா ஒரு செக்கியூரிட்டியின் தோளில் பாய்ந்தது.

“ஆ… ஆ…” அவன் அலற,

நடக்கும் இழுபறியில் அவனிடமிருந்து விடுதலை அடைந்தாள் அரசி. அவளைக் கைபிடித்து இழுத்து வந்த ஆனந்தி, தர்மனின் அருகில் நிறுத்தி, “தர்மா… நமக்கு நேரமில்லை… முதலில் தாலியை இவள் கழுத்தில் கட்டுங்க…” அவள் சொல்லவே, அரசிக்கு அப்பொழுதும் அந்த நிகழ்வில் உடன்பாடு இல்லை.

“ஆதி… என்னடி இது? கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி அவன் செய்யப் பாத்ததுக்கும், இதுக்கும் என்ன வித்தியாசம்…?” அவள் சொல்லிக் கொண்டிருக்கையிலேயே, அடுத்த தோட்டா மற்றவனைப் பதம் பார்த்தது.

“அரசி… நான் உனக்கு கெட்டதை செய்வேனா? எல்லாம் நல்லபடியா முடியும், நீ சம்மதம் சொல்…” அவள் சொல்ல,

“தேவி…” தர்மன் அழைக்கவே, அவள் அடிமனதில் ஏதோ ஒருவித படபடப்பு, தனக்காக அங்கே உயிரைக் கொடுத்து மற்றவர்கள் போராட, அதற்குமேல் எதையும் யோசிக்காமல் தன் தலையை அசைத்து சம்மதம் சொல்ல, அடுத்த நிமிடம் அவள் கழுத்தில் அந்த தாலியைக் கட்டினான்.

அந்த நொடி… அவளுக்கு தன் முன்ஜென்மம் அனைத்தும் நினைவுக்கு வர, “தர்மா…” அழைத்தவள், “ஆனந்தி…” தோழியை இறுக அணைத்துக் கொண்டாள்.

அங்கே இருவர் காயம்பட்டிருக்க, இப்பொழுது அமுதன் மட்டும் தனியாக அவனிடம் போராடிக் கொண்டிருந்தான். அதைப் பார்த்த அரசி, “அவனை கொன்று போடுங்கள்…” தர்மனிடம் உரைக்க, அடுத்த நிமிடம் ரமணனின் அருகில் சென்றான்.

துப்பாக்கியைப் பிடித்திருந்த அவனது கரத்தை தன் காலால் மிதித்தவன், ஒரு வழியாக அவன் கரத்தில் இருந்து துப்பாக்கியைப் பிடுங்கி, தூர வீசினான். அமுதனும், அவனும் சேர்ந்து ரமணனைப் புரட்டிப் போட, இரு பெண்களும் ரசித்திருந்தார்கள்.

ரமணனும் சளைக்காமல் சண்டை போட, அவன் தற்காப்பு கலைகள் பயின்றவன் என்பது தெளிவாகத் தெரிந்தது. ஆனாலும் ஒரு கட்டத்தில் இருளுக்குள் தர்மனும், ரமணனும் உருள, யார் எந்தப் பக்கம் விழுந்தார்கள் என்றே தெரியவில்லை.

அமுதன் அங்கே செல்ல முயல, “சார்… அது மரண பள்ளம் சார்… போகாதீங்க” குண்டடி பட்ட செக்கியூரிட்டி தன் வலியையும் பொருட்படுத்தாமல் உரைத்தான்.

அதைக் கேட்ட அரசி, “தர்மா…” கதறியவள் ஓட முயல, அவளை அழுத்தமாகப் பற்றிக்கொண்ட ஆனந்தி,

“அவருக்கு எதுவும் ஆகாது… நீ போகாதே…” அவளைத் தடுத்தாள்.

அதே நேரம்… “என்னை யாராவது காப்பாத்துங்க… புதைகுழியில் விழுந்துவிட்டேன்” ரமணனின் அலறல் கேட்க, அமுதன் மெதுவாக அங்கே எட்டிப் பார்த்து, டார்ச்சை அடிக்க, தர்மன் ஒரு மரக்கிளையை பற்றிக்கொண்டு தொங்குவது தெரிந்தது.

“அமுதன்… என்னால் அதிக நேரம் தாக்குப்பிடிக்க முடியாது… கை வழுக்குது. கூடவே இது அடிபட்ட கை வேறு…” அவன் உரைக்க, வேகமாக அந்தப் பக்கம்

இறங்கியவன், திடனாக நின்று அவனது மறு கரத்தை கெட்டியாகப் பற்றிக் கொண்டான்.

அதே நேரம்... இருவரின் கண்களுக்குள்ளும் ஒரு போர்க்களமும், நேருக்கு நேராக ரத்தம் சொட்டச் சொட்ட நின்றுகொண்டிருந்த இருவரின் உருவமும் கண்ணுக்குத் தெரிய, ஒரே நேரத்தில் போரில் வீர மரணத்தை தழுவிய காட்சி தெரிய, இருவருமே சில நொடிகள் உறைந்து போனார்கள்.

“தர்மா...” அமுதன் அழைக்க, “அமிழ்தா...” தர்மன் பதில் குரல் கொடுத்தான். அதே நேரம்... ரமணனின் உதவிக்கான குரல் கேட்கவே, அந்தப் பக்கம் ஒளி பாய்ச்சியவன், கண்ணுக்கெட்டிய தூரம் வரைக்கும் எதையும் காணவில்லை.

கூடவே, “அமிழ்தா... கை வழுக்குகிறது...” தர்மன் உரைக்க, தனது இரண்டு கரத்தாலும் அவனை பற்றிக் கொண்டவன், டார்ச்சை மேலே தூக்கி எறிந்திருந்தான். இரு பெண்களும் உள்ளே வெளிச்சம் காட்ட, இருவரும் மேலே வந்தார்கள்.

அதன் பிறகு அங்கே ரமணனின் குரல் கேட்கவே இல்லை. மேலே வந்த தர்மனை அரசி தாவி அணைத்துக் கொள்ள, ஆனந்தி பார்வையை அவர்கள்மேல் இருந்து விலக்கிக் கொண்டாள்.

அமுதன் வேகமாக தன் செக்கியூரிட்டி ஆட்களின் அருகே சென்று, “உங்களுக்கு எதுவும் இல்லையே...” அவன் கேட்க,

“சார் எனக்கு தோள்பட்டையில்தான் குண்டு பாஞ்சிருக்கு. இவனுக்குதான் காலில் பட்டிருக்கு, அவனால் நடக்க முடியாது...” வலியில் சற்று முனகலாகவே உரைத்தான்.

“சரி அவனை கைத்தாங்கலா பிடிச்சுக்கலாம்...” அடுத்த அரைமணி நேரத்தில் அவர்கள் அனைவரும் ஹோட்டலில் இருந்தார்கள். அடிபட்டவர்களை மருத்துவமனைக்கு

அனுப்பியவன், தர்மா, அரசிக்கு தங்கள் ஹோட்டலின் ஒரு அறையை ஒதுக்கிக் கொடுத்தான்.

ரமணனைப் பற்றிய நினைப்போ, கவலையோ அங்கே யாருக்கும் இருக்கவில்லை. ஒரு மனிதன் ஏதோ ஒரு விதத்தில் தவறு செய்துவிட்டால் அவனை மன்னிக்கலாம், அவனுக்கு உதவலாம். ஆனால், தவறு செய்வதற்காகவே பிறப்பெடுக்கும் அவனை எப்படி மன்னிக்க?

சொல்லப்போனால் அவனது முடிவை, அவனே தேடிகொண்டான் என்றே சொல்லலாம்.

அவர்கள் அறைக்குச் செல்லும் முன்னர், தர்மனும், அமுதனும் ஒருவரை ஒருவர் தழுவிக் கொண்டார்கள். “காலையில் பெரியவர்களிடம் பேசிக் கொள்ளலாம், ரெஸ்ட் எடுங்க… உங்களுக்கு லைட்டா ஏதாவது சாப்பிட அனுப்பி வைக்கிறேன்” அவர்களை அனுப்பினான்.

அரசியோ, தோழியை தழுவிக் கொண்டவள், அவள் கன்னத்தில் அழுத்தமாக இதழ் பதித்தாள். “நீ மட்டும் இல்லன்னா…” அவள் உணர்ச்சிவசப்பட்டு எதையோ சொல்லப் போக, அவளது வாயை கரத்தால் அடைத்தவள்,

“நீ எதுவும் சொல்ல வேண்டாம். ஒரு ப்ரண்ட் என்ன செய்வாளோ அதைத்தான் நானும் செய்தேன். போ… அவரை கவனி…” நடந்த சம்பவங்களால் தர்மனுக்கு சற்று அடிபட்டிருந்தது.

அவர்கள் அனைவரும் செல்லவே… அவளை அழைத்துக்கொண்டு தன் அறைக்குச் சென்ற அமுதன், அலைபேசியை இயக்கி, அதில் இருந்த தன் அத்தையின் புகைப்படத்தை அவளிடம் காட்ட, அதைப் பார்த்தவள், இனிதாக அதிர்ந்தாள்.

“இது… இவங்க…?” அவள் திணற,

“உன்னோட அம்மா...” அவன் முடித்து வைக்க, பெற்ற தாயைப் பார்த்தவளின் கண்கள் இனிதாக கலங்கியது.

கூடவே... “அமிழ்தன்... உங்களுக்கு...” அவள் கேட்க, அவள் பழைய நினைவுகள் தனக்கு வந்துவிட்டதா என்பதைக் கேட்கிறாள் என்பது புரிய, “எனக்கும் நம் முன்ஜென்மம் ஞாபகம் வந்துவிட்டது ஆனந்தவல்லி” அவன் உரைக்க, அவள் முகத்தில் கோடி மத்தப்பூவின் ஒளி.

அப்படியே அவனை தாவி அணைத்துக்கொள்ள கைகள் இரண்டும் பரபரத்தது. அதை அடக்கியவள், “அமிழ்தன்... உங்களுக்கு கல்யாணம் ஆயிடுச்சா?” அவள் கேட்க, ‘இல்லை என தலை அசைத்தான்.

“அப்போ காதலி இருக்காளா...?” அவள் அடுத்த வினாவைத் தொடுக்க, சில நொடிகள் தாமதித்தவன், ‘ஆம்’என தலை அசைத்தான்.

அவன் அவ்வாறு தலை அசைக்கவே, நொடியில் அவள் முகம் வாட, அங்கிருந்து செல்ல முயன்றாள். அடுத்த நொடி, என்ன நடந்தது என அறியும் முன்பே, அவனது இறுகிய அணைப்புக்குள், அவனது முரட்டுத்தனமான இதழ் தீண்டலுக்குள் திணறிக் கொண்டிருந்தாள்.

அவள் இதழ்களை மொத்தமாக தனக்குள் வாங்கி சுவைத்தவன், அவள் இதழ்தேனைப் பருக, தேகம் முழுவதும் ரத்தம் சூடாகப் பாயும் உணர்வு. அவனை தடுக்கவெல்லாம் தோன்றாமல், அவன் சிகைக்குள் கரம் கோர்த்து, இன்னும் அழுத்தமாக அவன் இதழ்களை தன்னுடன் இறுக்கிக் கொண்டாள்.

தனக்கும் அவன்மேல் இருக்கும் ஆழமான நேசத்தை, பிரிவின் ஆற்றாமையை அந்த ஒற்றை முத்தத்தில் அவள் வெளிப்படுத்த, இன்னும் இன்னும் தன்னவளை கொள்ளையிடத் தவித்தான். ஜென்மங்கள் கடந்த அந்த நொடி... இருவரும் தங்கள் நேசத்தை ஒருவர் மற்றவருக்கு அறிவிக்க தவித்தார்கள்.

சில பல நிமிடங்கள் கடக்க, இருவருமே மூச்சு வாங்கிப் பிரிய, அவளைப் பிரிய முடியாதவனாக தன்னோடு சேர்த்து அணைத்துக் கொண்டான். எத்தனை ஜென்மங்கள் கடந்த அவர்களது இணைவு... ஒருவித மனநிறைவைக் கொடுத்தது.

அவளுக்கும் அவனை விட்டுப் பிரிந்து தன் அறைக்குச் செல்ல மனமில்லை, அவனுக்கும் அவளை அனுப்பிவிடும் எண்ணமில்லை. அவளுடனே இருக்க மனம் விரும்பியது. ஆனந்தியின் விஷயத்தை வீட்டிற்கு, தன் அத்தைக்குச் சொல்ல ஆசைப்பட்டான்.

ஆனால், இந்த நேரத்தில் சொல்லி, அவர்களது தூக்கத்தை கெடுக்க விரும்பாமல், காலையில் சொல்லிக் கொள்ளலாம் என விட்டுவிட்டான். இருவருக்குமே உறக்கம் பிடிக்காமல் போகவே, அவளை மொட்டைமாடி தோட்டத்துக்கு அழைத்துச் சென்றான்.

அங்கே சர்ப்ரைஸ் பார்ட்டி, கப்பிள்ஸ் ட்ரீட் கொடுக்க பிரத்தியேக இடம் இருக்கவே, அவளை அங்கே அழைத்துச் சென்றவன், அவளுடன் பேசிக் கொண்டிருந்தான். போரில் அவன் வீர மரணம் அடைந்த பிறகு, அவளும் உணவு உண்ணாமல் தன் உயிரை மாய்த்துக் கொண்டதை உரைக்க, அவள் கரத்தை கெட்டியாக பற்றிக் கொண்டான்.

அதே நிலையில்தான் தர்மன், அரசி தம்பதிகளும் இருக்க... தர்மனின் உடல்நிலை கருதி, அவனை ஓய்வெடுக்கச் சொல்லிக் கொண்டிருந்தாள். ஆனால், அவன் அவளுடன் பேசிகொண்டிருக்க விரும்பவே, இருவரும் தங்கள் காதல் கதையை பேசிக் கொண்டிருந்தார்கள்.

பொழுது புலரவே, முதல் வேலையாக தனது அத்தைக்கும், தன்னை பெற்றவர்களுக்கும் அழைத்து ஆதி(ஆனந்தி) கிடைத்துவிட்டாள் எனச் சொல்லவே, அடுத்த அரைமணி நேரத்தில் அவளைச் சுற்றி, அவளது பெற்றவர்கள், அவனது பெற்றவர்கள் என அனைவரும் இருந்தார்கள்.

“ஆதி…” அவளது தாய், அவளைக் கட்டிக்கொண்டு முத்தமழை பொழிய, அந்த பாசப் போராட்டத்தைப் பார்த்த அனைவருக்கும் கண்கள் கலங்கி, நெஞ்சம் நிறைந்தது.

ஆனந்தியின் கல்லூரி பேராசிரியர்களுக்கு ஒரு மாதிரி விஷயம் விளக்கப்பட, அவளை விட்டுவிட்டு, மற்றவர்கள் கிளம்பினார்கள். அரசியின் பெற்றவர்களுக்கு அலைபேசியில் அவர்களது திருமண விஷயம் தெரிவிக்கப்படவே, அவர்களை கிளம்பி வரச் சொன்னார்கள்.

ஏற்கனவே தர்மன் விஷயத்தை சொல்லியிருந்ததால், அவர்களுக்குப் பெரிதாக அதிர்ச்சி இல்லை. ஆனால், இப்படியும் நிகழ்வுகள் இருக்குமா என ஆச்சரியப் பட்டார்கள். கூடவே, நாடி ஜோதிடத்தில் நம்பிக்கையுள்ள அவளது பெற்றவர்களுக்கு,

ஏற்கனவே அவர்கள் அரசிக்கு நாடி ஜோதிடம் பார்த்த பொழுது, அவளது திருமணம் திடீர் திருமணமாக மட்டுமே இருக்கும் எனச் சொல்லியிருந்ததால், அப்பொழுதே அந்த சேதிக்கு அவர்கள் தயாராகிவிட்டார்கள் என்றே சொல்லலாம்.

அவர்களை கோவைக்கு அழைத்துச் சென்று, விமானத்தில் அழைத்துச் செல்வது என முடிவெடுத்தார்கள். கூடவே, ஆனந்தியின் விஷயத்தை, அவளை வளர்த்த பெற்றவர்களிடம் அலைபேசியில் தெரிவிக்க விரும்பவில்லை.

எனவே… அவர்களோடு சேர்த்து… அமுதனின் பெற்றவர்கள், அவனது அத்தை, மாமா அதாவது ஆனந்தியின் பெற்றவர்களோடு சென்னைக்கு விமானத்தில் பயணப்பட்டார்கள்.

அங்கே கல்பனாவின் காலிலேயே விழுந்துவிட்டார் ஆனந்தியை பெற்றவள். கல்பனாவும் கண்ணீர் வடிக்க,

அவரும் கண்ணீர் வடிக்க, சில பல நிமிடங்கள் அங்கே பேச்சுக்கே அனுமதியின்றி போனது.

கல்பனாவோ குருஜி சொன்ன விஷயம் நடந்துவிட்டதில் கலங்கித்தான் போனார். ஆனந்தியின்மேல் அவ்வளவு பாசம் வைக்காமல் போயிருந்தால் எதுவும் தெரிந்திருக்காது. ஆனால், அவருக்கு ஆனந்தி என்றால் உயிர் அப்படி இருக்கையில், அவளைப் பிரிவது என்றால் அவருக்கு எவ்வளவு வருத்தமாக இருக்கும்?

ரவிதான் அவரை சமாதானம் செய்தார். “உன் மகளை ஊட்டிக்கு திருமணம் செய்து கொடுத்திருப்பதாக நினைத்துக்கொள்” அவர் சொல்லி சமாதானம் செய்ய, கொஞ்சமாய் தெளிந்தார்.

அதைவிட, இன்னும் ஒரு ஆறுமாத படிப்பு அவளுக்கு பாக்கியிருந்ததால், அதை முடித்த பிறகே அவள் ஊட்டிக்கு பெற்றவர்களோடு செல்வது என முடிவானது.

அத்தோடு... படிப்பு முடிந்த கையோடு, அமுதனுக்கும், அவளுக்கும் திருமணம் செய்துதான் அனுப்புவேன் என கல்பனா சொல்ல, அந்த வளர்த்த தாயின் ஆசையை அனைவரும் மதித்தார்கள். காணாமல் போன குழந்தை கிடைத்துவிட்டதில் அவர்களுக்கு பெரும் சந்தோசம் என்பதால்,

இந்த சிறிதுகால பிரிவை அவர்கள் பெரிதாக எண்ணவில்லை. அதிலும் நினைத்த நேரம் அவளை வந்து சந்திக்க முடியும் என்கையில் வீணாக ஏன் கலங்க வேண்டும்?

பெரியவர்கள் மட்டுமே அனைத்தையும் பேசி முடிவெடுக்க, உடனடியாக தன்னவளை சொந்தம் கொள்ள முடியாது என்பதில் அமுதனுக்குதான் பெரும் வருத்தமாகப் போயிற்று.

அவர்களது தனிமையில் அவன் அதைச் சொல்லி புலம்ப, மெல்லியதாக சிரித்து வைத்தாள். தனது தவிப்பை கண்டுகொள்ளாமல் சிரித்து வைத்த அவளை போலி கோபத்தில் முறைத்தவன், “சத்ரியனாகவே இருந்திருக்கலாம்… காந்தர்வ மணமும் புரிந்திருக்கலாம்…” அலுப்பாக உரைத்தான்.

அதைக் கேட்டவள் இன்னும் அதிகமாக சிரிக்க, அவளை அருகே இழுத்தவன், அவள் இதழ்களை தண்டிக்க, அதற்கு விரும்பியே உடன்பட்டாள்.

அவளை விட்டு அவன் விலகவே, “இப்போ மட்டும் என்னவோ சும்மா இருப்பதாக நினைப்பா? இனிமேல் திருமணம் முடியும் வரைக்கும் என் ரூமுக்குள்ளே உங்களை வர விடவே போவதில்லை. வந்தால், கையும் வாயும் சும்மா இருக்குறதே கிடையாது…” அவள் போலியாக மிரட்டினாள்.

அவளது வார்த்தைகளுக்கு மாறாக, அவன் கையணைப்புக்குள் ஒடுங்கியவள், அவன் நெஞ்சில் சுகமாய் சாய்ந்து கொண்டாள். நிழலில் வாழ விரும்பிய வாழ்க்கையை, ஏங்கிய வாழ்க்கையை நிஜத்தில் வாழ்ந்து பார்க்க காத்துக் கொண்டிருந்தன அந்த இளம் ஜோடிகள்.

**நன்றி.**